இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு



# பாதுகாவலன்

## கிறிஸ்மஸ் சிறப்பு மலர்

20 12 2010

மலர் : 134 | இதழ் : 23 | பக்கம் : 16 | விலை : 25.00



ஏழ்மை அணிந்த
ஒருவாழ்வின் பரிணமிப்பு
இங்கே ஆரம்பம்.

இடம்பெயர்ந்து
இதயம் கனத்து
மனிதருக்கு ஒப்பாகி
சாவின் வலிசுமக்க
பிறர்வாழ
தயாராகிறது
இங்கொரு பலிப்பொருள்.

இதன்வழி
எங்கள் காலத்தின்
நெரிசல்களூடே
சுயநலம் விட்டு
ஏரோதுக்களின் கரங்களில்
நிமிர்ந்து
மனிதத்தை நேசிக்கும்
தெரிவு வேண்டும்.

சகாரா வெளிகளில்
முகாமிடும்
இந்த கூடாரம்
உமிழும் அனல்
இந்தக் குழந்தைக்கு
தெரிவதில்லை
இதில் தெரிவதெல்லாம்
மனிதத்தின் வரட்சியும்
மங்கலானஆன்மீக
வெறுமையும்
அதிகாரத்தின்
இயங்கியல் 'ஜனநாயகமுமே.'

### கிறிஸ்துவின் பிறப்பு வறுமை, எளிமை, துயரம் மத்தியில் தான்!

## யாழ் ஆயரின் நத்தார் செய்தி



மனிதனை விடுவிக்க,வாழ்வில் ஒளியேற்றிப் புதுப்பிக்க வரலாற்றில் ஆண்டவர் இயேசு பாலகனாகப் பிறந்ததை மீண்டுமொரு முறை நத்தார் தினமாக கொண்டாடுகிறோம். கொடிய போரின் சத்தங்கள் ஓய்ந்து அதனால் பாதிக்கப்பட்ட மக்கள் மீண்டும் தமது இல்லிடங்களுக்கும், கிராமங்களுக்கும் போய்க்கொண்டிருக்கும் இவ்வேளை, இயேசு பாலகனின் பிறப்பு, இவர்களின் துன்பியல் வாழ்வை எம் கண்முன் நிறுத்தி சிந்திக்க வைக்கிறது. அவரின் பிறப்பும் வறுமை, எளிமை, துயரம் மத்தியில்தான் நிகழ்ந்ததுவ. உலகில் ஒரு சாரார் எல்லா சுகபோகங்களையும் அனுபவிக்க, பெரும்பாலானோர் வறுமையிலும், வசதியற்ற நிலையிலும்தான் காலத்தைச் செலவிடுகின்றனர்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## மானிட நேய கிறிஸ்மஸ்
## நம்பிக்கைப் புத்தாண்டு வாழ்த்துக்கள்

# பாதுகாவலன்

## முடியுமா?

மீண்டுமொரு கிறிஸ்மஸ், வழக்கமான – மரபுகள் சார்ந்த ஆயத்தங்கள், ஆரவாரங்கள், நிகழ்ச்சி நிரல்களுடன் எம்முன்னே விரிகிறது.

கடவுளின் மனுவுரு ஏற்பு என்ற மாபெரும் "இறங்கிவருதல்" நிகழ்வை மீண்டும் மீண்டும் இந்த மனுக்குலத்திற்கு உணர்த்தவரும் இக்கிறிஸ்மஸ, மனிதர்களின் காயங்களை ஆற்றக்கூடிய முழு வலிமையும் முழுத் தகுதியும் பெற்ற கொண்டாட்டம் என்பதை, வேண்டாத பல திரைகளை விலக்கிக் காட்டுகிறது.

பசியினால் அழுத குழந்தையின் அழுகை வலிந்து நிறுத்தப்பட்டது போல, ஒரு போர் நிறுத்தப்பட்டிருக்கிறது. அழுகை நின்றுவிட்டாலும், அதன் ஆத்துமார்த்தமான விருப்பங்கள் – தேவைகள் – பசி – அதன் உரிமைக் குரல்கள் – இவை நிறுத்தப்படக்கூடியவையா என்ன? இதற்கான நிவாரணம் – தீர்வு இன்றி தொடர் துயரத்தில் தவிக்கிறது எமது தேசம் இன்று.

நாளை பேசவேண்டுமென்பதற்காக இன்று மௌனமாக இருக்கிறோம் என்ற கவிதை வரிகள் இக்காலத்திற்காக எழுதப்பட்டவை. அநீதி இழைக்கப்பட்டவர்களுக்கு நீதிகிடைக்க முன்வரும் தலைவர்களுக்கான ஒரு பஞ்சத்தை இப்போர் எமக்கு விட்டுச்சென்றிருக்கிறது. சர்வதேசத்தின் நீதியின் மட்டிலான மெத்தனப்போக்கு எம்மை ஆச்சரியப்படவைக்கிறது. தீமை செய்தவர்களுக்கு நிகழும் தீமையில் எம்மனம் இனம்புரியாத ஆத்ம திருப்திகொள்ளும் ஒரு செல்நெறி இன்று உருவாகியுள்ளது. இத்தகைய அக புற சூழலின் கைதிகளாக இருக்கும் எம்மை இயேசுவின் மனித அவதாரம் ஒரு ஆத்ம சோதனை செய்ய அழைப்புவிடுக்கிறது.

இந்தப்போர் ஏற்படுத்திய இராட்சதப் பிளவு ஒன்று உண்டு. அது பெரும்பான்மை – சிறுபான்மை என்பதல்ல. அல்லது வடக்கு, கிழக்கு, தெற்கு என்ற பூகோளம் சார்ந்த, அரசியல் சாயம் பூசிய பிரிவினையுமல்ல. அது போரால் பாதிக்கப்பட்டவர்கள் – போரால் பாதிக்கப்படாதவர்களென்ற – எம் சொந்த இனத்துக்குள் ஏற்பட்ட சுயநல கோடு பிரித்த பிளவே அது.

மனித நாகரீகம் காணாத, உலகை அதிர்ச்சியில் உறையச் செய்த கொடுமைகளை அனுபவித்தும், கண்கூடாகப் பார்த்தும, இழக்கக்கூடிய – இழக்கக்கூடாத அனைத்தையுமிழந்தும் நிர்க்கதியடைந்த வன்னிவாழ் மக்களுக்கு நாம் செய்தவை என்ன? எவ்வளவு? போதுமானவையா? என்ற ஈனக்குரல்கள் எங்கள் மனச்சாட்சியைத் தட்ட இக் கிறிஸ்மஸ் ஒரு பாலை வனத்தின் குரலாக ஓங்கி ஒலிக்கிறது.

போர் முடிவுற்று மீழ்குடியேற்றம் இடம்பெறத்தொடங்கியதிலிருந்து வன்னிப்பிரதேசம் வேறொரு உலகமாக இருந்தது. யாழ் குடாநாட்டில் இன்னொரு உலகமே. தென்பகுதியிலிருந்து புற்றீசல்கள் போல கிளம்பி வந்த சுற்றுலாப் பயணிகள், நடைபாதை வியாபாரிகள, மதுபானக் கடைகள, அவற்றின் முன் நெரிசலடையும் இளைய – முந்நாள் இளைய தலைமுறையினர், தென்னிந்தியாவின் சினிமா, சீரியல் நாடகங்களுள் புதைந்த மனிதர்கள, வழக்கமான பிறந்தநாள, கோவில் திருவிழாக்களின் ஆடம்பர மோகத்தில் திளைத்த கிறிஸ்தவர்களென்று ஒரு உலகம் இங்கு உருள, மறுபுறத்தில் வீட்டுக்கூரைகளின்றி தறப்பாள்களோடும், வார்ந்தோடும் மழை வெள்ளத்தில் நனைந்தும் உலர்ந்தும், கையில் பணமின்றி பசியோடும, இராணுவ முற்றுகைக்குள் நித்தம் பீதியோடும் – இவற்றுக்கு அப்பால் இழந்த உறவுகளை நினைக்கும்போதெல்லாம் பீறிடும் தாங்கமுடியாத மனவலிச் சுமைகளோடும, சுடுகாடுகளையே வெறித்துப்பார்க்கும் ஒரு மக்கள் கூட்டமாக, எங்களின் பிரதி விம்பங்களாக இன்னொரு உலகம்.

இந்தப் பிளவைச் சீர்செய்யக்கூடிய ஒரே மருந்து – வழி, மாபெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியாகிய "இயேசுவின் மானிட வருகைக் கொண்டாட்டமே".

கடவுளின் "இறங்கிவருதல்" எங்களின் சுயநல சுகங்களைவிட்டுக் கீழிறங்கி மானிடத்தின் துயரைப் பகிரும் முதன்மையான அழைப்பை விடுக்கிறது.

பாதைதுறப்பு, சுதந்திர நடமாட்டம, இயல்பு வாழ்வு, தடைகளுக்கு அனுமதி என்ற புதிய காட்டாற்று வெள்ளத்தினுள்ளே, பாதிப்புற்ற மனிதர்களை மறந்திடாதிருக்க இக் கிறிஸ்மஸ் எங்களை எட்டுகிறது.

உரிமையாளரின் மேசையிலிருந்து விழும் சிறுதுண்டுகளைக் கொடுத்து மனதைத் தேற்றிக்கொள்ள வேண்டாம். உண்மையான சகோதர – கிறிஸ்தவ மனநிலையுடன் பகிரவாருங்கள் எனக்கேட்கிறது இப்புனித காலம்.

முடியுமா?.....

ஆசிரியர்

## இலங்கை அப்போஸ்தலர் ஜோசப் வாஸ்

18ம் பகுதி

(நவாலியூர் நாயகி)

கார்வாலோ அடிகளைக் கண்டியில் விட்டுவிட்டு
கால் நடையாகக் கொழும்பு வந்தார் வாஸ் அடிகள்
மூவாயிரத்துக்கும் அதிகமான மக்களை
குறுகிய காலத்தில் திருமறைக்குத் திருப்பினார்

களனிகங்கை வழியாக சீத்தாவாக்கை வந்த அவர்
ஆலயத்தைச் சென்றடைந்து கடவுளுக்கு நன்றி சொன்னார்
முற்றாக மறைப்பணியில் ஈடுபட்ட வேளையில்
கண்டியில் கலாபனை தொடங்கியதை அறிந்தார்

சல்வாலோ அடிகள் துரத்தப்பட்ட சேதியும்
ஆலயங்கள் பல தாக்கப்பட்ட சேதியும்
நோயாளர் இல்லம் தாக்கப்பட்ட சேதியும்
வாஸ் அடிகள் கேள்வியுற்று அதிர்ச்சிக்குள்ளானார்



கொடுமைகளைச் செய்த சிங்களக் கனவான்
புற்றுநோய் வந்து பெரிதும் வருந்தினார்
தவறுக்காய் வருந்தியவன் செபத்தால் குணமடைந்து
மீண்டும் குருக்களைப் பணிசெய்ய அனுமதித்தான்

வாஸ் அடிகள் உடல் நிலை பாதிக்கப்பட்டபோதும்
ஐந்து மாதத்தில் ஆலயத்தை கட்டினார்
குருக்களின் இல்லமும் வைத்திய சாவடியும்
கட்டி முடித்து மறைப்பணியைத் தொடங்கினார்.

(தொடரும்)

## வள(னா)ர் பப்பா பதில்கள்

1. **கேள்வி:** அன்புள்ள பப்பா ! முத்.யோசவ்வாசும் ஆங்கிலேயர்களும் இலங்கைக்கு வந்திராவிட்டால் நாம் எல்லோரும் கல்வின் மதத்தவர்களாகவோ இந்துக்களாகவோ இருந்திருப்போம் என்பது உண்மையா?

**வசந்தி, சாவகச்சேரி**

**பதில்:** இலங்கைத் திருச்சபைக்கு யோசவ்வாசும் ஆங்கிலேயர்களும் செய்த பணிகளை குறைத்து மதிப்பிடமுடியாது. எனினும் அவர்கள் வந்திராவிட்டாலும் ஒல்லாந்தரின் படைகளை கொண்டே ஆவியானவர் விசுவாசத்தை காக்க வல்லவர்.

2. **கேள்வி:** வளனாரே ! யாழ்ப்பாணம் ரெயில்வே ஸ்ரேஷனில் சில குடும்பங்கள் தாம் 30 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்ததாக உறுதிப்படுத்தி மீள்குடியமர முயற்சிக்கின்றனரே?

**தினேஷ், சுன்னாகம**

**பதில்:** யாழ்ப்பாணம் றெயில்வே ஸ்ரேஷனில் தண்டவாளங்கள் இருந்ததையே உறுதிப்படுத்தமுடியாதபடி அது சீரழிந்துபோய் கிடக்கிறது.

3. **கேள்வி:** அன்புடன் வளனாரே ! திருவருகைக் காலத்தில் பட்டமரத்தில் ஏன் சுட்டிகள் ஏற்றப்படுகின்றன?

**கலிஸ்ரஸ், யாழ்ப்பாணம்**

**பதில்:** பச்சைமரத்தில் ஏற்றினாலும் நான்கு வாரம் கழிய அது பட்டமரமாகும் என்பதால் தான்.

4. **கேள்வி:** வளனாருக்கு ! "கருதினால்"கள் எல்லோரும் புதிய திருத்தந்தையை தெரிவுசெய்வதற்கு தகுதியுடையவர்கள் அல்லவா?

**மேரி, புங்குடுதீவு**

**பதில்:** அப்படி நீர் "கருதினால்" அது தவறானது. 80வயதுக்கு உட்பட்டவர்கள் மட்டுமே திருத்தந்தையின் தெரிவுக்கு வாக்களிக்க தகுதியுடையவர்கள்.

5. **கேள்வி:** வளனாரே ! தேசிய கீதத்தை சிங்கள மொழியில் மட்டுமே பாட வேண்டும் என்றொரு கருத்து வெளிவந்ததை பத்திரிகையில் படித்தேன். உமது கருத்து என்ன?

**ஆரோக்கியநாதர், உரும்பிராய்**

**பதில்:** தேசப்பற்றுக்கு உணர்வு தேவையில்லை என்று அவர்கள் கருதுகிறார்கள் போலும்!

6. **கேள்வி:** அன்புள்ள வளனாரே ! ஒளிவிழா கலைநிகழ்வுகளில் சினிமா மெட்டுப் பாடல்களுக்கு நடனமாடுகிறார்களே?

**மேரி, கிளி.**

**பதில்:** அவ்வாறு ஆடினால் அது நட்சத்திரங்களின் கலைவிழாவாகி பின் அமிதாப்பச்சனைத்தான் சிறப்பு விருந்தினராக அழைக்க நேரிடும். பக்தி உணர்வுப்பாடல்களே அர்த்தமுள்ள ஒளிவிழாவுக்கு மெருகூட்டும்

7. **கேள்வி:** வளனாரே ! 0/L பரீட்சை எழுதும் மாணவர்களுக்கு என்ன அறிவுரை கூறலாம்?

**கமலினி, நெடுந்தீவு**

**பதில்:** நன்றாக பரீட்சை எழுதும்படி!

8. **கேள்வி:** வளனாரே ! தியேட்டருக்கு எந்திரன் பார்க்கப் போகலாமா?

**ரவிகரன், ஆனைக்கோட்டை**

**பதில்:** ஏதோ விண்வெளிக்கு சந்திரன் பார்க்கப்போவது போல கேட்கிறீர். எந்திரனை அதன் தொழிநுட்பத்திற்கும் பிரமாண்டத்திற்குமாக பார்க்கலாம்.

9. **கேள்வி:** அன்புடன் வளனாருக்கு ! படையினரும் ஒளிவிழா கொண்டாடுகிறார்களே?

**சூசைதாசன், யாழ்ப்பாணம**

**பதில்:** சிங்கமும் ஒருநாள் வைக்கோல் தின்னும் என்பது இதுதானோ?

# தெய்வம் தேடிய மனிதத்தை நாட

அருட்பணி மா. ரேஜில் இராசநாயகம்

**"மனித இயல்புக்கு வெளியே மீட்பு இல்லை"**

கிறிஸ்து உண்மையில் அடிப்படையான மனித இயல்பைக் கொண்டிருந்தார் என்பது மீட்பில் நாம் கொண்டுள்ள விசுவாசத்தின் மூலப்பொருளாக இருக்கின்றது. எமது மீட்பு என்னும் மறை பொருளுக்கு கிறிஸ்துவின் மனித இயல்பில் தான் உள்ளார்ந்த அர்த்தமுள்ளது. எமது சொந்த மனித இயல்பை எந்த அளவுக்கு உணர்ந்துள்ளோம் என்பது அதில் தான் தங்கியுள்ளது. மனிதராக, முழு மனிதராக இருப்பது ஓர் ஆசீர்வாதமானால் அதன் உண்மையையும் அதன் மாபெரும் மதிப்பையும் நாம் முதலில் நம்ப வேண்டும். டானியல் ஓ லியறி என்னும் இறையியல் வல்லுனர் "மனித இயல்புக்கு வெளியே மீட்பு இல்லை" என்று ஆணித்தரமாகக் கூறுகிறார். இயேசுவினது சொந்த மனித இயல்பின் திண்மையும் ஆழமும் பலருக்கு வியப்பூட்டின. அவர் உண்டு குடித்ததால் அவரைப் பெருந் தீனிக்காரன் என்றார்கள். அவரது முதற் புதுமை ஒரு திருமணத்தின்போது திராட்சை ரசம் தீர்ந்து போனதால் மணமக்களுக்கு ஏற்பட இருந்த அவமானத்தை தீர்க்கும் பொருட்டு தண்ணீரை திராட்சை இரசமாகச் செய்ததாகும். அவர் துக்கம், பொறுமையின்மை, அச்சம், ஏமாற்றம் போன்றவற்றை உணர்ந்தவர். தமக்கு ஆண்களும் பெண்களுமான நண்பர்களின் தோழமை தேவை என அவர் உணர்ந்திருந்தார். உபவாசம், தனிமையுணர்வு என்பவற்றால் பலவீனப்பட்டிருந்த வேளையில் (சோதனையை எதிர்த்து நிற்பதற்கு இயலாத மிக மோசமான நிலையில்) அவர் உண்மையாக சோதிக்கப்பட்டார்.

அவரது அடிப்படையான மனித இயல்பினால் அவரது இரக்கம், கருணை, துக்கம், ஏழைகளுடனான ஒருமைப்பாடு ஆகியவற்றால் மக்கள் அவர்பால் ஈர்க்கப்பட்டனர்.

**"உள்ளதை உள்ளபடியே..."**

மக்கள் எம்பால் ஈர்க்கப்படுவதற்கு எமது திருத்தமான கோட்பாடோ எமது அறமுறைகளின் வலுவோ காரணமல்ல. மாறாக, பிறரோடு ஒத்துணர்வுடையவர்களாய் இருக்கக்கூடியவர்களாய் இருப்பதுதான் காரணம். எமது பல்வேறு தாக்கங்களுக்குட்பட்ட நிலை எமது உள்ளங்களில் உறைந்திருந்து கசப்பான எமது சொந்தப் போராட்டங்களை நடத்த உதவுகின்றது. எமது சொந்த துன்ப துயரங்கள் எம் கண்களில் கண்ணீரை வருவிக்கின்றன. வழிகாட்டிகளோ ஆயர்களோ இல்லாமல் தடுமாறும் மக்களைக் கண்டு எம் உள்ளத்தில் இரக்கம் பிறக்கிறது. இவ்வாறு தான் இறைவன் எம் மூலமாக தம்மை வெளிப்படுத்த முடியும். எமது தாக்கங்களுக்கு உட்பட்ட நிலையை நாம் வெளிப்படுத்த அஞ்சுவதன் மூலம் நாம் தன்னிறைவுடையவர்களாகக் காட்சியளிக்க விரும்புகிறோம். இது அகந்தையும போலித்தனமுமாகும். எமக்கு நெடுங்காலத்துக்கு முன்னரே இயேசு ஏமாற்றங்களையும், இழப்புகளையும் சமாளிக்க வேண்டியிருந்தது என்பதை நாம் அறிந்திருந்தால் மட்டுமே எம சொந்த ஏமாற்றங்கள், இழப்புகள் ஓயாது எம்மைச் சுற்றி வரும் தனிமையுணர்வு ஆகியவற்றை எம்மால் சமாளிக்க முடியும். வாழ்வாலும் போதனையாலும் மக்கள் உணர்வும் ஊக்கமும் பெறுகிறார்களெனில் அதற்குக் காரணம் எம் நடைமுறைகளின் போது எமது சொந்தத் தேடல்கள், ஐயங்கள். போராட்டம் ஆகியவற்றை நாம் வெளிப்படுத்தத் துணிகின்றமையேயாகும்.



**மக்கள் மனதைக் கவர்ந்த மனிதம்**

மறைந்த கருதினால் ஹியூம் மரணம் வரையுள்ள யாத்திரையை சதா ஆய்வு செய்யும் ஒருவராக எப்போதும் தம்மைக் காட்டிக் கொண்டார். இயேசு தமது மூன்று சீடர்களும் தமது உருமாற்றத்தை மட்டுமல்ல, தமது மரணவஸ்தையையும் காணவேண்டுமென்று விரும்பினார். பிழையின்மையும், கடும் தன்னடக்கமும் மக்களைக் கவரக்கூடுமானால் மக்கள் பரிசேயரைத்தான் நேசித்திருப்பார்கள், இயேசுவை அல்ல. அவர்கள் துல்லியமாகக் கண்டது இயேசுவின் அன்பையும், கருணையையும், பாடுகளையுமே. பரிசேய வேதபாரகருடைய உணர்ச்சியற்ற, தூரத்திலுள்ள உயிரற்ற மதப்பற்று இதற்கு மாறாயிருந்தது.

**மனிதத்தின் அடித்தளத்திற்குப் போகும் போதுதான்...**

டானியல் ஓ லியறி இவ்வாறு கூறுகிறார்; "இறைவனது மாபெரும் வல்லமை இயேசுவின் மனித இயல்பில் தங்கியிருப்பதால் எம்மனைவரது மனித இயல்பில், தங்கியுள்ளது. இந்த உண்மை தெளிவற்றுப் போனால் இறைவனது தற்கொடையின் உண்மையான தோற்றம் தெளிவற்றுப் போகும். அநேக தடவைகளில் நாம் எமது விருப்பத்துக்கு மாறாக தாக்கங்களுக்கு உள்ளாகும் நிலையில், வேதனையின் நடுவில் இருக்கும்போதுதான் மாற்ற முடியாத, வியப்புக்குரிய வெளிப்பாட்டின் அவசியத்தை விளங்கிக்கொள்ளத் தொடங்குகிறோம்"

இயேசு சபைக் குருவும் கவிஞருமான ஜெராட் மான்லி ஹொப்கின்ஸ் "பயங்கரமான ஈரேழ்வரிப்பாக்கள்" என்னும் தமது கவிதைத் தொகுதியில் தமது மனிதத்தன்மையை ஒழிவு மறைவின்றி ஆராய்கிறார். சற்று மகிழ்ச்சியான காட்சியில் படைப்பின் வியத்தகு அழகில் இறைவனது மேதகைமையைக் காண்கிறார்.

"இறைவனின் மேதகைமையால் பூமி நிறைந்துள்ளது" இவர் சில வேளைகளில் தமது தியாகத்தின் சுமையால் அமுக்கப்படுகிறார். மனத்துறவு ஒரு வாக்குத்தத்தம் ஆனால், அது ஒரு தியாகமாகவும் உணரப்படுகிறது.

**போராட்டம்**

அழைத்தலுக்கு அவர் அளித்த பதிலால் திருநிலைப்படுத்தப்பட்ட அவரது வாழ்வு, அன்பான ஒரு கடவுள் மீது விசுவாசத்தை தட்டுத்தடங்கலின்றி ஏற்றுக் கொண்ட ஒன்றல்ல; அவர் அவநம்பிக்கையோடு போராடுகிறார். சில சமயங்களில் இறைவன் அவரது பாவநிலையிலிருந்து அவரை சுத்திகரிக்கும் ஒரு பயங்கரமான சிங்கம் போல் அவர் இறைவனை எதிர்கொள்ளுகிறார். இப்போராட்டம் கடுமையானது, வேதனை நிறைந்தது. ஈற்றில் அவரது நன்மைக்காக இறைவன் அவரை ஆட்கொள்ளுகிறார். ஆனால், இந்த இறுதி சரணாகதிக்கு இட்டுச் செல்லும் பயணம் கடுந்துயரமும், ஐயமும், இருளும் நிறைந்தது.

**எமது நம்பகத்தன்மை வெளிப்படுவது எப்போது?**

மற்றவர்கள் இறைவனைக் கண்டுபிடிக்க உதவமுயலும் அதே நேரத்தில் கசப்பும் வேதனையும் நிறைந்த இறைவனுடனான இந்தச் சந்திப்பை வெளிப்படுத்தப் பின் வாங்குகிறோம். இயேசுநாதர் தாமே தந்தையிடம் கடைசி முடிவை விட்டுவிட்டாலும், தமது பாடுகளை தன் முனைப் பழிந்த பொறுமையுடன் ஏற்றுக் கொள்ளவில்லை. "ஏன் என்னைக் கைவிட்டீர்?" என்று தந்தையை நோக்கிக் கதறும் அளவுக்கு அவர் இருள்மயமான வேதனையில் மூழ்குகிறார். ஹொப்கின்ஸின் அனுபவம் கிறிஸ்துவின் அனுபவத்தின் எதிரொலியாகின்றது. நாம் தாக்கங்களுக்கு உள்ளாகும் நிலையை வெட்கப்படாமல் வெளிப்படுத்துவோமானால் இன்னும் அதிகமான மக்கள் எமது கபடின்மையையும் போலியற்ற தன்மையையும் நம்புவார்கள்.

"இயேசு தம் கைகளால் உழைத்தார். மனித உள்ளத்தோடு சிந்தித்தார். மனிதராகவே செயலாற்றினார். மனித உள்ளத்தோடு நேசித்தார்" என்று "இன்றைய உலகில் திருச்சபை" (Gaudium et spes vat.2) கூறுகிறது.

**இறை இயல்பைத் தொடும் மனிதம்**

முழுமையாக உணரப்பட்ட மனித இயல்பே ஈற்றில் இறை இயல்பைத் தொடுவது என்பதை புரிந்து கொள்வதற்கு உதவுகின்றது. திருத்தந்தை 2ம் ஜோண் பவுல் மேலும்

"இன்று உலகுக்குத் தேவைப்படுவது நற்செய்திப் பணியாளர்கள். இவர்கள் மனித இயல்பில் நிபுணர்களாகவும், இன்றைய ஆண்கள் பெண்களின் உள்ளத்தை ஆழமாக உணர்ந்து, அவர்களுடைய சுகதுக்கங்கள், நம்பிக்கைகள் துயரங்களில் பங்குகொள்கின்றவர்களாகவும் அதே வேளையில் இறைவனிடம் ஆழ்ந்த அன்புகொண்ட காட்சித் தியானிகளாகவும் இருப்பதவசியம்" என்று கூறுகின்றார்.

**பகிரச் சென்ற மரியாள்**

கருதினால் கார்லோ மரியா மார்ட்டீனி என்னும் திருநூல் அறிஞர் மரியா எலிசபெத்தை சந்திக்கச் சென்றது அவளுக்கு உதவி செய்வதற்காக மட்டும் அல்ல. தான் கருவுற்றிருக்கும் இக்கட்டான நிலையை அவளிடம் பகிர்ந்து கொள்வதற்குமாகும் என்று கூறுகிறார். அவளது குழப்ப நிலையில் நம்பிக்கையூட்ட யாராவது தேவைப்பட்டனர். இத்தகைய ஒரு விளக்கம் மரியாவை எமக்கு இன்னும் அணுகக்கூடியவராக்குகின்றது. எமது தாக்கங்களுக்குட்படும் நிலையில் எமக்கு இறைவனும் தேவை, பிறரும் தேவை.

# பாலகன் யேசுவின் பிறப்பின் மகிழ்ச்சியை எம் உள்ளங்களில் கொண்டாடுவோம்!

ஆண்டுதோறும் கிறிஸ்து பிறப்பு விழா அல்லது கிறிஸ்மஸ் என்றதும் எமக்கு பெரிய மகிழ்ச்சியும், கொண்டாட்டமும் தான். எந்தளவுக்கு எம்மால் கொண்டாட முடியுமோ அந்தளவுக்கு நாம் இந்த விழாவை மிகச் சிறப்பாகக் கொண்டாடுவோம். வீடுகள் தொடங்கி வர்த்தக நிலையங்கள் வரை கண்கவர் மின் விளக்குகள், சோடனைகள், அலங்காரங்கள், புத்தாடைகள், அன்பளிப்புகள், தேவாலயமெங்கும் புதிய வடிவங்களில் பாலன் கொட்டில்கள், கிறிஸ்மஸ் மரங்கள் என எமது ஆயத்தங்களும், ஆரவாரங்களும் அப்பப்பா... சொல்லவும் வேண்டுமோ?...

இவ்வாறு ஒவ்வொரு வருடமும் ஆலயங்களிலும், வீடுகளிலும் உள்ள பாலன் கொட்டில்களை மட்டுமே அலங்கரித்து அங்கே யேசு பாலன் பிறப்பை கொண்டாட ஆயத்தப்படுத்தும் நாம் ஒருமுறையாவது எம் உள்ளங்களில் பாலன் பிறப்பை கொண்டாட ஆயத்தம் செய்திருக்கிறோமா?.. உண்மையிலேயே யேசு விரும்புவது எமது உள்ளங்களை தான் என்பதை ஏன் நாம் இன்னும் உணராமல் இருக்கின்றோம்? ஏனெனில், கிறிஸ்து பிறப்பு விழா திருச்சபைக்கு மட்டுமல்ல ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் அது விழா, உள்ளத்தில் கொண்டாடி மகிழ வேண்டிய உன்னதமான ஒரு பெருவிழா. இவ்வளவு காலமும் ஆலயங்களையும், வீடுகளையும் அலங்கரித்தது போதும், இந்த முறை உள்ளங்களை அலங்கரிப்போம். அங்கே யேசு பாலனை பிறக்கச் செய்வோம். நத்தாரின் மகிழ்ச்சியை உள்ளங்களில் கொண்டாடுவோம். அப்போது தான் கிறிஸ்து பிறப்பு விழாவுக்கும் ஒரு அர்த்தம் கிடைக்கும்.

உள்ளங்களை அலங்கரிப்பது என்று கூறும்போது நமக்கு யோசனை வரும், உள்ளத்தில் எப்படி பட்டாசு கொளுத்துவது?...எங்கே பலூன் கட்டுவது?.. எந்தப் பக்கம் பாலன் குடில் அமைப்பது?..என்று. ஆம், எம்மில் பலர் தமக்கு திருமணமாகி குழந்தை கிடைக்க இருக்கும் நேரங்களில் நிறைய நேர்த்திகள் வைப்பார்கள். இந்த குழந்தை நல்லபடியாக பிறந்தால் இனி நான் மதுவை தொடமாட்டேன், சிகரட் பிடிக்க மாட்டேன், பொய் சொல்ல மாட்டேன், களவெடுக்க மாட்டேன், தினமும் குடும்ப செபமாலை செபிப்பேன். வெள்ளிக்கிழமைகளில் மாமிசம் சாப்பிடமாட்டேன்...இப்படி ஏராளம். எமது குடும்பத்திற்குள் வரும் ஒரு புதிய உறவுக்கு இவ்வளவு செய்வோமானால், அகிலத்திற்குள் வரும் ஆண்டவன் யேசுவுக்காய் நாம் எவ்வளவு செய்ய வேண்டும்?...யேசு எமக்காக பிறந்தவர், எம்மை பாவ அடிமைத்தனங்களிலிருந்து மீட்க பிறந்தவர். இன்னும் சிறப்பாக சொல்வோமேயானால், நாம் வாழ தன் வாழ்வை அர்ப்பணிக்க பிறந்தவர். அவ்வாறானால் நாம் எந்தளவுக்கு எம் உள்ளங்களை ஆயத்தப்படுத்த வேண்டும் என்று சிந்திக்க வேண்டும்.

இன்று, உலகில் எல்லாமே மிக வேகமாக நவீனமயமாகிக் கொண்டிருக்கும் இந்த காலப்பகுதியில் வாழும் நாமும் அந்த இயந்திர மயமான சூழலுக்கு ஏற்ப மாறி அதற்குள் எம்மை பழக்கப்படுத்திக் கொள்கின்றோம். இது காலத்தின் கட்டாயம் தான், இருந்தாலும் அங்கே மனித நேயங்கள் மறக்கப்படுவதுதான் வேதனைக்குரியது. இந்த நிலையில் இற்றைக்கு இரண்டாயிரமாண்டுகளுக்கு முன் யேசு பிறந்த சூழலையும் இன்று நாம் வாழும் இன்றைய சூழலையும் ஒப்பிட்டு பார்ப்பது மிகவும் பொருத்தமாக இருக்கும். அன்று ஆண்டவன் யேசு

(தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க)

# மனிதரில் இறைவன்

**அன்பான சகோதரர்களே!**


நாம் எப்போதாவது கடவுளை கண்டதுண்டா? கண்டதில்லை ஆனால் அவர் இவ்வுலகில் இருக்கிறார் என நம்புகின்றோம். எவ்வாறு இறைவன் இவ்வுலகில் இருக்கிறார் என காண்கின்றோமென்றால் எம் அயலவர் வடிவில் இறைவனை காண்கின்றோம், நம்புகின்றோம். இதனை அதாவது பிறர் வடிவில் இறைவன் இருப்பதை சவுலின் அழைப்பின்போது இறைவன் மிகத் தெளிவாக வெளிப்படுத்துகின்றார் எவ்வாறெனில் சவுலிடம் ஆண்டவர் தோன்றி "சவுலே சவுலே, நீ ஏன் என்னை துன்புறுத்துகிறாய்" என்று கேட்டபோது சவுல் "ஆண்டவரே நீர் யார்?" என வினவுகிறார். அப்போது இறைவன் "நீ துன்புறுத்தும் இறைவன் நானே" என கூறுகிறார். இவ்வார்த்தைகள் மூலம் இறைவன் தான் அயலவர் வடிவில் இருப்பதை மிக ஆழமாக வெளிப்படுத்துகிறார்.

ஆனால் இன்று நாம் அயலவரில் இறைவனை காணாது எம் எதிரிகளாகவே நினைத்து, அவர்களுடன் உறவாடுகின்றோம். அற்பகாரியங்களிலும் அயலவனை தீயவனாகவே நினைத்து செயற்படுகிறோம். இவற்றிலும் மேலாக இன்று கொலை, கொள்ளை என்பவற்றால் எம் அயலவர் வடிவில் விளங்கும் இறைவனையே கொலை செய்கிறோம், கொள்ளையிடுகிறோம். ஒருமுறை புனித ஜடன் தனக்கு வழங்கப்பட்ட குதிரையை ஒரு ஏழைக்கு கொடுத்தார். அதைப்பற்றி அரசன் வினவியபோது "அரசே ஒரு குதிரைக் குட்டி கடவுளின் மகனை விட உயர்வானதாக தோன்றியது ஏன்?" எனக் கேட்கிறார். இதன் மூலம் ஜடன் பிற மனிதரில் இறைவனை காண்கிறார். எனவே எம் அயலவரை துன்புறுத்தும் போது இறைவனையே துன்புறுத்துகிறோம். என்பதையுணர்ந்து இக் கிறிஸ்து பிறப்புக் காலத்தில் இறைவனை மனிதரில் கண்டு, "உன்னை அன்பு கூர்வது போல உன் அயலானையும் நேசி" என்ற இறைவனின் அன்புக் கட்டளையை எம் வாழ்வில் மெய்யாக்கி, வாழ்வோமானால இயேசு எம்மண்ணில் மட்டுமல்ல, எம் உள்ளங்களிலும் பிறப்பார். என்பதை உணர்வோம்.

சி. அன்ரனி சயந்தன், தரம் -12
புனித மாட்டீனார் குருமடம், யாழ்ப்பாணம்.

# வன்னி நாட்டில் குடியிருப்போர் மேல் சுடர் ஒளி உதிக்கட்டும்

அருட்பணி. அ. யோம்ஸ் நாதன்



வேதனையும், துன்பமும், பாரிய இடம்பெயர்வுகளும் நாளாந்த அனுபவமாகி, சொந்த உடன் பிறப்புக்களையும் உடைமைகளையும் பறிகொடுத்து, வாழவின் நம்பிக்கையினை தொலைத்து நடைபிணங்களாக போரின் காயங்களை உடலிலும் உள்ளத்திலும் சுமந்து நிர்க்கதியாக வாழ்ந்து கொண்டிருந்த வன்னி வாழ் மக்கள் வாழ்வில் இறைவாக்கினர் எசாயாவின் எதிர்வு கூறல் ஓரளவு யதார்த்தமாகின்றது.

சாவே இவர்கள் வாழ்வில் நிஜமாகி நீதியும் நியாயமும் பொய்மையாகிய ஓர் துன்பகரமான வாழ்ச்சூழலிலிருந்து படிப்படியாக மக்கள் தங்கள் சொந்த இடங்களில் மீளவும் குடியமர்ந்து, இறைநம்பிக்கை, தன்னம்பிக்கை ஆகிய அடிப்படை அத்திவாரங்களில் வாழ்வை கட்டத்தொடங்கியுள்ளார்கள்.

பனையில் விழுந்தவனை மாடு ஏறி மிதித்தது போல இருக்க இல்லிட மற்று, அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் வாழ்ந்து கொண்டிருந்த மக்கள் மேல் இப்போது அடாது கொட்டித்தீர்க்கும் மழையும் மக்களை மேலும் துன்பத்துக்குள்ளாக்குகிறது.

இவ்வாறான வாழ்வியல துன்பச் சூழலில் இருந்து கொண்டு வன்னி வாழ் மக்கள் இயேசு பாலனின் பிறப்பை எதிர்பார்த்துக்கொண்டு இருக்கிறார்கள்.

உண்மையில் போரின் நேரடியான இழப்புக்களையும் தாக்கங்களையும் அனுபவித்து அதனை மறக்க முடியாத ஓர் சூழ்நிலையில், பெத்லகேமின் மாட்டுத் தொட்டிலில் அன்று பிறந்த இயேசுபாலன் இப்போது பாய்ந்து செல்லும் வெள்ளத்துள்ளும், தண்ணீருள் மிதக்கும் சிறு கொட்டில்களுக்குள்ளும் பிறக்கப் போகின்றார் என்பது தான் உண்மை. இயேசு பாலனின ஆட்சியில் துன்பப்பட்ட, வேதனையுற்ற, ஒதுக்கப்பட்ட, அன்னியப்படுத்தப்பட்ட மக்களுக்கே உரிமை உண்டு. எனவே வன்னி நாட்டில் குடியிருப்போர் மேல் சுடர் ஒளி உதிக்கட்டும் துனபத்தின் இருள் அகன்று போகட்டும். அருளின் ஒளி உதிக்கட்டும். விடியற்கால விண் மீனே, முடிவில்லா ஒளியின் மெய்ச் சுடரே படிமிசை நீதியின் கதிரவனே! இருளில் மரண நிழல்தனிலே வருந்தி வாடும் அனைவருக்கும் அருளொளி வீச வருவீரே அல்லேலூயா!!

# – நீங்கள் ஒளி தேடும் ஞானிகளா? ஏரோதுக்களா? –

சே. யோசப்பாலா செயலாளர்,
கத்தோலிக்க கலை
இலக்கிய வட்டம்,
யாழ்ப்பாணம்.

"யூதரின் அரசனாக பிறந்திருக கிறவர் எங்கே? அவரது விண்மீன் எழக் கண்டோம். அவரை வணங்க வந்திருக்கின்றோம்" என்றார்கள். இன்றும் இயேசு பாலகனை தேடி ஆலயங்கள் சென்று ஆர்ப்பரிக்கின்றோம், விழா எடுக்கின்றோம், ஒளிவிழாக்களாக கொண்டாடுகின்றோம்.

இதே நிலையில் என் பிள்ளைகளை காணவில்லை. அவர்கள் எங்கே உள்ளனர் என தேடி அலையும் கூட்டம் எங்கெல்லாமோ அலைகிறது. "ஒரே புலம் பலும் பேரழுகையுமாய் இருக்கிறது, ஆறுதல் பெற அவர் மறுக்கிறார், ஏனெனில் அவர் குழந்தை அவரோடு இல்லை," என்று இறைவாக்கினர் ஏரேமியா உரைத்தது நிறைவேறியது.

ஞானிகள் ஒருபுறம் தேடி அலைகிறார்கள். ஏரோது அரசனும் கலங்கினான். "நீங்கள் சென்று குழந்தையை குறித்து திட்டவட்டமாய்க்கேட்டு. எனக்கு அறிவியுங்கள். அப்பொழுது நானும் சென்று அக் குழந்தையை வணங்குவேன்" என்றான் ஞானிகளிடம் ஏரோது.

அதேவேளை யோசேப்புக்கு (சூசையப்பர்) கனவில் வானதூதர் தோன்றி "நீர் எழுந்து குழந்தையையும் அதன் தாயையும் கூட்டிக்கொண்டு எகிப்துக்கு தப்பி ஓடிச செல்லும். நான் உமக்கு சொல்லும் வரை அங்கேயே இரும். ஏனெனில் குழந்தையை ஏரோது கொல்வதற்காக தேடப்போகிறான்" என்றார்.

இரண்டு வயதுக்குட்பட்டவையுமான எல்லாக்குழந்தைகளையும் கொன்றான் ஏரோது. இவற்றை வரலாறு சான்று பகர்கிறது. சத்திரத்திலும் இடமில்லாது அகதியாக அலைந்த இயேசு பாலகனின் சரித்திரம் மாடடைக்குடியில் மனுமகன் பிறந்தார் என்ற செய்தியே உலகில் நிலைத்தது.

ஏரோதுக்கள், பிலாத்துக்கள், யூதாசுகள் நிறைந்த சூழலில் இறை மகனின் சாயல்கள் இன்றும் துன்பத்தில் துவளுகிறது. ஞானிகள் தேடி வருகின்றனர். அதன் நடுவே ஏரோதின் தூதர்களும் நடமாடுகிறார்கள். பச்சிளம் பாலகர்கள் குடில்களில் வாடுகிறார்கள். நோய் நொடி துன்பத்தின் மத்தியில் வாடும் அன்றைய சூழல், அன்றைய குடில்கள் இன்றும் தெரிகிறது. எல்லோரும் மூவிராசாக்களா, ஏரோதுகளா என்பதனை வெளிப்படுத்த இன்றைய நத்தார் விழா எமக்கு தரும் செய்தியாகிறது.



குடில்களைக் கட்டி பாலன் பிறப்பினை நினைவு கூரும் மனங்களில் ஒரு கணம் குடில்களில் வாடும் ஜீவன்கள் தேடும மூவிராசாக்களாக நாம் மாற அழைப்பு விடுக்கிறது. சின்னஞ்சிறுவர்களின் மனங்களில அன்பு, பாசம், கருணை, பிறசினேகங்களை விதைக்கும் மனங்கள் நீங்களானால் உங்கள் இல்லங்களில் குடிலில் பிறக்கும் பாலன் சிறுவர் உள்ளங்களில் பிறக்க வைக்க ஞானிகளின் தேடலை அடையாளமாக்கி பாலயேசுவின் பாசத்தை இரட்டிப்பாக்க அர்த்தமுள்ள நினைவுகளை பகிர்வது காலத்தின் தேவையாகும்.

"அஞ்சாதீர், இதோ எல்லா மக்களுக்கும் பெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். இன்று ஆண்டவராகிய மெசியா எனும் மீட்பர் உங்களுக்காகத் தாவீதின் ஊரில் பிறந்திருக்கிறார்" என்ற நம்பிக்கை ஒளி தரும் வார்த்தைகள் வயல் வெளியில் காவல் காத்த இடையர்களுக்கு தெரிவிக்கப்பட்டது. இதுவே இன்று வரை பகிரப்பட்டு வருகிறது. சாதாரண பாமர இடையர்கள் யார்? உங்களைப்போன்ற பொது நிலையினரே இச் செய்தியைப் பகரும் சாட்சிகளாக அடுத்த சந்ததிக்கு சொல்லும் பொறுப்பு உங்களிடமே தரப்பட்டுள்ளது. எப்படி தெரிவிக்க முன் வருவீர்?

இதில் ஏரோதுக்களா? மூவிராசாக்களா? நீங்கள் என்பதனை வெளிப்படுத்த தரப்பட்ட சந்தர்ப்பங்களே ஒளியூட்டும் விழாக்களாக ஒன்று கூடும் நிகழ்வுகளாக இல்லங்களிலும் உள்ளங்களிலும் இயேசு பாலன் பிறக்க நத்தார் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்.

# இயேசுவின் பிறப்பும் புலக்காட்சி வழி மறையறிவிப்பும்

திருச்சபை கொண்டாடும் பெரும் திருவிழாக்களில் இயேசுவின் பிறப்பும், கிறிஸ்துவின் உயிர்ப்பும் வரலாற்று நிலையிலும், இறையியல் நோக்கிலும் முக்கியம் பெற்ற விழாக்களாகும். திருச்சபையின் திருவழிபாட்டு நாட்காட்டியும் இதனைத் சுட்டி நிற்கின்றது. இந்த இரண்டு நிகழ்வுகளையும் மையப்படுத்தி நற்செய்தி ஆசிரியர்களும தங்கள் ஏடுகளில் சில முக்கிய சம்பவங்களைக் குறிப்பிட்டுள்ளனர். ஒப்பீட்டு நிலையில் இயேசுவின பிறப்பு பற்றிய நிகழ்வுகள், உயிர்ப்பு நிகழ்வுகளை விட குறைவாக காணப்படும் வேளையில் மத்தேயு, லூக்கா ஆகிய இரண்டு ஆசிரியர்கள் மட்டுமே பிறபுப் பற்றிக் கூறுகின்றமையும் கவனத்திற் கொள்ளப்படவேண்டியவை.

**நற்செய்தி அறிவிப்பு:**

இந்நிகழ்வுகள் பற்றிய ஆழமான அறிவையும், அவை பற்றிய சிந்தனையையும் மக்களுக்கு அளிப்பது திருச்சபையின் நற்செய்தி அறிவிப்புப்பணியாகும். திருத்தூதர் காலம் முதல், திருச்சபை பல்வேறு வழிகளைக் கையாண்டு நற்செய்தி அறிவிப்புப் பணியை மேற்கொண்டு வருகின்றது. இலங்கையில் நற்செய்தி அறிவிப்புப் பணியைப் பற்றி நோக்கும் போது போர்த்துக் கேயர் ஆட்சிக்காலம் முதல் இன்று வரை நற்செய்தி அறிவிப்பில் "புலக்காட்சி முறைமை" முக்கியத்துவம் பெற்று வருகின்றமைக்குப் பல ஆவண ஆதாரங்களும், வரலாற்றுச் சான்றுகளும் உண்டு. இங்கு இயேசுவின் பிறப்பு விழா பற்றிய விடயங்கள் பற்றி மட்டுமே நோக்குவோம்.

**மகிழ்வூட்டும் செய்தி:**

இயேசுவின் பிறப்பு மகிழ்ச்சியூட்டும் நிகழ்வாகும். "இதோ, எல்லா மக்களுக்கும் பெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கின்றேன். (லூக் 2:10). இவை இயேசுவின் பிறப்பை இடையர்களுக்கு அறிவிக்க வானதூதர் கூறிய வார்த்தைகள். "வார்த்தை மனுவுருவானார் எம்மிடையே குடிகொண்டார்." அதாவது இயேவின் பிறப்பு நூற்றாண்டுகளாக உலகின் பல பாகங்களிலும் மகிழவுடன் கொண்டாடப்பட்டு வரும் விழாவாகும்.

**குடில்வழி புலக்காட்சி:**

ஐரோப்பாவில் கத்தோலிக்கர் ஆலயங்களிலும்,தங்கள் இல்லங்களிலும் இயேசுவின் பிறப்பு விழாவைச் சித்தரிக்கும் குடில் அமைப்பை புலக்காட்சியாக மேற்கொண்டனர். இதனை இலங்கையில் பிரான்சிஸ்கன் சபை மிசனெறிமார் அறிமுகம் செய்தனர். இயேசு பிறப்பை முதல் முதலில் உலகிற்கு குடில் அமைப்பு வழியாக அறிமுகம் செய்தவர் (கி.பி 1181-1226) காலப்பகுதியில் வாழ்ந்த இத்தாலி நாட்டைச் சேர்ந்த புனித பிரான்சிஸ் அசீசியர் ஆகும்.

கடந்த சில வருடங்களுக்கு முன்பு நாடகப் பாங்கான சில விடயங்களும் இதில் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. இதன் படி நூல்களைக் கொண்டு பாவைகளை இயக்கி, அதாவது வானதூதர்கள் விண்ணிலிருந்து இடையர்களிடம் வந்து செய்தி கூறுவது போன்ற காட்சியமைப்புக்கள் மக்களை வெகுவாக கவர்ந்தன. இதற்கு பயன்படுத்தப்பட்ட வானதூதர்களின் (பொம்மை) முகங்களும், கை கால்களும் மெழுகினால் செய்யப் பட்டவையாகவும், ஏனைய பகுதிகள், துணி, கடதாசி, வைக்கோல் போன்றவற்றினால் ஆக்கப் பட்டவையாகவும் இருந்தன. பிற்பட்ட காலங்களில் இடையர்கள், மூன்று ஞானிகளின் வருகை நள்ளிரவுத் திருப்பலியின் பின்பு மனிதர்களால் நிகழ்த்தப்பட்டன.

**நவீன நாடகப்பாங்காக இயேசு பிறப்பு:**

கிறிஸ்துவின் வாழ்வு பற்றிய நிகழ்வுகளைச் சித்தரித்த ஆற்றுகைகள் "மறை பொருள் நாடகங்கள்" என அழைக்கப்பெற்றன. மேலும், போர்த்துக்கேயர் காலத்தில் இலங்கையில் இயேசு பிறப்பு பற்றிய நவீன நாடகங்களும் இடம்பெற்றமைக்கு ஆவண ஆதாரங்கள் உண்டு. போர்த்துக்கல நாடடில், வானதூதர் இடையர்களை பெத்லகேம் குடிலுக்கு வழிகாட்டிய நிகழ்வுகளைச சித்தரிக்கும் காட்சிகளும், மூன்று ஞானிகள் இயேசு பாலனைத் தரிசித்து வணங்கி, காணிக்கை செலுத்திய காட்சிகளும் காண்பிக்கப்பட்டது. இவை போன்ற நாடகங்கள் இலங்கையிலும் மிசனறிமாரால் நிகழ்த்தப்பட்டன. புலக்காட்சி வழியாக கற்பிக்கப்படும் கருத்துக்கள் மனித உள்ளத்தில் ஆழமாகப் பதியும் என்பது இன்றும் கற்பித்தல் முறைமைகளின் வழியாக நிரூபிக்கப்பட்ட உண்மையாகும்.

**நாட்டுக்கூத்து பாங்காக இயேசு பிறப்பு:**

கிறிஸ்தவம் இலங்கையில் அறிமுகம் பெற்ற காலத்தில், குறிப்பாகத் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் நன்கு பிரபல்யம் பெற்றிருந்த ஆற்றுகை வடிவம் நாட்டுக் கூத்தாகும். இது மக்கள் மத்தியில் "நாடகம்" எனவே அறிமுகம் பெற்றிருந்தது. போர்த்துக்கேய ஆட்சிக்காலத்தில் இலங்கையில் கத்தோலிக்க நாட்டுக்கூத்து ஆக்கப்பட்டமையும், ஆடப்பட்டமையும் இன்னும் ஆய்வுக்குரிய விடயமாகும். ஆயினும், பிற்பட்ட காலங்களில் இவை ஆக்கப்பட்டு ஆடப்பட்டமைக்கு போதிய ஆவணச் சான்றுகள் உண்டு. இலங்கையில் முதல் முதலில் ஆக்கப்பட்ட கத்தோலிக்க நாடகம் "மூவிராசாக்கள் வாசாப்பு" ஆகும். இதனை மன்னாரைச் சேர்ந்த லொறன்ஸ்சுப் புலவர் ஆக்கியுள்ளார்.

**தென்பகுதியில் நாட்டுக்கூத்து:**

இலங்கையின் தென்பகுதியில், குறிப்பாக சிலாபத்தில் வாழ்ந்த தமிழ் பேசும் கத்தோலிக்கர் வழியாகவே நாட்டுக் கூத்து சிங்கள மக்கள் மத்தியில் அறிமுகம் பெற்றது. சிங்கள மொழியிலும் முதல் முதலில் ஆக்கப்பட்ட நாட்டுக்கூத்து (நாடகம்) "மூவிராசாக்கள் நாடகம்" ஆகும். இதனைச் சிலாபத்தைச் சேர்ந்த பிலிப்பு சின்னோ என்பவர் ஆக்கியுள்ளார்.

**இயேசு பிறப்பும் கரோல் கீதங்களும்:**

இயேசு பாலகன் பிறப்புடன் தொடர்புள்ளதாக இலங்கை மக்கள் மத்தியில் பிரபல்யம் பெற்று, இன்று வரை நிலைத்து நிற்கும் மற்றுமோர் மரபு "கிறிஸ்மஸ் கரோல்" கீதங்கள் இசைக்கும் மரபாகும். இம்மரபு கத்தோலிக்கர்களிலும் மேலாக புரட்டஸ்தாந்து சகோதரர் மத்தியிலேயே அதிகம் பிரபல்யம் பெற்ற ஒரு நிகழ்வாகக் காணப்படுகின்றது. அவ்வாறு கரோல் கீதம் இசைகரும் மரபு கிறிஸ்தவர்களிடமிருநதே பௌத்தமத பாரம்பரியத்துக்கும் சென்றுள்ளது. முதலில் ஆலயங்களுக்குள் மட்டுப்படுத்தப்பட்ட கரோல் கீதம் இசைக்கும் மரபு, படிப்படியாக பாடசாலைகளிலும் நிகழ்த்தப்படும் நிகழ்வாக மாறியது. எனினும் இவ்வாறான ஒரு நிகழ்வு வழிபாட்டு நிகழ்வாகவே மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை கருத்திற் கொள்ளபட வேண்டும். இம்மரபின் இன்றைய வழக்கை புரட்டஸ்தாந்து சபையினரோடு ஒப்பிடுகைளில், கத்தோலிகர் மத்தியில் கரோல் கீதங்கள் இசைக்கும் மரபு குறைந்து காணப்படுகின்றது.

**கற்பித்தல் வழிமுறை:**

இயேசுவின் பிறப்பை உறை நிலை, இயங்கு நிலைப் புலக்காட்சிகளாக இன்றைய சமய, சமூக, வரலாற்றுப் பின்னணியில் நோக்கும் போது, இவை முதல் முதலில் கற்பித்தல் நோக்கையே அடிப்படை

(தொடர்ச்சி 13ம் பக்கம் பார்க்க)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.



# உள்ளக் குடிசையில் வந்து பிறக்க வா!

**அருட் சகோ. றமேஸ் அ.ம.தி**



இறைதந்தையின் திட்டத்தினாலும், இறைவாக்கினரின் முன்னறிவிப்பினாலும் மெசியா பற்றிய ஆழமான நம்பிக்கை இஸ ராயேல் மக்கள் மத்தியில் வலுவாகப் பேசப் பட்டது. காலத்துக்கு காலம் பல்வேறு நாடு களின் அடிமைத்தனங்களாலும், துன்புறுத் தல்களாலும் தங்களையே இழந்து, மாற் றானின் வழிசெல்ல நிர்ப்பந்திக்கப்பட்ட மக்கள், இறைவன் தங்களை மீட்டு விடு தலை வாழ்வை மீண்டும் தருவார் என்ற நம்பிக்கையை கைவிடவில்லை. மெசியா பற்றிய அவர்களது எதிர்பார்ப்பு வேறு கோணத் தில் இருக்க மெசியாவாகிய இயேசுவின் பிறப்பு வேறுகோணத்தில் அமைந்தது. இந்த உலகத்தில் தனது பெற்றோரை தேர்ந் தெடுக்கும் உரிமை எந்தவொரு மனிதனுக் கும் இல்லை. ஆனால் கடவுள் தன் மகனுக் கான மண்ணகப் பெற்றோரைத் தேர்ந்தெடுக் கிறார். அக்காலத்தில் அதிகார வர்க்கத் தினரும், சமூகத்தில் அந்தஸ்து மிக்க பெரிய வர்களும் இருந்த போதிலும், இறை வன் ஏழைப்பெற்றோர்களையே தெரிந் தெடுக்கிறார். மெசியாவை அரசனாகவும், பெரிய வீரனாகவும் எதிர் பார்த்த இஸ்ரா யேல் மக்களின் எதிர்பார்ப்புக்கு மாறாக ஆனால் திருச்சட்டத்திற்கும், இறைவாக்கின ரின் முன்னறிவிப்புக்கும் உட்பட்டதாக தாவீதின் ஊராகிய பெத்லகேமில் இயேசு ஏழையாக பிறந்தார்.

ஆனால் உலகம் அவரின் ஏழ்மையை உணர்ந்ததா? அவரது பிறப் பின் அர்த்தத்தைதானும் அறிந்ததா? ஏன் இறைவன் மனிதனானார் என புரிந்து கொண் டதா?... உலகம் இயேசுவின் போதனையை ஒதுக்கியது. தன்னுடைய மாயை நாட கத்தை ஆரம்பித்தது. அவரது போதனை களை தூக்கி எறிந்தது. பேதமையால் அழிவை நோக்கி நகர்ந்தது. விளைவு..?

இன்றைய சமுதாயத்தை ஆழ மாக ஊடுருவி நோக்கும்போது ஒரு மாபெரும் உண்மையை நாம் உணர முடியும். யாதெனில் ஒருபுறம் மக்கள் வாழ் வுக்காக ஏங்குகின்றனர். வாழ்வை முழு மையாகப் பெறுவதற்காகப் போராடுகின் றனர். மறுபுறம் மனிதர் அழிவை நோக் கிப் பயணமாகின்றனர். வாழ்வுக்கும் சாவுக கும், ஆக்கத்திற்கும் அழிவுக்கும், எழிச்சிக கும் வீழ்சசிக்கும் இடையே மனித சமுதா யம் சிக்கித தவித்துக் கொண்டிருக்கிறது. உலகத் தொடக்கத்திலே மனிதனோடு கூடிப் பிறந்தவன் முறை மனித வரலாற்றில் தொடர் ந்து அவனைக் காயப்படுத்திச் செல்வது வரலாறு தரும் பாடம் மட்டுமல்ல இன்றைய யதார்த்த உலகிலும் நாம் அனுபவிப்பது வெளிப்படையுண்மை. மனித மாண்பை சிதைத்து, மனித உரிமையை நசுக்கும் எல்லா செயற்பாடுகளும் வன்முறையின் வெளிப்பாடுகளே. அகதி வாழ்வு, காரணமின் றிய சிறைவைப்பு, உரிமைகள் மறுக்கப் படல், பாலியல் துஷ்பிரயோகம், சீதனக் கொடுமைகள், சிறுவர் துஷ்பிரயோகங் கள், முதியோர் புறக்கணிப்பு, வறுமை, வேலையில்லாமை, சமூக சீர்கேடுகள், கலாச்சார அழிவுகள், ஆன்மீக வரட்சி என்பன தான் வன்முறை மனிதனுக்கு அளித்த வெகுமதிகள்.

இன்றைய உலகில் துன்புறும் ஏழைகளுக்கு ஆறுதல் நம் ஆண்டவர் இயேசுக் கிறிஸ்துவே. "ஏழைகளே நீங்கள் பேறுபெற்றோர் ஏனெனில் இறையாட்சி உங களுக்குரியதே" (லூக் 6:20). இந்த உலகத் திலே எங்களை ஏற்றுக்கொள்ள யாருமில் லையே, என்று வேதனையோடும் எல்லா வற்றையும் இழந்து வறுமையில் வாழும் எம்மக்களுக்கு ஆறுதல் தருவது இயேசு வின் ஏழைக் கோலம்தானே. இன்று வாழ் வுக்காக போராடிக்கொண்டிருக்கும் மக் களுக்கு, இயேசுவின் பிறப்புச் செய்தி ஒரு உற்சாகத்தையும் நம்பிக்கையையும் கொடுக்கும் என்றால் மிகையாகாது. இந்த ஏழைகளை தன்னுள் உள்வாங்க, தன் அன்பை அவர்களுக்கு கொடுத்து அவர் களை ஆறுதல்படுத்த அவர் மீண்டும் பிறப்பது துன்புறும் எம் மக்களின் தற் கால இல்லக்குடிசைகளிலும் உள்ளக் குடிசைகளிலுமே.

கிறிஸ்து பிறப்பு விழா கடவு ளின் பேரன்பை எமக்கு வெளிப்படுத்தும் ஒரு மகத்தான பெருவிழா. ஆகவே இயேசு துன்புறும் எங்கள் உள்ளக் குடிசையில் வந்து பிறக்க எங்களை தயார் செய்து அமைதியின் தேவனை எங்களில் ஏற்று உலகில் அமைதியை காண புறப்படுவோம்.

# ஏன்?

ஏன்? என்ற கேள்வி இல்லா விட் டால் இந்த உலகம் சகல துறைகளிலும் வளர்ச்சி கண்டிருக்கவே முடியாது. இருள சூழ்ந்த உலகை ஏன் நான் ஒளிமயமாக மாற்றக்கூடாது என்று அன்று தோமஸ் அல்வா எடிசன் கேட்டிருக்காவிட்டால் இன்று நாம் அரைவாசி வாழ்நாளை இருளில் தான் தொலைத்திருப்போம். ரைட் சகோதரர்கள் ஏன் நாம் விண்ணில் பறக்க முடியாது. என்று கேட்டிருக்காவிட்டால் நாம் கனடாவுக்கு சென்றிருப்போமா? அமெரிக்காவுக்கு பறந்து சென்றிருப்போமா?

ஒரு மனிதனுள் அடங்கியிருக்கும் மாபெரும் சக்தியை இனங்கண்டு சமூக முன்னேற்றத்திற்கு பயன்படுத்த வேண்டு மானால் ஏன்? என்ற கேள்வி அடிக்கடி கேட் கப்பட வேண்டும். மழலைகள் கூட உல கத்தை அறிவதற்காக ஏன்? என்ற கேள் வியை அடுக்கிக் கொண்டே போவார்கள். "ஏய் வாயை மூடு, கிழட்டுக் கதை கதைக் காத, பிள்ளைகளோட விளையாடு போ" என்று அந்த மழலையின் சிந்தனை ஆற் றலை, சிறகடித்த ஆர்வத்தினை குழி தோண்டிப் புதைத்து விடுகிறார்கள்.

ஏன் நான் வாசிக்கக் கூடாது?
ஏன் நான் கோபத்தை விடக்கூடாது?
ஏன் நான் நன்றாகப் பழக்கக்கூடாது?
ஏன் நான் ஓர் அறிஞனாக வரக்கூடாது?
ஏன் நான் ஓர் நல்ல குருவாக வரக்கூடாது?
ஏன் நான் ஓர் நல்ல மனிதனாக......

இப்படியே நாம் தொடர்ந்து கேட் டுக் கொண்டால் நிச்சயம் ஒரு நாள் நமது இலக்கை அடையலாம். உனது சிந்தனை எப்படி இருக்குமோ அப்படித்தான் உன் னுடைய வாழ்க்கையும் இருக்கும். "கெலன் கெலர்" என்ற பிரபல ஆங்கில எழுத்தாளருக்கு காது கேட்காது, கண் தெரியாது, பேச முடியாது இருந்தும் ஏன்? நான் எழுத்தாளராக வரமுடியாது என்ற கேள்வியை எழுப்பியதன் விளைவு ஓர் தன்னிகரில்லா எழுத்தாளரானார்.

எனவே குறைபாடுகளோ, வறு மையோ தாழ்ந்த சாதியோ, கோத்திரமோ ஒருவன் இலக்கை அடைந்து சாதனை படைப்பதற்கு தடையானவை அல்ல. எனவே ஏன்? என்ற கேள்வி மூலமே அனைத்திற்குமான விடை காணமுடியும்.

**வி. அருள்பஸ்ரியன்**
**புனித மடுத்தீனார் குருமடம்.**

# ஏழையின் சிரிப்பில் இயேசுவைக் கண்டுகொள்ள

அன்று யேசு மாட்டுத்தொழு வத்தில் பிறந்தார். இன்று என்னில் எனது வாழ்வில் பிறக்க வேண்டும். அதைத் தான் கிறிஸ்து பிறப்பு விழா என்னிடம் கேட்கிறது. "புனிதம் ஒன்று மனிதம் ஆனது கடவுளின் மகன் யேசு காலத்திற்கு உட் பட்டவராக தம்மை அளிக்கிறார். யேசு என்ற மனிதத்தன்மை நமக்குக் கூறு வது என்ன? நான் உன்னுடைய வாழ் வில் பிறக்க வேண்டும். எளிமையான குடிசையில் நீ தான். ஒளிமிக்க பிரகாசம் உன்னில் வீசவேண்டும். இந்த உலகில் நீ எனக்கு உயிர் உள்ள சாட்சியாக வாழ உன்னைப் பிறப்பித்துள்ளேன். இது தான் எனது பிறந்த நாளில் நான் உனக்குத் தரும் செய்தி. நல்லதை நினை, நல்லதைச் செய், நல்லதைப் பேசு, நல்லதைப்பார் என்னுடைய பிறப்பானது உன்னை மீட்புப் பணிக்கு அழைக்கிறது.

நமது குடும்பவாழவு இறைவனை சந்திக்கும் கொண்டாட்டம். எங்கே இரு வர் மூவர் ஒன்றாக இருக்கிறார்களோ அங்கே யான் இருப்பேன்" கிறிஸ்துவின் பிறப்பு எமது குடும்பவாழ்வில் எதைக் கேட்கின்றது. நீங்கள் இருக்கும் நிலை யில் நிறைவாக இருங்கள். எனது பிறப்பு வெறுமையான பகட்டற்ற நிலையைக் காட்ட வில்லையா? கடவுளாக இருந்த நான் இந்த வெறுமையான வாழ்வைத் தெரிந் தேன். எனது தந்தையின் திட்டம் எனது வாழ்வு.

எனது பிறப்பு இன்று உங்கள் வாழ்வில் எதைக் கேட்கிறது. அன்பிய குடும் பங்களாக அன்பில் வாழும் அனுபவிக் கும், அமைதியின் இல்லங்களாக மாற வேண்டும். கணவன் மனைவி உறவு, பெற்றோர் பிள்ளைகள் உறவு வாழப்பட வேண்டும். இதுதான் கிறிஸ்து பிறந்த நாள் செய்தி. ஏழையின் சிரிப்பில் இறை வனைக் காண்கிறாயா? சற்று கண்களை ஏறெடுத்துப் பார்த்து, நமது சமுதாயத்தை நோக்குவோம். கிறிஸ்துவின் பிறப்பை ஒட்டி பல விதமான செயல்பாடுகள் கிறிஸ மஸ் ஆரவாரங்கள் ஏழைகள் இல்லாமை யில் கண்ணீர் கலந்த பெருமூச்சு இருப் பதற்கு இல்லிடமில்லை என்ற கூக்குரல கேட்கிறதா? வயோதிப தாய் தந்தையர் கள் கைவிடப்பட்டு அனாதைகளாய் திரி கின்றனர். எம் கண்களில் தெரிகின்றதா? நமது சமுதாயத்தில் சமத்துவம், சகோதரத துவம் நிலவுகிறதா? வாழப்படுகிறதா? பகிர தல் எங்கே? ஏழைகளை அன்பு செய் ஏழை யின் சிரிப்பில் யேசுவைக் கண்டுகொள்.

சமுதாயத்தில் வாசனை வீசும் மலராக மற்றவர்களுக்கு உதவும் கர மாக உன்னிடம் உள்ளதை பகிர்ந்து கொடுக்கும் தாராள மனிதனாக மற்றவர் களின் துன்பங்களில் கலந்து கொள்ளும் கருணை உள்ளம் கொண்டவனாக இருக்க கேட்கிறது இந்த விழா. இது தான் யேசு வின் பிறப்பை கொண்டாட இருக்கும் நமக்கு யேசு தரும் செய்தி.

**சே. மேரி பற்றிமா.**
**புனித யாகப்பர் பங்கு,**
**குருநகர்.**

# 2010ம் ஆண்டு மார்கழி 25ம் திகதி மீண்டும் இயேசு பிறந்தால்!

வரலாறு இருபது நூற்றாண்டு களை கடந்து நிற்கின்றது. இதில் மனித குலம் சந்தித்ததும் சாதித்ததும் ஏராளம். மழை ஓய்ந்த பின் தூவானம் என்பது போல முப்பது வருடப்போர் ஓய்ந்த பின் னரும் தமிழர் எமது பிரச்சனைகள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. இன்னும் புதிய பிரச்சனைகள் தோன்றிக்கொண்டே இருக் கின்றன. இன்நிலையில் மண்சார்ந்த உணவு, மருத்துவம், தொழில், அழிந்து மக்கள் முக வரி இழந்தவர்களாக மாறுவதும், எல்லை கள் மாறுவதும், ஆட்சிகள் திணிக்கப்படு வதும் தொடர்கின்றது. இச்சூழலில் இயேசு வின் பிறப்பு இவ்வாண்டில் என்ன செய்தி யைத் தருகின்றது என்பதை சற்றுச் சிந் திப்போம்...

இயேசுவின் பிறந்த நாள் என்பது மிகப்பெரிய குறியீடு. கடவுள் மனிதனாக இவ்வுலகிலே பிறந்தார். இவ்வுண்மை விடுக் கின்ற உள்ளார்ந்த செய்திகள் ஏராளம். கிறிஸ்துவின் பிறப்பு நம்பிக்கையற்ற மக் களுக்கு நம்பிக்கையையும் ஏழை எளிய வர்களுக்கு மகிழ்ச்சியையும், ஆட்சியாளர் களுக்கு அச்சத்தையும் தருவதாக அமைந் துள்ளது. இயேசுவின் பிறப்பானது மனித குலத்தில் மாற்றம் ஏற்பட வேண்டும் எனும் உந்துதலைக் கொடுக்கிறது. எனவே இயேசு வின் பிறப்பு விழா எமது மாற்றத்திற்கான முதல் அழைப்பு. இயேசுவின பிறப்பே இறை யாட்சிக்கான முதல் வித்து. அந்த வகையில் இயேசுவின் மானிடப்பிறப்பு இறையாட்சியை ஊன்றிய நிகழ்வாகும்.

இன்று நாங்கள் அனுபவித்து வரு கிற துன்ப துயரங்கள், நீங்க வேண்டுமென றால் இயேசு மீண்டும் பிறக்க வேண்டும்! நாங்கள் அனைவரும் இறையாட்சியின் மக்கள். ஆகவே நாங்கள் உரிமைக்கு குரல் கொடுக்கின்ற மக்களாக, அன்புகாட்டுகின்ற மக்களாக, பகிருகின்ற மக்களாக, வாழ வேண்டியவர்களாக இருக்கின்றோம். இவ் வாறாக நம்முடைய பிறப்பு அர்த்தமுள்ள தாக, மாறுகின்ற பொழுது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் பிறந்த இயேசு கொண்டு வந்த மகிழ்ச்சியையும் அதிர்ச்சி யையும் இன்றைய சமூகத்தில் நம்மால் உருவாக்க முடியும். இதற்கு அடிப் படையாக அமைந்திருப்பது தான் அன்பிய வாழ்க்கை முறை: எனவே அன்பியங்களை எமது பங்குகளில் கட்டியமைக்கின்ற போது இயேசு விட்டுச்சென்ற பணியை, அவர் எதிர் பார்ப்பதை எம்மால் செய்ய முடியும்.



**அருட்சகோதரன் ச.வசந்தன்**

# தேடுங்கள் கண்டடைவீர்கள்

இறைமகன் யேசுவின் பிறப்பானது பெத்லகேம் என்னும் சிற்றூரிலே நிகழ்ந்த ஒரு நிகழ்வாகும். இந்நிகழ்வானது மானிட சமூகத்துக்கு நம்பிக்கையும் நல்வாழ்வை யும் பேரொளியையும் கொடுக்க வந்த நிகழ்வு.

இருண்டு கிடந்த பாதையிலே துன் பங்கள் இழப்புக்கள் சிதைந்து போன உறவுகள் என்னும் வேட்டுக்களால் எம்மவர களின் இதயங்கள் துளையிடப்பட்டன. ஈழ தேசத்திலே ஆண்டவரின் ஆசீரால் போர் என்னும் புயற்காற்று ஓய்ந்து சந்தோஷ மாகவே சமாதானக் காற்று வீச ஆரம் பித்துள்ளது. எனவே பல எண்ணச் சுமை களோடு வாடும் எம் சிறைக்கைதிகளின் விலங்குடைக்கப்பட்டு விடுவிக்கப்படவும் சிதைந்த உறவுகள் சீராக்கப்படவும் நான்கு பக்கமும் முட்கம்பி நடுவிலே இடைத் தங கல் முகாம்களில அடிப்படை வசதிகளின்றி அல்லலுறும் மக்கள் தம் சொந்த இருப் பிடங்களிற்கு அனுப்பி வைக்கப்படவும் கடந்த கால கசப்பான அனுபவங்களை மறந்து ஆனந்தக் கிறிஸ்மஸ் பாடி வர விருக்கும் யேசு பாலகனை எம் உள் ளத்துக் கோயிலிலே இடம் கொடுப்போம்.

**ஜே. லூசில்டா வாசுகி**
**நாரந்தனைப் பங்கு.**

# யாழ்ப்பாணத்தில் 1689ம் ஆண்டு கிறிஸ்மஸ் தின நிகழ்வுகள் அருளாளர் ஜோசப் வாஸ் அவர்களின் பணிவாழ்வின் திருப்புமுனை

2011ம் ஆண்டு ஜனவரி மாதம் 16ம் தேதி அருளாளர் ஜோசப் வாஸ் அவர்களின் விண்ணகப் பிறப்பின் 300வது ஆண்டு நிறைவைக் கொண்டாடவுள்ளோம். அடிகளாரின் தூர நோக்கும், கத்தோலிக்க திருச்சபைக்கெதிரான பல்வேறு கடுமையான தடைச்சட்டங்கள் நடைமுறையில் இருந்த வேளையிலும் அவரது துணிச்சல் மிக்க மறைப்பணியும் அவர் கடைபிடித்த மறைப் பணியாற்றும் வழி முறைகளும் எல்லாவற்றுக்கும் மேலாக, அவரது எளிமையான தாழ்சியுடன் கூடிய செப வாழ்வும் இலங்கையில் கத்தோலிக்க மறையை ஆபத்திலிருந்து காத்தது எனலாம்.

முதல் மூன்று நூற்றாண்டுகளிலும் மற்றம் வரலாற்றில் பல்வேறு கட்டங்களில் உலகின் பல்வேறு நாடுகளிலும் மறைசாட்சிகளின் கலாபனைகளின் போது சிந்திய இரத்தம் கத்தோலிக்க திருச்சபை புது வீச்சுடன் வேர் விட்டு பரவ அடிகோலியிருக்கின்றது என்பது வரலாற்று உண்மை. இதனைத்தான் திருச்சபையின் தந்தையர்களுள் ஒருவராக கருதப்படும் டேர்டுன்லிளன் 'கிறிஸ்தவர்களின் (மறைசாட்சிகளின்) இரத்தம் விசுவாசத்தின் வித்து' என்று கூறியுள்ளார். இலங்கையின் அப்போஸ்தலராகிய அருளாளர் ஜோசப் வாஸ் அவர்களின் பணிவாழ்விலும் இது நிரூபிக்கப்பட்டுள்ளது. ஒரு பாரிய பணிப்பொறுப்புடன் இலங்கை வந்த அவரது பணிவாழ்வின் 1689ம் ஆண்டு கிறிஸ்மஸ் விழாவின் போது யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்த குருவேட்டையும் அதனைத்தொடர்ந்து கத்தோலிக்கர் சிலர் மறைசாட்சிகளானமையும் அடிகளாரது பணிகளை யாழ் குடாநாட்டிலிருந்து கண்டிக்கும் படிப்படியாக இலங்கை முழுவதற்கும் வியாபிக்கச் செய்யும் இறைபராமரிப்பின் செயல்பாடாகியது.

***அருளாளர் ஜோசப் வாஸ் அடிகளாரின் வருகைக்கு முன் இலங்கையில் கத்தோலிக்க திருச்சபையின் நிலை :***

அருளாளர் ஜோசப் வாஸ் அவர்கள் 1687ம் ஆண்டு இலங்கையில் வந்திறங்கியபோது தனியொருவராக அவர் எதிர்கொண்ட பணிவாழ்வு பாரியது என்றறிவதற்கு அவர் வருகைக்கு ஏறக்குறைய மூன்று தசாப்தங்களுக்கு முன் இலங்கையில் கத்தோலிக்க மதம் எவ்வளவு தூரம் பரவியிருந்தது என்று அறிந்திருக்க வோண்டும்.

கத்தோலிக்க மதம் இலங்கையில் பரவ வழிவகுத்த போர்த்துகேயர் 1958ம் ஆண்டு வெளியேற்றப்பட்டு கல்வினிஸத்தைப்பின்பற்றிய ஒல்லாந்தர் கால் பதிப்பதற்கு முன்னதாக முழு இலங்கையிலும் கத்தோலிக்க மறைபணியாளர் வட பகுதியில் 50 பேருமாக தென் பகுதியில் 70 பேருமாக 120 பேர் பணியாற்றிக் கொண்டிருந்தனர். இவர்களில் கணிசமான தொகையினர் பிரன்சிஸ்கன் சபையையும், யேசு சபையையும் சார்ந்தவர்கள். டோமினிக்கன் சபையையும், அகுஸ்தீனியன் சபையையும் சார்ந்த சில மறைப்பணியாளரும் இருந்தனர்.

கத்தோலிக்கர் யாழ்ப்பாணம், மன்னார், மாதோட்டப்பகுதிகளிலும சிலாபம், நீர்கொழும்பு, கொழும்புப் பகுதிகளை உள்ளடக்கிய மேற்குக் கரையோரப் பகுதிகளிலும் தான் பெரும் எண்ணிக்கையில் வாழ்ந்து வந்தனர். மறைப்பணித் தளங்களையும் (பங்குகளையும்) மற்றும் குருக்கள் தங்கிய மடங்களையும் பொறுத்தளவில் யாழ்ப்பாணம், மன்னார், மாதோட்டப் பகுதிகளை உள்ளடக்கிய வட பகுதியில் மட்டும் ஏறக்குறைய 50 இடங்கள் இனங்காணப்பட்டள்ளன. மறைபணியாளர் வழங்கிய திருமுழுக்கின் எண்ணிக்கையின் அடிப்படையில் வட பகுதியில் மட்டும் 110 ஆயிரம் கத்தோலிக்கத்தில் இருந்திருக்க வேண்டும். தென் பகுதியில் குறிப்பாகக் கோட்டே இராஜதானிப்பகுதியில் மட்டும் பிரான்சிஸ்கன் சபையினரின் பராமரிப்பில் 54 ஆலயங்கள் இருந்தன. மற்றும் கொழும்பில தலைமை இல்லத்தைக் கொண்டிருந்த டோமினிக்கன் சபையினர் அங்கும் காலிப்பகுதியிலும் 12 ஆலயங்களைப் பராமரித்து வந்தனர். அது போலவே இயேசு சபையினரும் அகுத்தீனியன் சபையினரும் சில ஆலயங்களையும் மடங்களையும் கொண்டிருந்தனர்.

1556ம் ஆண்டு பிரான்சிஸ்கன் சபையினர் சிலாபத்திலும் அதன் சுற்றுப் புறங்களிலும் மட்டும் 70,000 பேருக்குத் திருமுழுக்குக் கொடுத்திருந்தனர். தென் பகுதியில் எல்லாமாக 70 ஆலயங்களும் மடங்களும் இருந்தன. இத்தகவல்களின் அடிப்படையில் மேலெழுந்தவாரியாக பார்க்கும் போதே 20000 கத்தோலிக்கருக்குக் குறையாமல் இலங்கையில் ஒல்லாந்தர் வருகைக்கு முன் இருந்திருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வரலாம்.

அனேகமான இடங்களில் பிரமாண்டமான ஆலயங்களும் அவற்றுக்கருகாமையில் பாடசாலைகள் மற்றும் பல இடங்களில் நோயாளர், வயோதிபர் பராமரிப்பு நிலையங்கள் (misericordias) ஆகியவை அமைத்து கத்தோலிக்க சமயத்தின் வலுவான பிரசன்னத்தை எடுத்தியம்பிக் கொண்டிருந்தது.

***அருளாளர் ஜோசப் வாஸ் அவர்களின் வருகையும் யாழ் குடா நாட்டில் அவரது பணி ஆரம்பமும் :***

மிக வேகமாக வளர்ந்து வியாபித்துக் கொண்டிருந்த கத்தோலிக்க மதம் 1658ம் ஆண்டு எல்லா மறை பணியாளரும் பலவந்தமாக வெளியேற்றப்பட்டனர் ஒரு பாரிய வெறுமையும் பின்னடைவையும் எதிர் நோக்கியது. குருக்கள் திரும்பவும் இலங்கை வருவது அவர்களுக்கு அடைக்கலம் கொடுப்பது எல்லாம் தண்டனைக்குரிய குற்றங்களாகக் கருதப்பட்டன. இந்தப் பின்னனியில் தான் அருளாளர் ஜோசப் வாஸ் தமது ஊழியன் ஜோணுடன் இறை நம்பிக்கையுடையவராக மாறு வேடத்தில் மன்னாரில் வந்திறங்கி அங்கிருந்து யாழ்ப்பாணம் வந்து தமது பணியை மிகவும் கவனமாக முன்னெடுத்தார்.

அடிகளாரது பணி வாழ்வில பின்னடைவுகள் போலத் தென்பட்ட நிகழ்வுகளெல்லாம் இறை பராமரிப்பில் அவரது பணியை முன்னெடுத்துச் செல்ல உதவி வந்ததை அவதானிக்கலாம். இவ்வாறகத் தான் அவர் யாழ்ப்பாணம் வந்ததும் கடும் வயிற்றேட்டத்தால் அவதியுற்றதும் பின்னர் வீடு வீடாகப் பிச்சை எடுத்தமையும் ஒல்லாந்த ஆட்சியாளரதும் அவர்களுக்குப் பக்க பலமாக இருந்த சுதேசிகளும் அவதானிப்பிலிருந்து அவரைப் பாதுகாத்தன.

கழுத்தில் செபமாலை அணிந்து பிச்சையெடுக்க வீடு வீடாகச் செல்லும் யுக்தியை மிகவும் அவதானத்துடன் மேற்கொண்டு யாழ்ப்பாணத்தில் கத்தோலிக்கர் மத்தியில் மறைமுகமாகத் தலைவர் போலச்செயல்பட்டு வந்த பவுலோடோ போறஸ் என்பவருடன் ஏற்பட்ட தொடர்பு யாழ்குடாநாட்டில் வாஸ் அடிகளாரது மறைப்பணியை முறைப்படி மறைவாக ஆரம்பிக்க வழிவகுத்தது.

வாஸ் அடிகளாரது தொடர்மறை பணிக்கு அவரது பாதுகாப்பு மிக முக்கியமாகக் கருதப்பட்டதால் பவுலோபோறஸ் தமது நம்பிக்கைக்குரிய சில முன்னணி கத்தோலிக்கருடன் கலந்தாலோசித்து யாழ் குடாநாட்டில் சற்றொதுக்குப்புறமாக பெரும்பாலும் ஆழமான மத நம்பிக்கை கொண்ட பெரும்பாலும் கத்தோலிக்கரே வாழ்ந்த கிராமமாகிய சில்லாலைக்கு வாஸ் அடிகளாரை அழைத்து சென்று அங்கு ஒரு பாதுகாப்பான வீட்டில் மறைத்து வைப்பதென்றும் அங்கிருந்து மறைவாக சந்தர்ப்பம் சூழ்நிலைக்கேற்ப குடாநாட்டின் இதர பகுதிகளுக்குச் சென்று அவர் மறைபணியாற்ற ஒழுங்குகளை மேற்கொள்ளவும் முடிவெடுத்தனர்.

சில்லாலையில் இருந்து கொண்டு இரகசியமாகவும் அனேகமாக இரவு வேளைகளிலும் குடாநாட்டின் பல்வேறு இடங்களையும் தரிசித்து வந்தார். சந்தர்ப்பம் சூழ்நிலையால் கத்தோலிக்க மதத்தை விட்டு விலகியவர்கள், மறையைக்கடைப்பிடிக்க ஏற்ற வசதிகளற்ற நிலையில் மறையைக்கைவிட்டவர்கள், ஒல்லாந்த ஆட்சியாளர் வழங்கிய சலுகைகளுக்காகவும் பதவிகளுக்காகவும் கத்தோலிக்க மதத்தை விட்டு விலகியவர்கள் ஆசிய பலரை வாஸ் அவர்கள் தமது பொறுமையான தாழ்ச்சியான பணியாலும் முன்னுதாரணமான வாழ்வாலும் மீண்டும் பல ஆபத்துக்கள் மத்தியில் அவர்களுக்கு மறையறிவும் திருவருட்சாதனங்கள் பெறுவதற்கான வாய்ப்பையும் வழங்கி காணாமல் போன ஆடுகளைக்கொண்டு வந்து கடைக்குள் சேர்ப்பது போல, சேர்த்து வந்தார். ஒருகாலத்தில் கத்தோலிக்கராக இருந்தவர்கள் மத்தியில் தமது மதத்தின்பால் ஏற்பட்டிருந்த புத்தெழுச்சியை ஒல்லாந்த ஆட்சியாளர்கள் முதலாக அவதானிக்கத தவறவில்லை.

***1689ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் கிறிஸ்மஸ் விழாவும் கலாபனையும:***

குருக்களின் பணியின்றி கத்தோலிக்க மறை ஒளிமங்கிக் கொண்டிருந்த மூன்று தசாப்தங்களின் பின், வாஸ் அடிகளாரின் பணியினால் ஏறக்குறைய இரண்டு வருடங்களாக அந்த ஒளி மீண்டும் சுடர் விட ஆரம்பித்தது. இந்நிலையில் இலங்கைத்தீவின் பிறபாகங்களின் கத்தோலிக்க மறையின் நிலை கவலைக்குரியதாக வேயிருந்தது. அந்த இடங்களுக்குச்சென்று வேறு குருக்களின் வருகையை எதிர்பார்த்திருந்து முற்றிலும் இயலாத விடயம் அங்கும் ஏதாவது பணியாற்றுவதாக இருந்தால் அதற்கும் வாஸ் அடிகளாரை தவிர வேறு எவரையும் எதிர்பார்த்திருக்கவும் முடியாது. இந்தச் சிக்கலைத்தீர்ப்பதற்கு 1689ம் ஆண்டு கிறிஸ்மஸ் விழாவின்போது யாழ்ப்பாணத்தில் நடந்த நிகழ்வு இறைபராமரிப்பு ஏற்படுத்திக்கொடுத்த தீர்வாகவே அமைந்தது.

வாஸ் அடிகளார் யாழ்ப்பாணத்தில் முதல் பணிபுரிந்த காலத்தில் (1687-1689) அங்கு ஒல்லாந்த ஆட்சியதிகாரியாக இருந்தவன் கென்றிக் எட்றியன் வான் றீட் என்பவன். இவன் முன்னர் தென் இந்தியாவில் கத்தோலிக்க மதத்தை தடைசெய்ய முயன்று அங்கு விசுவாசத்தில் உறுதியுடன் இருந்த பரதகுல மக்களால் அவமானத்துக்குட்பட்டு தோல்வி கண்டவன். தற்போது யாழ்ப்பாணத்தில் கத்தோலிக்க மதம் புத்தெழுச்சி பெறுவதை இவனால் பொறுத்தக் கொள்ள முடியவில்லை.

யாழ்ப்பாணத்தில் திடீரென ஏற்பட்ட கத்தோலிக்க மத புத்தெழுச்சிக்குப்பின் தென் இந்தியாவில் இருந்ததைப் போன்று ஒரு யேசு சபைக்குரு மறைமுகமாக இருந்து செயல்படுவதாகச் சந்தேகித்தான். மறைந்திருந்தும் இக்குருவைக் கைது செய்ய உதவும் தகவல்களைத்தருவோர்க்குத் தகுந்த சன்மானம் தரவிருப்பதாகவும் அறிக்கை வேறு விட்டிருந்தான்.

வான்றீட் சீற்றம் கொள்ள முன்னர் கத்தோலிக்கராயிருந்து பின்னர் கல்வினிஸத்தைக் தழுவி உயர் பதவியில் இருந்த டொன் பேட்றோ என்பவர் திரும்பவும் கத்தோலிக்க மதத்திற்குச் திரும்பிச் சென்றமையும் ஒரு காரணமாயிருந்த போதிலும் இவருடைய உறவினர் இன்னும் கத்தோலிக்க சமயத்திலேயே இருந்



தும் இவர் ஒல்லாந்தரிடம் நற்பெயர் பெற்றுத் தம் உயர் பதவியையும் தக்க வைத்துக் கொள்ளவும் கல்வினிஸத்தில் பகிரங் கமாகவே இணைந்து செயல் பட்டார்.

டொன்பேட் றோவின் உறவினர்களும் கத்தோலிக்க பொது நிலை தலைவர்களுள் ஒருவராகவும் டொன்பேட்றோவுக்கு நெருக்கமான நண்பருமாக விழங்கிய மனுவல் டொ சில்வாவும் வாஸ் அடிகளாரிடம் டொன் பேட்றோ பற்றி முறையிட்டனர். ஏற்கனவே மனுவல் டொ சில்வா வாஸ் அடிகள் பற்றியும் அவரது பணிகள் பற்றியும் மற்றும் பலர் வாஸ் அடிகளாரின் அறிவுரையால் திரும்பவும் கத்தோலிக்க மதத்தில் இணைந்து கொண்டமை பற்றிக் கூறியிருந்தமையால் அவரது மனச்சாட்சி அவரை உறுத்திக் கொண்டிருந்தது. இவ் வேளையில் வாஸ் அடிகளும் கூறிய அறிவுரையால் டொன் பேட் றோ மனம் மாறி தனது கடந்தகால துர்மாதிரியான வாழ்க்கைக்குப் பொருத்தமான வகையில் பகிரங்கமாகப் பரிகாரம் செய்ய சந்தர்ப்பத்தைத் தேடிக் கொண்டிருந்தார்.

கிறிஸ்மஸ் தினத்தில் ஒரு குரு மூன்று திருப்பலிகள் நிறைவேற்றும் ஒழுங்கு கத்தோலிக்க திருச்சபையில் பல காலமாகக் கடைபிடிக்கப்பட்டு வந்துள்ளது. 1689ம் ஆண்டு கிறிஸ்மஸ் விழாவிற்கும் கூடுதலான மக்கள் திருநாள் திருப்பலியில் பங்கெடுக்க ஏதுவாக வாஸ் அடிகளார் இரவில் சில்லாலையயும் அண்டியுள்ள பகுதிகளிலும் மூன்று இடங்களில் திருப்பலி ஒப்பு கொடுப்பதாக ஏற்பாடாகியிருந்தது. கத்தோலிக்கர்களுக்கு மட்டும் இச் செய்தி மறை முகமாக அறிவிக்கப் பட்டிருந்தது.

ஏதோ ஒரு வகையில் இச் செய்தி வெளியேயும் கசிந்தது. வாஸ் அடிகளை காட்டிக் கொடுத்து அதற்குரிய சன்மானம் பெறக் காத்திருந்த யூதாசுக்குத் இச் செய்தி கிடைத்ததும் வான் றீட்டக்குச் செய்தி சென்றடைந்தது. முன்னா வாஸ் அடிகளாரைப் பிடிக்க மேற் கொண்ட முயற்சிகள் தோல்வியில் முடிந்ததால் மிகுந்த கவனத்துடன் இரகசியமாகத் திட்டமிட்ட செயல்பட்டான். தனது பிரமாணிக்கமுள்ள திறமை வாய்ந்த இராணுவத்தினராகிய இந்தியாவின் கன்னட பகுதியைச் சேர்ந்த பாபா பட்டேம் என்பவனது தலைமையில் மூன்று பிரிவாகப் பிரித்து அனுப்பியிருந்தான்.

ஒரு குறிப்பிட்ட நேரத்தில் மூன்று பிரிவு படையினரும் கிறிஸ்மஸ் விழாத் திருப்பலிக்கென்று மூன்று இடங் களும் குழுமியிருந்த கத்தோலிக்கர் மீது பாய்ந்து அவர்களைக் கைது செய்தனர். பெண்களில் ஆடைகள் முதலாக கிழிக்கப்பட்டு அவமானப்படுத்தப்பட்டனர். எல்லோரும் தாக்குதலுக்குள்ளாக அவமானப்படுத்தப்பட்டு யாழ்ப்பாணக் கோட்டைக்குள் இழுத்துச் செல்லப்பட்டனர்.

ஒவ்வொரு பிரிவு படையினரும் வாஸ் அடிகளார் மற்ற இரண்டு படையினருள் ஒன்றில் அகப்பட்டிருப்பார். என எண்ணிக்கொண்டு கோட்டை வந்தனர். மூன்று பிரிவினரும் தாம் கைது செய்தவாகளுடன் கோட்டைக்குள் வந்த போது அங்கு வாஸ் அடிகள் இல்லாதிருந்தது அவர்களக்கு பெரும் ஏமாற்றமாயிருந்து. வான் றீட் இதனால் மிகுந்த அவமானமடைந்தது மட்டுமன்றி அவனது கோபமும் பன்மடங்காயியது. தனத கோபத்

(தொடர்ச்சி 7ம் பக்கம் பார்க்க)

## திருக்குடும்பத்தின் பாதச் சுவடுகளில்

விழுவதில் அழகு, மழையில் மட்டும் தான்
அழிவதில் அழகு, அலையில் மட்டும் தான்
அழுவதில் அழகு, அருவியில் மட்டும் தான்
வாழ்வதில்அழகு, ஒன்றினைவில்மட்டும்தான்.

"நல்லதோர் குடும்பம் திருக்குடும்பம்
நானிலம் போற்றும் திருக்குடும்பம்"

குடும்பம் என்பது குவலயத்தின் சுருக்கம், வாழ்வின் அத்தியாயம் தொடங்கும் ஊற்று. உன்னத உறவுகள் ஒன்றினையும் கடல், உலகத்துள் வாழ உருவாக்கும் கலைக் கூடம். இவ்வாறு பல்வேறு வரைவிலக்கணங்கள் கூறிக் கொண்டே போகலாம். ஆதியிலே இறைவன் உருவாக்கிய முதல் குடும்பம் ஆதாம் ஏவாள். இவர்களை உருவாக்கி மகிழ்ச்சியில் திளைத்தார் இறைவன், சுதந்திரம் எனும் பெருங் கொடையைக் கொடுத்தார். ஆனால் அவர்கள் அப்பெருங கொடையை தவறாகப் பயன்படுத்தினர். மாற்றமுடியவில்லை இவ்வுலகை. இரக்கமே உருவான இறைவன் தம் மகனை இவ்வுலகிற்கு இதயமுவந்து அனுப்ப குடும்பம் ஒன்றைத் தேடினார். இறையவன் உருவாகும் குடும்பமாய் திகழ்வது திருக்குடும்பம். இறை சித்தத்தை ஆசித்து நேசித்து தேடினார்கள் அவர்கள்.

யேசு அன்னை மரியிடமும் தந்தை சூசையிடமும் உருவாக்கம் பெற்று இறை திட்டம் நிறைவேற உழைத்திட்டார். இன்றும இக்குடும்பம் எல்லாக் குடும்பங்களுக்கும் முன்மாதிரியாகத் திகழ்கின்றது. பரிசுத்த இக்குடும்பம் இம்மண்ணில் வாழ்ந்த வாழ்வை வாழ ஒவ்வொரு குடும்பமும் இன்று விசேட அழைப்புப் பெற்றிருக்கின்றது.

"கண்ணாடி முகத்தைக் காட்டுகின்றது
கடிகாரம் மணியைக் காட்டுகின்றது.
கலண்டர் தேதியைக் காட்டுகின்றது
திருக்குடும்பம் வாழ்வை எமக்கு காட்டுகின்றது"

அந்த வாழ்வை அடியேற்றி வாழும் சபையே திருக்குடும்ப சபையாகும். இச்சபையானது பல்வேறு அங்கத்தவர்களைக் கொண்டு பல்வேறு பணியின் மூலம் திருக் குடும்பவாழ்வை வாழ்கின்றது.





(தொடர்ச்சி 10ம் பக்கம் பார்க்கவும்)


## விண்ணக வாழ்வின் 2ம் ஆண்டு நினைவலைகள்

"கிறிஸ்து நமக்காகத் தம் உயிரைக் கொடுத்தார்
இதனால் அன்பு இன்னதென்று அறிந்தோம் -
ஆகவே நாமும் நம்முடைய சகோதரர்களுக்காக நம்
உயிரைக் கொடுக்க கடமைப்பட்டிருக்கிறோம்".
(1 யோவான் 3:16)

மலர்களே மனிதர்கள்! தான் விரும்புகின்ற
மலரைக் கடவுள் பறித்துக் கொள்கிறார்.
இதனாலன்றோ இவ்வுலகில் வாழ்ந்தது
போதுமென்று
இறைவன் அன்புடன் மகிழ்வாக
அழைத்துக் கொண்டார்.

அன்பும் அமைதியும் அருளும் தந்தாய்!
இவ்வுலக வாழ்வை இனிதே முடித்துக்
கொண்ட எம் அன்புச் சகோதரனின்
ஆன்மாவை உம் திருப்பாத கரங்களில்
ஒப்படைக்கின்றோம். இவ் ஆன்மாவின்
பாவப் பிழைகளை உம் திரு இரத்தத்தால்
கழுவி அன்புக் கரத்தால் துடைத்து உம்
விண்ணக மகிமையில் இணைத்தருள
இரந்து வேண்டி எம் செபங்களை
கண்ணீர் காணிக்கையாக்குகின்றோம்.
ஆமென்.

பிரிவுத் துயரில் நினைந்துருகும்
குடும்பத்தினர்.



மருசலீன் – யஸ்ரின்றாஜ் (றெனி)

அன்னையின் கரங்களில் 14-09-1983

இறைவனின் கரங்களில் 18-12-2008

புலோப்பளை மேற்கு
பளை.

Advt-102/10


## யாழ்ப்பாணத்தில் 1689ம் ஆண்டு...... (6ம் பக்கத்தொடர்ச்சி)

மும் பன்மடங்காயியது. தனது கோபத்தைப் பிடிபட்டவர்கள் மீது காட்டலானார்.

கைது செய்யப்பட்டவர்களில் பெண்களும், சிறுவர்களும் கடும் எச்சரிக்கைக்குப் பின் விடுவிக்கப்பட்டனர். எல்லா ஆண்கள் மீதும் ஒல்லாந்த அரசின் கட்டளையை மீறியதற்காக அபராதம் விதிக்கப்பட்டது. யாழ்ப்பாணக் கத்தோலிக்கரின் தலைவர்கள் என கருதப்பட்டவர்கள் மீது தான் அவன் கடும் கோபம் கொண்டிருந்தான். எனவே அவ்வாறான தலைவர்கள் எட்டுப் பேரை மட்டும் பிரித்தெடுத்து மற்றையோர்க்கு ஒரு பாடமாக இவர்களை கடும் சித்திரவதைகளுக்குள்ளாக்கிக் கொல்வது அவனது திட்டமாக இருந்து. இவ்வாறு பிரித்தெடுக்கப்பட்டவர்களுள் டொன் பேட்றோவும் அவரது நண்பன் மனுவல் டொசில்வாவும் அடங்கியிருந்தனர்.

வான்றீட்டுடைய சித்திரவதைகளுக்குள்ளாக வேண்டிய எண்மர் பட்டியலில் டொன் பேட்றோவின் பெயர் தான் முதலில் இருந்தது. முன்னர் சலுகைக்காக கத்தோலிக்க திருச்சபையை விட்டு கல்வினியத்தை தழுவியது போலவே தற்போதும் கொஞ்சம் நெருக்கடி கொடுப்பதால் டொன் பேட்றோ திரும்பவும் கல்வினியத்தை தழுவலாம் என்று வான் றீட் எதிர்பார்த்த இருக்கலாம். ஒன்றன் பின் ஒன்றாக கலாபனைகள் நிறைந்திருந்த திருச்சபையின் ஆரம்ப கால வரலாற்றில் ஒரு கலாபனையில் பல மற்ற இறை நம்பிக்கை கொண்ட கிறீஸ்தவர்கள் சிலர் தமது தவறை பின் உணர்ந்து மனம் வருந்தி அடுத்த கலாபனையில் மறைசாட்சிகளான வரலாறு உண்டு. அது போல தமது முன்னைய தவறுகளுக்குப் பிராயச்சித்தம் செய்யத் தகுந்த சந்தப்பத்தைத் தேடி கொண்டிருந்த டொன் பேட் றோ திரும்பவும் கல்வினியத்தை ஏற்றுக் கொண்டால் மன்னிப்புக் கிடைக்கும் என்ற சலுகையை முற்றாக நிராகரித்து கசையால் அடிபடுவதை மகிழ்வுடன் ஏற்றுக் கொண்டனர். மற்ற எழுவரைப் போல்லாது இவர் தனிமைப் படுத்தப்பட்டு ஆளுனன் வான் றீட் முன்னிலையிலே அடிக்கப்பட்டார். நம் ஆண்டவராகிய இயேசு கசையடிபட்டது போவே தமக்கும் ஒரு சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு வேதனைகள் மகிழ்வுடன் ஏற்றுக் கொண்டனர். இந்தக் கசையடி எவ்வாறு இரக்கமின்று கடுமையாக இருந்தது என்றால் அவர் அந்த இடத்திலேயே மரணிக்காவிடிலும் அடிகளின் அகோரத்தினால் விரைவிலேயே தமது இன்னுயிரைக் கையளித்தார். இவ்வாறாக புத்தெழுச்சி பெற்ற இலங்கைத் திருச்சபையின் ஒல்லாந்தர் காலத்து முதல் மறை சாட்சியானார்.

தமது தோழர்கள் எழுவருக்கும் தமக்குக்கிடைத்தது போன்ற சாட்டையடி கிடைக்கவிருந்தது என்று நன்கறிந்த டொன் பேட்றோ தாம் இறக்குமுன் அவர்களிடம் மன உறுதியுடன் கிறீஸதுவின் சிலுவையைச் சுமந்து பேதகனுக்கு(வான் றீட்டுக்கு)த் தகுந்த பதிலடி கொடுக்கும் படி வேணடியிருந்தார். டொன் பேட் றோவுக்கு விடுக்கப்பட்டது போன்று மற்ற எழுவருக்கும் கத்தோலிக்க சமயத்தை மறுதலித்துப் பகிரங்கமாகக் கல்வினிஸத்தை ஏற்றுக் கொண்டால் மன்னிப்பு மட்டுமல்ல பல சலுகைகளும் தரப்படும் என்ற விண்ணப்பம் விடுக்கப்பட்டது. ஒருவர் பின் ஒருவராக இவ்விண்ணப்பத்தை முற்றாக நிராகரித்தனர். இவ் விண்ணப்பம் திருப்பத் திருப்ப விடுக்கப்பட்ட போதும் அவர்கள் தமது மனவுறுதியில் நிலைத்திருந்ததனர். இவ்வாறாக அவர்கள் முதலில் நிராகரித்து அவர்கள் தமது மனவுறுதியில் நிலையாயிருந்தனர். இவ்வாறாக அவர்கள் முதலில் நிராகரித்த போது அவர்களது சொத்துக்கள் எல்லாம் அரசுடமையாக்கப்பட்டது. இரண்டாம் முறையும் நிராகரித்த போது அவர்களுக்கு ஆயுட் கால சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. மூன்றாம் முறையும் நிராகரித்த போது சாட்டையால் அடிக்கப்பட்டார்கள். எந்தவித சித்திரவதையாலும் அவர்களது மனவுறுதியை தகர்க்க முடியவில்லை. இந நிலையில் அவர்கள் சங்கிலிகளால் பிணைக்கப்பட்டு அந்நேரத்தில் பாரிய திருத்த வேலைகள் நிகழ்ந்து கொண்டிருந்த யாழ்ப்பாணக் கோட்டையில் கடுமையான வேலைகள் செய்ய அனுப்பிவைக்கப்பட்டனர். அதனையும் அவர்கள் மகிழ்வுடன் ஏற்றுக் கொண்டனர். அவர்களுள் நால்வர் அவ்வருடம் முடிவடைவதற்குள்ளாகவே இறந்து விட்டனர். மற்ற மூவரும் இன்னும் சில நாட்களில் இறைவனடி சேர்ந்தனர்.

இந்த எண்பரும் சித்திரவதைகளை வீரத்துடன் தாங்கி, குருதி சிந்தி தம் இன்னுயிரை ஈந்து மறைசாட்சிகளானமை மற்ற கத்தோலிக்கருக்கு ஒரு சிறந்த முன்னுதாரணமாக விளங்கியது.

வாஸ் அடிகளின் $2\frac{1}{2}$ வருட கால யாழ்ப்பாணப் பணியின் முடிவில் நிகழ்ந்த கிறிஸ்மஸ் தின குருவேட்டையும் தொடர்ந்து எண்மர் தமது குரதி சிந்தி மறைசாட்சிகளான நிகழ்வும் இலங்கை முழுவதற்கும் அவரது பணிக்கதவுகளை திறந்து விடும் நிகழ்வாகவே அமைந்தவை. இறை பராமரிப்பினை ஏற்பாடாகவே இருந்தது எனலாம்.

1689ம் ஆண்டு கிறிஸ்மஸ் தின நிகழ்வுக்கு பின்னும் வாஸ் அடிகள் யாழ்ப்பாணக் குடாநாட்டில் தங்கியிருப்பது ஆபத்தை விலைக்கு வாங்குவதற்கு ஒப்பாகும் என்றுணர்ந்த கத்தோலிக்கர் அவரையும் யோனையும் பாதுகாப்பாக வன்னிப்பகுதிக்கு அழைத்துச்சென்றனர். இக்கத்தோலிக்கர் ஏற்பாடு செய்த சில வழிகாட்டிகளுடன் வாஸ் அடிகளார் கண்டியரசனின் ஆட்சிக்குட்பட்ட புத்தளம் சென்றனர்.

புத்தளம் அந் நாட்களில் இந்தியாவுடனும் இலங்கையின் மற்றப் பகுதிகளும் இடையிலான போக்குவரத்துக்கும் வர்த்தகத்திற்கும் கேத்திர முக்கியத்துவம் வாய்ந்த இடமாக இருந்தது. புத்தளம். முன்னர் போர்த்துக்கேயர் காலத்தில் செழிப்பான மறைத்தளமாக இயேசுவைக் குருக்களால் உருவாக்கி வளர்க்கப்பட்டிருந்தது. இங்கு ஒல்லாந்தரின் கெடுபிடிகள் இல்லாதிருந்தாலும் இங்கிருந்த கத்தோலிக்கர் குருக்களோ அருட்சாதனங்களோ இல்லாத நிலையிலேயே வாழ்ந்தனர். வாஸ் அடிகள் புத்தளம் சென்ற போது ஏறக்குறைய 1000 கத்தோலிக்கரையும் அவர்களது அழியாத ஆலயத்தையும் கண்டார். வாஸ் அடிகளாரின் பணிகளால் வரட்சி நிலையிலிருந்த அவர்களது இறைநம்பிக்கை புத்தெழுச்சி பெற்றது. புத்தளத்திலிருந்து கோவாவிலிருந்த தமது தலைமைப்பீடத்துடன் இலகுவாகத் தொடர்பு கொள்ளக்கூடியதாயிருந்தது.

புத்தளப்பகுதியிலும் பார்க்க பெரும் எண்ணிக்கையான கத்தோலிக்கர் நீர்கொழும்பு, கொழும்பு பகுதிகளில் இருந்தனர் வாஸ் அடிகள் விரும்பியிந்தால் அப் பகுதிகளுக்கு மறைமுயமாக சென்றிருக்கலாம். ஆனால் அப்பகுதிகளிலும் யாழ்ப்பாணத்தைப் போன்று ஒல்லாந்தருடைய கத்தோலிக்க மதத்திற்கெதிரான தடைச்சட்டங்கள் நடைமுறையிலிருந்தன. எனவே அப்போதைக்கு அதனை தவிர்த்தார்.

கடைசி இரண்டு, மூன்று தலைமுறைகளாக கண்டியரசர்கள் கத்தோலிக்க சமயத்தை மிகவும் நட்புறவுடன் நோக்கி வந்தனர் என்றும், கத்தோலிக்க குருக்களுடன் மிகுந்த மதிப்புடன் நடந்து வந்தனர் என்றும் வாஸ் அடிகளார் அறிந்திருந்தார். எனவே, கண்டிக்கு சென்று அங்கிருந்த வண்ணம் சந்தப்பம் சூழ்நிலைக்கேற்ப ஒல்லாந்தர் ஆட்சிக்குட்பட்டிருந்த கொழும்பு, நீர்கொழும்பு மற்றும் மன்னார் மாந்தோட்ட பகுதி யாழ்ப்பாணம் ஆகிய இடங்களுக்கு மறைவாக சென்று வரலாம் என்று திட்டமிட்டார். இத்திட்டம் வாஸ் அடிகள் பின்னர் அவரும் அவருக்குதவியாக வந்த குருக்களும் இலங்கை முழுவதிலும் இருந்த கத்தோலிக் கருடைய நலன்களை கவனிக்கவும் மற்றும் மற்றவர்களுக்கு நற்செய்தியை அறிவித்து புதியவர்களை கத்தோலிக்க மதத்தில் இணைக்கவும் உதவியது எனலாம்.

இந்த வேளையில் கண்டியிலிருந்து வியாபார நோக்கத்திற்காக புத்தளம் வந்த கத்தோலிக்கர் சிலர் கண்டியிலும் பெரும் எண்ணிக்கையிலான பல ஐரோப்பிய நாடுகளையும் சுதேசிகளையும் மற்றும் கலப்பினத்தவர்களையும் உள்ளடக்கிய கத்தோலிக்கர் தமது மத கடமைகளை நிறைவேற்ற முடியாத நிலையில் இருப்பதாகவும் குருக்கள் அங்கு பணிபுரிய கண்டியரசன் விமலதர்மன் ஆதரவானவன் என்றும் கூறினர்.

அந்தோனியோ சோட்டோ மயோர் என்ற செல்வாக்குள்ள போர்த்துகேய கத்தோலிக்க வணிகர் தான் கண்டியரசரிடமிருந்து வாஸ் அடிகள் கண்டி வந்து பணிபுரிய வேண்டிய உத்தரவை பெற்றுத்தருவதாக உறுதியளித்து தம்முடன் வாஸ் அடிகளாரையும் யோனையும் அழைத்து சென்றார் துரதிஸ்த வசமாக வாஸ் அடிகளாருக்கு வேண்டிய அரச உத்தரவை பெறுவதற்கு நன்சிளார் டெலா நெறோல் என்ற பிரஞ்சுகாரனது உதவியை நாடினார். இவன் கத்தோலிக்க எதிர்ப் போக்கைக்கடைப்பிடித்த ஒரு மாற்று சபையை சேர்ந்தவன். இவன் கபட நோக்கத்துடன் வாஸ் அடிகள் ஒரு உளவாளி என்ற வதநதியைக்கிளப்பி விட்டான். உளவாளிகளை அரசன் மிகவும் கடுமையாக நடந்துபவன் என்று இவனுக்கு நன்கு தெரிந்தது.

நேறோனுடைய குற்றச்சாட்டைக் கேள்வியுற்ற அரசன் வாஸ் அடிகளையும் சங்கிலியால் பிணைத்துக் கைதியாக கொண்டுவரப்பட்டு சிறையில் அடைபட்டமை அவமானத்தையும், வேதனையையும் அடிகளாருக்கு ஏற்படுத்தினாலும் இறை பராமரிப்பு ஒரு மேலான நன்மைக்கு வழி வகுத்தது.

வாஸ் அடிகளார் உளவாளி என்ற குற்றச்சாட்டுடன் ஒரு கைதியாக கொண்டுவரப்பட்டதால் அரசனும் மற்றவர்களும் அவரை உன்னிப்பாக அவதானிக்கத் துவங்கினர். அடிகளாரது எளிமையும் பரிசுத்த தனமும் யாரையும் நோகடிக்காத தன்மையும் அரசனுடைய எண்ணத்தை மாற்றியது மட்டுமல்ல அவர் மீது அவனுக்கு ஒரு தனிமரியாதையையும ஏற்படுத்தியது. அரசனின் நன்மதிப் பால் அடிகளாருக்கு சுதந்திரமாக கண்டி அரசனின் ஆட்சிக்குட்பட்ட பகுதிகளில் மட்டு மல்ல மற்ற இடங்களுக்கும் சென்று வரக் கூடிய பரந்தளவிலான சுதந்திரமும் மற்றும் சகல விதமான உதவிகளும் வழங்கப்பட்டன. கலாபனைகளாகவும் சோதனைகளாகவும் விளங்கிய நிகழ்வுகள் கத்தோலிக் திருச்சபை அழியாமல் காப்பற்றப்பட மட்டுமல்ல புத்தெழிற்சியுடன் வளரவும் வழிவகுத்தன.

S.V.B. மங்களராஜா
புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

நூலகம்
பாணம்.

## மீண்டும் பிறப்பாயா?



மீண்டும் பிறப்பாயா?
எம் மண்ணில் மீண்டும் பிறப்பாயா?
மாடடைக் குடில் வேண்டாம்
மாந்தர் எம் மனங்களில் நீ பிறந்து விடு
இடையர்களின் தூது வேண்டாம்
இடர் சுமந்த பாவிகள் உள்ளோம்
பத்திரிகை வரிகளெல்லாம் – இன்றும்
பரிதவிக்க வைக்கின்றது
பலியெடுப்பும் படையெடுப்பும்
பத்தாமல் தொடர்கின்றது
மீளக் குடியமர்ந்தால்
மீளாத்துயர்தான் ஆறிடுமோ!
கட்டப்பட்ட எம் வாழ்வின்
கட்டுக்கள் தான் அகன்றிடுமா?
பெற்றெடுத்த குழந்தையொன்று
பேச்சின்றி அழுகின்றது
துச்சமென மதிக்கும் உயிர்களின்
தூறல்கள் இன்றும் தொடர்கின்றன
இத்தனைக்கும் முடிவு நீயே!
இப்பொழுதே பிறந்துவிடு...
இத் தரைமீட்டிடவே
இங்கிதமே எம் மண்ணில் பிறந்துவிடு!

மேரி துஷாந்தினி. பி
புனித யாகப்பர் ஆலயம்,
குருநகர், யாழ்ப்பாணம்.

## வந்தது மார்கழி மாதம்

பாடி மகிழ்ந்திட வந்தது மார்கழி மாதம்
பாமரர் நாம் மகிழ்ந்து களித்திட
பாதைகள் பல வகுத்திட
பாவக்கறைகள் அகற்றி ஒளியேற்றிட
பாலகன் யேசு உதித்திட்ட செய்தியை
பாடி மகிழ்ந்திட வந்தது மார்கழி மாதம்

அமைதியின் அருட்சுடராய்
அல்லலின் தேற்றரவாளனாய்
அனாதைகளின் ஆதரவாளனாய்
அகிலத்தை ஒளிர்விக்கும் செஞ்சுடராய்
அஸ்தமிக்கா எம் இயேசு பாலனை
அன்பாய் தழுவித் தொழுதிட வந்தது மார்கழி மாதம்

மானிலத்தின் மைந்தனாய்
மானிடர் குறை போக்கிடும் செம்மலாய்
மாசற்றவர் தோழனாய்
மாட்சியே உரு ஜோதியாய்
மாட்டுத் தொழுவத்தில் உதித்திட்ட – யேசு பாலனை
மாபரர் வணங்கிட வந்தது மார்கழி மாதம்

சண்டைகளின்றி சமாதானம் நிலைத்திட
சமத்துவம் எங்கும் பொங்கி நிறைந்திட
சலனங்கள் இன்றி சனங்கள் வாழ்ந்திட
சமர்ப்பணம் கொண்டு உறவுகள் உறைந்திட
சரித்திர நாயகனாய் உதித்திட்ட – இயேசு பாலனை
சதங்கை கொண்டு ஆடிப் போற்றிட – வந்தது. மார்கழி மாதம்



ஆக்கம்: கலைப்பிரியன்
பெரியவிளான்

## மீட்பர் வரவால் மாற்றம் வருமா?

குழந்தை வடிவில்
குவலயம் மீட்டிட
குடில்தனில் பிறந்த
ஒளிச்சுடரே பாலகனே

மனிதம் தொலைந்துவிட்ட
எம்மண்ணில் மீண்டும்
புதுமனித வசந்தம்
தோன்றிடுமா?
புனிதன் உம் வரவாலே

பெற்றவரை பறிகொடுத்து
பாதையறியாது பரிதவிக்கும்
பாலகரின் வாழ்வு
பசுமையாகுமா?
பரமன் உம் வரவாலே

சிறைக்கதவே வாழ்வென
முடங்கி வாழும் உள்ளங்கள்
விடுதலை பெற்றிடுமா?
புண்ணியன் உம் வரவாலே

வீங்கிய விழிகளோடு
புலம்பியழுது வாழும்
அகதி வாழ்வு மாறிடுமா?
மன்னவன் உம் வரவாலே

சுயநலம் அழிந்து
துயரங்கள் நீங்கி
மனமாற்றம் பெற்றிடுமா?
மனித மனங்கள்
மீட்பர் உம் வரவாலே.

எ.மேரி அருள்மதி
ஞானப்பிரகாசர் வீதி,
மல்வம், உடுவில்.

## எம் இதயத்தில் பிறந்திடுவாய்!

விஞ்ஞானம் பெருகி, வேண்டுவன பெற்று,
வீணாகி, அழிகின்றது உலகம்
மெஞ்ஞானம் சிறிதின்றி, மேம்படும் ஒழுங்கின்றி,
மேல் விரித்தாடுகிறது கலகம்
அஞ்ஞானம் போக்க வந்தாய்
அழிவினை அழிக்க வந்தாய்
எஞ்ஞான்றும் எங்கள் வாழ்வு மாறவில்லை
ஏற்ற வழி நாம் ஏறிச் செல்லவில்லை
எங்கு பிறந்திடுவாய்? எப்போது வந்திடுவாய்?
என்னென்ன செய்திடுவாய் எங்களைக் கரையேற்ற?
மங்குகின்ற எம் மனங்கள் மாசு துடைத்து நாம்,
மனிதராய் வாழ்ந்திட எம் இதயத்தில் பிறந்திடுவாய்!

ரீ. அடைக்கல நாயகி
புனித யாகப்பர் ஆலயம்.
17/2 மத்திய கிழக்குவீதி, குருநகர்.

## பாலன் ஏன் பிறந்தார்?

காரிருள் வேளை
கடுங்குளிர் காலை
கர்த்தனே ஏன்
பிறந்தாய்?
பரிசுத்தனே ஏன்
பிறந்தாய?

பாவங்கள் போக்கி
தீபங்கள் ஏற்றும்
திருப்பலிக்காய்
பிறந்தாய் – ஓ
திருச் சரீரம் தந்தாய்

காரிருள் வேளை
கடுங்குளிர்...
மாட்டுத்தொழுவத்திலே

மன்னவா என்ன
படித்தாய்?
உலகினை மீட்பதற்கா?
முதற்ப்பாடம் நீ
படித்தாய் – ஓ
இதற்காக நீ மரித்தாய்

காரிருள் வேளை
கடுங்குளிர்....
என்னைப் போல் ஏன்
பிறந்தாய் – எனை
உன்னைப் போல்
ஆக்கிடவோ – ஓ
எனை
உன்னைப் போல்
மாற்றிடவே

வீமன் தனுசன்
லிகோரியார் ஆலயம்,
சாவகச்சேரி.

## எம் மத்தியிலும் வந்துதிப்பாய்

பாலகனாய் பாரினில் உதித்த பாலகனை
பங்கோடு வேண்டுகின்றோம் எம் அவனியில் அமைதியினை
மொட்டுகளின் மலர்வுக்காய் காத்திருந்தோம்
முரட்டுக் குண்டுகள் தான் எம் மண்ணில் மலர்ந்து வெடித்தன

கோமகனாய் உதித்த பாலகனே – எம்
கோசங்களை கொஞ்சம் கேளாயோ
அல்லலுற்ற அகதிகளாய்
அவனியில் நாம் திரிகின்றோம்

பெற்றோரை இழந்தோம், பிள்ளைகளை இழந்தோம்
பொருள் பண்டங்கள் சொத்துக்களையும் இழந்தோம்
போதும் ஐயா எமக்கிந்த அகதி நிலை
உன் வரவால் புதுப்பிறப்பை தந்திடுவாய்

சா. ஆன் லக்சினி
புனித சூசையப்பர் ஆலயம்,
அச்சுவேலி.

## உள அமைதி தந்திடு பாலகா!

பாவத்தில் வீழ்ந்திட்ட மனுக்குலத்தை
மனுவுருவில் பிறந்து மீட்டிட்ட மனுமகனே!
மண்ணுலகின் மானிடர் நமக்கு – உன் பிறப்பு
மன அமைதி தந்திட வேண்டும்.

காலத்தின் சரிவுகளால் தடுமாறிவிட்ட எம்மவர்க்கு
கருத்தாக அமைய வேண்டும் உன் பிறப்பு விழா
காயப்பட்டு மீளெழுந்த எம் உறவுகளுக்கு
ஊன்றுகோலாக உன் உதயம் மிளிர வேண்டுழ்...

நம்மவரின் வருங்காலங்கள் வசந்தமாய் மலர்ந்திடவும்
வேதனையின் வடுக்கள் சிந்தை விட்டகலவும்
துன்பம் நீங்கி மகிழ்வின் நிறைவைக் காணவும்
அகத்தின் ஒளியாய் உதித்திடு மன்னவனே!

பெயரோடு மட்டும் செயலற்று நின்றுவிட்ட அமைதியல்ல.
நிலையான வாழ்வளிக்கும் உன் அமைதி வேண்டும்.
எம் மனக்குடிலில் அமைதியின் குழந்தையாய் பிறந்து.
உள அமைதி தந்திடு எம் இனிய பாலகா!

- பொ. சுதர்சினி -
பண்டத்தரிப்பு.

## எம்மைத் தேடி இங்கு வருவாயோ?

மீட்க வந்த தேவா - எம்மைத்
தேடி வருவாயோ!
வாடி நிற்கும் எம்மை
தேற்ற வருவாயோ?
ஆவின் தொழுவத்தில் பிறந்த தேவா
நாடி வருவாயோ?

மூன்று தசாப்த போர்
முடிவுக்கு வந்து வருசம் ஒன்றாச்சு
விசும்பு காணா நான்கு சுவருக்குள்
கைதிகள் வாழ்க்கை புதிராச்சு
தடுப்பு முகாம் தடைகள் தளர்த்தவில்லை
பீதி தணியவில்லை - எங்கள்
சுமைகள் குறையவில்லை
எம் அன்னையரின் புலம்பல் நீலாம்பரியானதே
ஆவின் தொழுவத்தில் பிறந்த தேவா
எம்மைத் தேடியிங்கு வருவாயோ?

நாளுக்கு நாள் விலைவாசி ஏற்றம் - இதனால்
குடும்பத்தில் திண்டாட்டம்
கொள்ளை, கப்பம், நடமாட்டம் - அதனால்
இரவிலே மன்றாட்டம்
போட்டி, பொறாமை, பித்தலாட்டம்
சமூகத்தில் எல்லாம் அரங்கேற்றம்
ஆவின் தொழுவத்தில் பிறந்த தேவா
தேற்ற இங்கு வருவாயோ?

தொலைபேசி தொல்லை பேசியாச்சு
தொலைக்காட்சி
உறவுகளை தொலைத்த தொடராச்சு
வெளிநாட்டு மோகம்
கல்யாணம் வியாபாரமாச்சு
உல்லாசப் பயணிகள் வரவு
கலாச்சார சீரழிவாச்சு
ஆவின் தொழுவத்தில் பிறந்த தேவா
நீதி நிலைக்க...
அமைதி பிறக்க...
எம்மைத் தேடியிங்கு வருவாயோ?

ஜெ. பரிமளா
நாரந்தனைப் பங்கு.

## மீட்பர் பிறந்தார்

ஆராரோ ஆரிரரோ
ஆராரோ ஆரிரரோ

கண்ணே மணியே முத்தே என்னுயிரே
தேனே கனியே தெவிட்டாத தெள்ளமுதே
கண்ணே மணியே முத்தே என்னுயிரே
தேனே கனியே தெவிட்டாத தெள்ளமுதே

மண்ணில் வந்த மன்னவரே
விண்துறந்த என்னவனே
தேடிவந்த நாயகனே
பாலகனே கண்ணுறங்கு

கண்ணே மணியே முத்தே என்னுயிரே....

பட்டாடை உடையுமில்லை
பாலுமில்லை பழமுமில்லை
கர்த்தர் உன்னைக் காத்தருள்வார்
இந்நாள் நன்நாள்
கண்ணே நீயுறங்கு

கண்ணே மணியே முத்தே என்னுயிரே...

பள்ளங்களை மேடுகளாய்
தாழ்ந்தோரை மேலுயர்த்தி

மனங்களில் இருளகற்றி
மகிழ்வுலகம் படைத்திடுவாய்

வீமன் தனுசன்
லிகோரியார் ஆலயம், சாவகச்சேரி.

## பாலகன் பிறப்பு இனிதாய் அமையட்டும்



அ.ம.அனோஷான்
புனித மடுத்தீனார் குருமடம்
யாழ்ப்பாணம்.

கார்மேகம் ஒன்று கூடி
மழையால் பாவடிக்க
இடியும் மின்னலும்
இதமான தாளம்போட
இறைமகன் வரவை
காத்திருக்கும் அனைவருக்கும்
அனைத்தையும் இழந்து
ஏங்கிடும் மக்களுக்கும்
பாலகன் பிறப்பு
இனிதாய் அமைந்திடவே
வேண்டிடுவோம் நாம் ஒன்றாய்
திருமகன் யேசு பிறந்த நாளில்

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.



# கிறிஸ்து பிறப்பு விழா



தென்றல் காற்று வந்து எம்மை
புதுப் பிறப்பு பெற செய்து சென்றது
இந்த உலகின் கதாநாகன்
உலகின் விடி வெள்ளியாய் பிறந்தார்

பாரில் உள்ள மாந்தர் அனைவரும்
அக மகிழ்ந்து கொண்டாடினர்
நாயகனாம் எம் பாலன் இயேசு
உலகின் சுடராய் அவனியில் அவதரித்தார்

பாவங்கள் அகற்றி புது வாழ்வு தந்து
மண்ணின் மைந்தனாய் எம் பிரான்
உலகில் சமாதானம் மிளிர
உலகின் விடி வெள்ளியாய் பிறந்தார்

அவனியில் அவலங்கள் மறைய
உலகில் அமைதி கிடைக்க
தன்னை எமக்காய் தந்திட்ட
பாலன் உலகின் சுடராய் அவனியில் பிறந்தார்.

தங்கவடிவேல் வினோதிகா
சற்கோட்டை பங்கு,
சவேரியார் ஆலயம்.

# நீதி தா? பாலகனே



அமைதியின் மன்னவனே
ஆறுதலின் பாலகனே
மீண்டும் உம் வரவாய் - எம் உள்ளம் மகிழ்கின்றது

எத்தனை எத்தனை குழப்பங்கள் எம் உள்ளத்தே
அதை நீ அறிந்தாயோ - பாலகா
மானிட யுகம் மிருகமாய் மதிக்கப்படும் - எம் நிலை
காணவா வருகின்றாய் பாலகா
எம் மண்ணிலே நாம் அடிமை
எம் இனத்திற்கு இனி ஏது விடிவு

அதிகார வர்க்கம் தலை தூக்கிற்றே
ஆதரவின்றி பரிதவிக்கின்றோம்
ஆதரவாய் எமக்கு - பாலகா
எம் உள்ளம் மகிழ எம்மை ஆளவா

கண் இமைக்கும் நேரத்தில் குருதிக்கனல் ஓடிற்றே
அதில் குளிர்காய பல உள்ளங்கள் விரும்பிற்றே
இத்தனையும் தாங்கும் உள்ளம் நீதி கேட்டு நிற்கிறதே
நீதியின் பாலகா விடை தா எமக்கு

எம் மண்ணில் நாம் அமைதியாய் வாழ
உம் வரவு எமக்கு ஆசி அளிக்கட்டும்
பாலகா எம் உள்ளத்தில் பிறக்கவா - நீ

ஆக்கம் : M. கவிப்பிரியா

# விடியலைத் தேடி




அன்பால் கட்டுண்டு
பறந்து திரிந்த பறவைக்
கூட்டம் - போல்
அழியாதிருந்த எம் இனம்
நினைவினின்று நீங்காதது தான்
யுத்தத்தின் போர்வையில்
வாழ்வை குலைத்த இன்னல்கள்
சொல்லிட அடங்கா...

மனிதனாய் மண்ணில் - மீண்டும்
விடியலைத் தேடி
வாழ்வின் வழவம் மாற
ஒளியை நோக்கி நட
ஏங்கும் விழிகளில் - சுடராக
மிளிரட்டும் நம்பிக்கை
பாலகன் வரவால்
மலரட்டும் புது வாழ்வு
மாறட்டும் - உந்தன்
மழந்த வாழ்வு....

T.D. குருஸ்
புங்குடுதீவு - 12

# மனித மாண்பைப் பேணிட ☆ வந்தார்



மார்கழித் திங்கள் மாரிக் குளிரிலே
மரிமகன் பிறந்தார் மாடடைக் குகையிலே
மண்ணையும் விண்ணையும் இணைத்திட வந்தார்
மனித மாண்பினைப் பேணிட வந்தார்

மண்ணவர் விண்ணொளியேற்றிட வந்தார்
மன்னிப்பு அருளி மீட்டிட நொந்தார்
இணைந்து போற்றுவோம் இறை மைந்தனை
பணிந்து ஆராதிப்போம் அனுப்பிய தந்தையை

துன்பத்தை விதைத்திட்ட துட்டரை அழிக்கவும்
துணை நின்றழித்த ஒற்றரை வீழ்த்தவும்
துணையின்றித் துவண்ட மானிடம் காக்கவும்
துஞ்சிய ஆன்மாக்கள் மீட்பினை அடையவும்

அஞ்சிய மக்களை அணைத்துக் காக்கவும்
எஞ்சிய மாந்தரை இணைத்து மீட்கவும்
மண்ணில் உதித்தார் மரியின் மைந்தனாய்,
மாண்புடன் பணிந்து ஆராதிப்போம்.

சு. அடைக்கலம்
(தமிழமுதன்)

# என் உள்ளம் பிறப்பாயோ!

மாட்சிமையின் மானிடனே பிறந்திடுவாயோ!
மனிதம் வாழ்ந்திடப், பிறந்திடுவாயோ!
மாண்பு மலர்ந்திடப், பிறந்திடுவாயோ!
மாந்தர் மகிழ்ந்திடப், பிறந்திடுவாயோ!

அகதி வாழ்வு, அகன்றிட வேண்டும்
அடிமை வாழ்வு, ஒழிந்திட வேண்டும்
அன்பின் வாழ்வு, வளர்ந்திட வேண்டும்
அமைதி என்றும், மலர்ந்திட வேண்டும்

கண்ணீர்க் கதைகள், கரைந்திட வேண்டும்
கவலை வாழ்வு, மறைந்திட வேண்டும்
காரிருள் கலைந்திட வேண்டும்
காவிய நாயகன் பிறந்திட வேண்டும்

பாவ உள்ளம், தான் அகற்றி,
குழந்தை உள்ளம், நான் பெறுவேன்,
பணிவுடனும் பண்புடனும் மன்னித்து நான் வாழ்வேன்
அருளின் உருவாய் அமைதியின் வடிவாய்
எம் உள்ளம் பிறந்திடுவாயோ.

ஸ். யசிந்தா
குருநகர், யாழ்ப்பாணம்.

# கிறிஸ்துவின் பிறப்பும் சமாதானமும்

"உங்களுக்கு சமாதானம்"
கபிரியேல் தூதனின்
குரல் முழங்கிட
சமாதான பிரபுவாக
உதித்தவர் எம் கிறிஸ்து
கடவுளின் மகன்
ஏழை வடிவானார்
சமாதானத்தின் அடையாளம்
தாழ்ச்சி என புகட்டிட
உலகின் பாவத்திற்காய்
கழு மரம் ஏறி
சமாதானம் ஈந்தவர்
எம் கிறிஸ்து
இன்று உலகம்
தேடுகிறது சமாதானம்
உள்ளத்து அமைதியே
கிறிஸ்துன் சமாதானம்
எம்மை அர்ப்பணிப்போம்
அயலவர்க்காய் கிடைத்திடும்
கிறிஸ்துவின் சமாதானம்

ஆக்கம்: S. மரியகொரற்றி

# ஆன்மீகத் தேடல் அள்ளிப் பொழியும்

| | | | |
|---|---|---|---|
| ஆன்மீகத் வான்சுடர் | தேடல் மைந்தா | அள்ளிப் வந்தனை | பொழியும் உமக்கு |
| ஆழமான பாழான | விசுவாசம் பாதைகள் | அடியோரில் மூடுவீர் | நிலைக்க சுவாமி! |
| அருட்பணி திருவுளம் | ஊழியம் சுரப்பீர் | அவனியில் திவ்விய | சிறக்க பாலனே! |
| மனமாற்றம் இனங்களை | வீசிவருமா இணைக்கும் | மனுக்குல இறைவளம் | மன்னா! உமதே! |
| சாத்தான் கூத்தாடும் | சூழ்ச்சியில் கோரத்தைக் | சங்காரம் கொற்றவனே! | பெருகாது விரட்டும் |
| இதயம் உதய | திறக்கும் வருகை | இலட்சியத் அபயம் | தீபமே! தருமே! |
| சிறையும் உறையும் | சீற்றமும் ஊழலை | அறையுதே உன்னதா | ஐயா! அறிவீர் |
| வதிவிடம் அகதிகள் | அழிந்து எம்மை | வருவாய் ஆருயிரே! | இழந்த தொடுவீர் |

ஆக்கம்: ஞா. அரியமலர்
மிருசுவில்

# வேண்டும் மாற்றம்

ஆக்கம்: டினேஸ்

மாற்றம் எங்கும் எதிலும் தினமும் கணமும்
இயற்கை முதல் செயற்கை வரை மாற்றம்
மரம் முதல் மனிதன் வரை மாற்றம்
மாற்றத்தின் ஊற்றே உலகின் இயக்கம்
மனிதன் விரும்பியோ விரும்பாமலோ அல்லது
தெரிந்தோ தெரியாமலோ உலகின்
அசைவியக்கம் மாற்றம் காண்கிறது
இவ்வசைவியக்கத்தின் அச்சாணி மனிதன்
உலக மாற்றத்திற்கு உளச்சூழல் மறுக்கிறது
இது ஏன் என்ற வினா எம்மிடம்
எழ மறுக்கிறதா? அல்லது தடுக்கிறதா?
ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் கிறிஸ்து
யூத சமுதாயத்தில் மாற்றத்தை விரும்பினார்
கிறிஸ்து ஏன் கொல்லப்பட்டார்
மாற்றத்தை மனதார விரும்பியதால்
எந்த மாற்றத்தை கிறிஸ்து விரும்பினார்
உள மாற்றத்தினூடான உலக மாற்றம்
ஆனால் இன்று மனம் தவிர்ந்த மற்றைய
அனைத்திலும் மாற்றம் காண மனம் துடிக்கிறது
மாற்றங்களில் முதன்மை மனமாற்றம்
இதுவே கிறீஸ்தவ சாரம் - இந்நிலையில்
மீண்டும் பிறப்போம் கிறீஸ்துவில்
புறப்படுவோம் புது உலகம் படைப்போம்.



# நத்தார் பரிசு

பாரிதனில் எமக்காய் பாலகன் வடிவில்
மரியன்னை மடியில் மழலை கோலம்
கொண்டு, மாமைந்தன் யேசு,
பாவிகள் எளியோர்கள் ஏழைகள்,
தடுப்பு முகாம்களில் உறவுகளை, பிரிந்து
தனிமையில் வாழும்

எம்போன்ற அப்பாவிகளுக்கும்
புதியதோர் வாழ்வைக் கொண்டு வந்து
மார்கழி மாதம் நள்ளிரவு வேளையில்
எம் எல்லோர்க்கும் நத்தார் பரிசாக
தன்னையே குழந்தை வடிவில் கோலம
கொண்டு இவ் உலகில் உதித்த மழலை
யேசுவை நாம் எல்லாரும் இந்த நந்தார்
தினத்தில் எப்போதும் ஒற்றுமையாகவும
சந்தோசமாகவும் அவரை வாழ்த்தி போற்று
வேளையில் அவர் கொடுத்த புது
வாழ்வை நினைவு கூறுகின்றோம்.

கமலியூஸ் றெக்மன்
மெலிஞ்சிமுனை,
ஊர்காவற்றுறை
யாழ்ப்பாணம்.

# புது வசந்தம்

பூமியின் மடியில் பூஞ்சோலை
செடியின் மடியில் மலர்
வானத்தின் மடியில் நிலவு
தாயின் மடியில்...
புது வசந்தம்.

இருண்ட பூமிக்கு வெளிச்சம் கொடுக்க,
மனுக்குலத்தின் விடிவுக்கு விடை கொடுக்க,
இலட்சியத்துக்காக உயிர் கொடுக்க,
புது வசந்தம் உதிர்த்துள்ளது...

சிறைக் கூடங்களில்,
அனாதை விடுதிகளில்,
முதியோர் இல்லங்களில்,
உயிருக்காக போராடுபவர்கள்,
சுதந்திரக் காற்றை சுவாசிக்க,
இன்று மனிதப் போர்வையில்,
புது வசந்தம் உதிர்த்துள்ளது...

ஆக்கம்: ஜின்சி அன்ரனி
பாஷையூர்.

# காவலனின் ஓராண்டின் பதிவுகள் ஒருபார்வையில்...!

**ஜனவரி - 2010**

13.01.2010 - யாழ் ஆயர் வன்னியில் மீள் குடியமர்ந்த மக்களைச் சந்தித்தார்.
10.01.2010 - தியாக தீபம், அருட்பணி மேரி பஸ்ரியனின் 25ம் ஆண்டு நினைவு தினம்.
10.01.2010 - யாழ். ஆயருடன் சனாதிபதி சந்திப்பு.
25.01.2010 - கிறிஸ்தவ ஒன்றிப்பு வார நிகழ்வு.
30.01.2010 - பருத்தித்துறை தூய தோமையார் புதிய தேவாலயத் திறப்பு வைபவம்.
29.01.2010 - வன்னி மறைக் கோட்டத்திற்கான யாழ். ஆயரின் ஆன்மீக விஜயம்.
21.01.2010 - தமிழ்த்தூது தனி நாயகம் அடிகளின் நினைவுப் பேருரை நிகழ்வு.

**பெப்ரவரி - 2010**

13.02.2010 - மண்டைதீவுப் ஆலயப்புனரமைப்பும் இசை மாலைப் பொழுதும் நிகழ்வு.
27.02.2010 - கரித்தாஸ் - கியூடெக் நிறுவனத்தால் சண்டிலிப்பாய் பிரதேசத்தில் 51 குடும்பங்களுக்கு வீடுகள் கையளிப்பு.
12.02.2010 - கொடிகாமத்தில் கணணிப் பயிற்சி நிலையம் கரித்தாஸ் கியூடெக் நிறுவனத்தால் அமைக்கப்பட்டது.
20.02.2010 - சக்கோட்டை, புனித. பிரான்சிஸ் சவேரியார் புதிய ஆலயத் திறப்பு விழா.

**மார்ச் - 2010**

13.03.2010 - தூய அந்தோனியாரின் உடலின் அழியாத திருப்பாகங்கள் (Relics) யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரப்பட்டன.
23.03.2010 - அருட்பணி. M.L. தயாகரன் அவர்களின் "வெள்ளம்" இசைத்தட்டு வெளியீடு.
25.03.2010 - யாழ். மறைமாவட்டக் குருக்களின் தவக்கால ஒரு நாள் தியானம்.

**ஏப்ரல் - 2010**

05.04.2010 - யாழ். ஆயரினால் புனித. பத்திரிசியாரின் உருவச்சிலை கல்லூரியில் திரை நீக்கம் செய்யப்பட்டது.
06.04.2010 - அருட்பணி. யேம்ஸ் பத்திநாதர் அடிகளாரின் குருத்துவப் பணியின் 40 ஆண்டுகள் நிறைவின் நிகழ்வு.
13.04.2010 - நல்லாயன் சபை அருட்சகோதரிகளின் புதிய வரவேற்பு இல்லம் ஆயரினால் திறப்பு.
17.04.2010 - யாழ். மறைக்கல்வி ஆண்டு விழாவும் மறையாசிரியர் சான்றிதழ் வழங்கும் வைபவம்.
24.04.2010 - மண்டைதீவில், ஜிம்பிறவுண் அறிவகம் சிறப்பு விழா.
29.04.200 - பாஷையூர் மண்ணின் மைந்தன் அருட்பணி விக்ரர் ஞானப்பிரகாசம் அ.ம.தி குவெற்றா மறைமாவட்டத்தின் ஆயராக நியமனம்.

**மே - 2010**

06.05.2010 - திருத்தந்தையின் இலங்கைத்தூதுவர் அதி.வந். ஜோசப்ஸ் பிரேறி யாழ். விஜயம்.
15.05.2010 - அருட்பணி. விமல்(அ.ம.தி) அடிகளின்
18.05.2010 - அருட்பணி. சரத்ஜீவன் அடிகளாரின் ஓராண்டு நினைவுதினம்.
.05.2010 - அருட்பணி. சி. ஜெயக்குமார் கியூடெக் நிறுவனத்தின் பணிகளிலிருந்து ஓய்வு.
20.05.2010 - அருட்பணி. M.X. கருணாரட்ணம் அடிகளாரின் மறைவின் இரண்டாவது நினைவு தினம்.
21.05.2010 - "சிறுவர்களுக்கான சிறுவர்", வன்னி திருப்பாலத்துவ சபையின் கொழும்புப் பயணம்.
22.05.2010 - புனித. மாட்டீனார் குருமடத்தில் திருவிழிப்பும் பெந்த கோஸ்தே பெரு விழாவும்.
27.05.2010 - 4 புதிய குருக்கள் யாழ். ஆயரால் திருநிலைப்படுத்தப்படல். "தாயே தஞ்சம் நீயே" என்ற இறுவட்டு வெளியீடு.
28.05.2010 - இளவாலை மறைக் கோட்டத்தைச்சேர்ந்த 200க்கு மேற்பட்ட பீடப்பணியாளர் பண்டத்தரிப்பு பத்திமாபதியில் ஒன்றுகூடல்.
30.05.2010 - யாழ். மறைமாவட்ட இளையோர் எழுச்சி ஒன்றுகூடல்.

**யூன் - 2010**

06.06.2010 - சுவாமி கருணாகரர் நினைவு மண்டபம் சாவகச்சேரி புனித. லிகோரியார் ஆலய வளாகத்தில் திறந்து வைப்பு.
09.06.2010 - புனித. அந்தோனியாரின் திருப்பண்டங்களின் ஒரு பாகம் யாழ். ஆயரால் பாஷையூர் புனித. அந்தோனியார் ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு மக்களின் வணக்கத்துக்காக வைக்கப்பட்டது.
14.06.2010 - குருக்களாண்டின் நிறைவை ஒட்டி யாழ். ஆயர் இல்லத்தில் திரு. இருதயத்துக்கு அர்ச்சிக்கும் தியான வழிபாடு.
24.06.2010 - புனித. மடுத்தீனார் குருமட பெற்றோர் தின விழா.

**யூலை - 2010**

02.07.2010 - யாழ். ஆயரின் பெயர் கொண்ட திருநாள் பாடசாலை மாணவர்களினால் கொண்டாடப்பட்டது.
.07.2010 - திருவுளபணியாளர் சபையின் (IVD) புதிய முதல்வராக அருட்பணி. டன்ஸ்ரன் பொறுப்பேற்பு.
.07.2010 - அருட்பணி ஜோண் மௌலிஸ் அடிகளார் பருத்தித்துறை மறைக்கோட்ட முதல்வராக நியமனம்.
.07.2010 - அருட்பணி அன்ரன் யாவிஸ் கிளி/முல்லை மறைக்கோட்ட முதல்வராக நியமனம்.
13.07.2010 - கலாசார அமைச்சர் திருமதி பவித்திரா வன்னியாராச்சி கிளிநொச்சி புனித. தெரேசாள் ஆரயத்துக்கு விஜயம்.
27.07.2010 - T.A.J. மதுரநாயகம் அடிகளாரின் மறைவு.

**ஒகஸ்ட் - 2010**

05.08.2010 - யாழ் திருக்குடும்ப கன்னியார் மடம் தேசிய பாடசாலையாக தரமுயர்வு.
07.08.2010 - கிளி/செல்வநகர் அமைதியின் ஆலயம் திறந்து வைப்பு.
20.08.2010 - அருட்தந்தை. ஜிம்கிறவுண் காணாமல் போய் தேடும் நான்காவது ஆண்டு தினம்.
22.08.2010 - இலங்கை கத்தோலிக்க ஆயர் மன்றம் சனாதிபதியுடன் சந்திப்பு.
24.08.2010 - கத்தோலிக்க ஆயர் மன்றக் கூட்டம்.
24.08.2010 - மிருசுவில் பங்கில் அன்பியக்கருத்தரங்கு.
24.08.2010 - அன்னைத் திரேசாவின் 100வது பிறந்ததின நிகழ்வு உரும்பிராயில் நினைவு கூறப்பட்டது.
24.08.2010 - கிளிநொச்சி புனித. திரேசாள் ஆலயத்தில் மறைக்கல்வி மாணவர்களுக்கான ஒருநாள் பாசறை நிகழ்வு.
28.08.2010 - யாழ். மறைக்கல்வி நடுநிலையத்தில் திருவிவிலிய அறிமுக கருத்தமர்வு நிகழ்வு.

**செப்ரெம்பர் - 2010**

01.09.2010 - கொழும்பில் திருவழிபாட்டு மாநாடு.
16.09.2010 - திருத்தந்தை லண்டன் மாநருக்கு முதல் தடவையாக உத்தியோகபூர்வ விஜயம்.
19.09.2010 - இளங் குருக்களுக்கான தொடர் பயிற்சிச் செயலமர்வு.
19.09.2010 - சுண்டுக்குளிப் பங்கின் மறைக்கல்வி தினமும் மறையாசிரியர்கள் கௌரவிப்பு நிகழ்வும்.
26.09.2010 - யாழ். நாவாந்துறை புனித. வின்செண்டிப்போல் சபையினரின் நூற்றாண்டு விழாவும், சிறப்பு மலர் வெளியீடும்.
28.09.2010 - அமலமரித்தியாகிகளின் அதியுயர் தலைவராக அமெரிக்காவின் அச்சபையின் முதல்வர் லூயிஸ் லோகன் 13வது அதியுயர் தலைவராக தெரிவு.

**ஒக்டோபர் - 2010**

03.10.2010 - நாவாந்துறைப் பங்கின் மறைக்கல்வி தினம்.
06.10.2010 - அருட்பணி மரிய சேவியர் அடிகளாருக்கு கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கல் நிகழ்வு.
08.10.2010 - தேசிய கிறிஸ்தவ இலக்கிய விழாவில் இசைத்தென்றல் ம. யேசுதாஸ் அவர்களுக்கு திறமைமிகு இசைக் கலை ஞருக்கான விருது வழங்கல்.
08.10.2010 - பருத்தித்துறை மறைக்கோட்ட பீடப்பணியாளர்களின் இரண்டாவது ஒன்றுகூடல்.
09.10.2010 - திரு. ஞானப்பிரகாசம் அருளானந்தம் அவர்களின் "நிஜத்தின் நிழல்கள்" என்ற நூல் வெளியீடு.
10.10.2010 - யாழ். மறைமாவட்ட இளையோர் ஒன்றியத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட இளையோருக்கான தலைமைத்துவ பயிற்சிப் பாசறை.
19.10.2010 - சில்லையூர் பங்கில் மறைக்கல்வி வாரம்.
19.10.2010 - ஆசிய ஆசிரியர்களுக்கான அன்பியக் கூட்டம் தாய்லாந்தில் நடைபெற்றது.
20.10.2010 - கொழும்பு மறைமாவட்ட பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை அவர்கள் கருதினாலாக பாப்பரசரால் நியமனம்.
22.10.2010 - இளையோருக்கான வழிபாடும் ஒன்றுகூடலும்.
22.10.2010 - விசுவமடு தற்காலிக முகாமிலுள்ள மக்கள் சந்திப்பு.
25.10.2010 - அருட்பணி மா. றேஜிஸ் இராசநாயகம் எழுதிய "வாழ்வின் வேர்களைத் தேடி" எனும் நூல் வெளியீடு.
31.10.2010 - பருத்தித்துறைப் பங்கில் செபமாலைப்பவனி.

**நவம்பர் - 2010**

11.11.2010 - அருட்பணி ஞா. பிலேந்திரன் பேராசிரியராக உயர்பதவி.
12.11.2010 - உலக விஞ்ஞான தினத்தில் பற்றிக்ஸ் மாணவனுக்கு விருது.
14.11.2010 - கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவினர் முன் யாழ். ஆயர் சாட்சியம்.
22.11.2010 - யாழ். அமலமரித்தியாகிகளின் மகாநாடு.
29.11.2010 - பேராசிரியர் அருட்பணி ஞா. பிலேந்திரன் அடிகளாரின் முயற்சியால் தொகுக்கப்பட்ட "அருளாளர் யோசப்வாஸ் அவர்களின் வாழ்வும் பணியும்" என்ற நூல் வெளியீடு.

திரு. S. ஸ்ரனிஸ்லோஸ் ஆசிரியர்
புனித பத்திரிசியார் கல்லூரி.

## திருக்குடும்பத்தின் பாதச்........... (7ம் பக்கத் தொடர்ச்சி)


இச்சபைதனை உருவாக்க..

கண்ணெதிரே திருக்குடும்பத் தைக் கண்டு இதயத்திலே அவர்கள் வாழ்வை சீர்தூக்கி சிந்தித்து விதை போல விழுந்து, திருக்குடும்ப விருட்சமாய் நிற் பவர்தான், திருக்குடும்ப சகோதரங்களால் அன்பாய் அழைக்கப்படும் நல்ல தந்தை பீற்றர் பியன்வெனு நோ ஆய். இவர் 1873ம் ஆண்டு ஐப்பசித்திங்கள் 27ம் நாளில் பீற்றர் நோ ஆய். மடலின் நோ ஆய் தம்பதியருக்கு சேற்றிலே மலர்ந்த செந் தாமரையாய் பிரான்சிய புரட்சியிலே நல்வரவு எனும் நாமம் கொண்டு 8ஆவது குழந்தையாகப் பிறந்தார். சிறுவயதில் செய்திட்ட குறும்புகள் இளவயதில் காட் டிய துடிப்பான செயல்கள், எதிர் காலத்தை எதிர்வு கூறியது. தாரள உள்ளம், சுயநல மற்ற தன்மை, தலை மைத்துவம் இத் தனையும் இவரின் பிறப்போடு ஒட்டிப் பிறந்தவை. இருப்பினும் இளமைக் கனவுகள் களியாட்டங்கள் இவற்றால் ஈர்க்கப்பட்டு இறைவனை மறந்து தனது பாதையில சென்று கொண்டிருந்த வேளை பெற்றவளின் கண்ணீர் திசைமாற்றியது. அன்னை வழிகாட்டினாள்.

"எல்லோர் இடத்தையும் தாயால் நிரப்ப முடியும் - ஆனால் தாயின் இடத்தை எவராலும் நிரப்ப முடியாது". அன்னையின் அன்பினால் மரி அன்னையின் பால் ஈர்க்கப் பட்டார். அன்னையவள் வழிநடத்துதலால் ஓர் சபையை உருவாக்க வேண்டும் என்ற உத்வேகத்தோடு அயராது பாடுபட்டதன் பயனாக 1820ம் ஆண்டு திருக்குடும்பம் எனும் குழந்தை அழகாய் போர்டோவிலே பிரசவம் பெற்றது.

ஆகவே கிறிஸ்தவர்களாக வாழ அழைக்கப்பட்ட நாங்கள் திருக்குடும்பத் தில் ஆழமான பக்தியை உருவாக்கி நாசரேத்துக் குடும்பம் உலகில் வாழ்ந்தது போல வாழ முற்படுவோம்.

ஆக்கம் : அருட்சகோதரி மெரினா (திருக்குடும்ப கன்னியர்)



பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.



# தியானத்துளிகள்

அன்பின் சகோதரங்களே, திருவருகைக்காலத்தின் சிறப்பு சங்கமம் வழியாக உங்கள் அனைவரையும் சந்திப்பதில் மிகவும் மகிழ்ச்சி. திருவருகைக்காலம் தொடங்கியபின்னர் அதன் 4ம் வாரத்தில் நிற்கின்றோம், 3 வாரங்கள் கடந்து விட்ட நிலையில் "மனிதமான தெய்வம் எம்மையும் மனிதர்களாக்க" அழைத்து நிற்கின்றார். திருவருகைக்காலம் இயேசு ஆண்டவரை எமது மனத்திலும், குடும்பத்திலும், பங்கிலும், சமுதாயத்திலும் பிறக்க வைத்து ஆண்டவருடைய அன்பின் விழுமியங்களை எங்கும் பரவச் செய்வதேயாகும். இந்த நோக்கத்தினை நாம் ஒவ்வொரு நத்தார் பண்டிகைக் காலத்திலும் அடைய முயற்ச்சி செய்யவேண்டும்.

## கிறிஸ்து பிறப்புப் பெருவிழா




எசா 52:7-10, எபிரேயர் 1:1-6, யோவா 1:1-18

**"குவலயம் தனிலே மனுமகன் பிறந்த மங்கள நாள் இதுவே
மனங்கள் மகிழ்ந்து நலன்கள் நிறைந்திடும் நன்மையின் நாளிதுவே,
பிரிந்தவர் கூடி நலிந்தவர் மகிழும் அருள் தரும் நாளிதுவே – தந்தையுடன் தாய்
பிள்ளைகள் கூடி அன்பினால் ஒன்றிணையும் குடும்ப நன் நாளிதுவே!
"ஆண்டவர் மனுவுருவானார் நம்மிடையே குடி கொண்டார"** (யோவா 14:12).

ஆதியில் இருந்து இன்றுவரை ஆண்டவர் எமக்கு கொடுக்கும் அன்புச் செய்தியின் உச்ச வெளிப்பாடே அவரது வருகையாகும். இரவு சுருங்கி பகல் நீளத் தொடங்கும் நாட்களின் விழா ஆதி மக்களால் சூரிய விழாவாக கொண்டாடப்பட்டது. பின்னர் இவ்விழாவே மருவி எல்லோருக்கும் ஒளி கொடுக்கும் சூரிய விழாவாக மாறியது என்கின்றது வரலாறு. அதேபோலவே இயேசுவின் வருகையின் பெருவிழாவும் விண்ணகச் சூரியன் மண்ணிலே வேண்டியதொன்றாகக் கருதவில்லை. ஆனால் தம்மையே வெறுமையாக்கி மனிதருக்கு ஒப்பானார்." (பிலி 2:6-7) இவ்வாறு தம்மை வெறுமையாக்கி இறைவன் பிறந்த இவ்விழாவானது அதன் உண்மை அர்த்தத்தினை பெறவேண்டும் என்றால் இயேசு ஆண்டவரை மனிதக் கைகளினால் செய்யப்பட்ட குடில்களில் அல்ல மனித மனங்களில் பிறக்க வைக்க வேண்டும். பிறரன்பற்ற வாழ்க்கையை விட்டுஇ பொறாமையான எண்ணங்களை தொலைத்து யேசுவை எமது செயல்களிலே,சொற்களிலே பிறக்க வைக்க எமக்கு அழைப்பு கொடுக்கப்படுகின்றது. எனவே எம் மத்தியில் வாழ வந்து இன்றுவரை நற்கருணையில் எம்மோடு வாழ்ந்து கொண்டிருப்பவரை எமது செயல்களில் வாழ வைப்போம்.

"அனைவருக்கும் கிறிஸ்து பிறப்பு நல்வாழ்த்துக்கள்".



## புது வருட பெருவிழா
## சனவரி 1, 2011.



எண் 6:22-27, கலா 4:4-7, லூாக் 2:16-21

### "மரியன்னை எம் மனுக்குல அன்னை"

இறைமகன் இயேசுவின் அன்பான புனித நாமத்திலே பிரியமான எனது அன்பான சகோதர சகோதரியரே!

புலர்ந்திருக்கும் புது வருடம் உங்கள் அனைவருடையவும் வாழ்வில் சந்தோஷத்தையும் அன்பையும் விதைக்க இறைவனிடம் இருகரம் கூப்பி வணங்கி மன்றாடுகின்றேன்.

கடந்து சென்ற 2010ம் வருடம் எம் ஒவ்வொருவருடையவும் வாழ்க்கையில் நிறைத்துச் சென்ற சந்தோசமான, துக்கமான, நினைவில் நிறுத்தக் கூடிய எத்தனையோ நினைவின் பதிவுகளை இன்றும் எம் மனங்களில் நிற்கின்றன, கண்ணீரோடும், உச்ச மகிழ்ச்சியோடும், உறவுகளின் பிரிவுகளோடும், உடல் வாதைகளின் துன்பங்களாலும், புதிய வரவுகளான பல மழலைகளை கண்டதனாலும், எண்ணிய காரியங்கள் நிறைவேறிய பல நிகழ்வுகளாலும், சந்தோசப்பட்டு, மகிழ்ச்சியால் துள்ளிக் குதித்து, பின்னர் துன்பங்களைக் கண்டபோது நிலத்தில் புரண்டு அழுது கண்ணீர் விட்ட எத்தனையோ சந்தர்ப்பங்களையும் வாழ்வின் பதிவுகளையும் கடந்த வருடம் எம்மில் பதித்துச் சென்றது என்றால் அது மிகையாகாது.


சோதனை துன்பங்கள் நெருக்கிய வேளைகளின் போது இறையருளால் தைரியமாக இருந்து இறைமகனை கன்னியாகவே ஈன்றெடுத்து அவரோடு இறுதிவரை பயணித்து சிலுவை நிழலிலே எம் அனைவரினதும் தாயாக உயர்த்தப்பட்ட அன்னை மரியாளுடைய மகிமையை இன் நாள் எமக்கு தெளிவாக்குகின்றது. கடவுளின் தாயாகும் மகிமை பெற்ற மரியா தனது வாழ்வில் காட்டிய தாழ்ச்சி அவரை வானளாவ உயர்த்தியதை நாம் கண்கூடாக கான்கின்றோம். அதேபோலவே வெற்றிகளில் இறுமாப்புக் கொள்ளாது, துன்பங்களிலே துவண்டு, சோர்ந்து விடாமல் இருக்க இன்று எமக்கு அழைப்புக் கிடைக்கின்றது.

"தாய்மையை போற்றுபவர்கள் தலை நிமிர்ந்து வாழ்வார்கள்" தமது தாய் தந்தையரை போற்றுபவர்கள் உண்மையிலேயே மரிஅன்னையில் நம்பிக்கை வைப்பார்கள். அன்னை மரியாளை போற்றுகின்றவர்கள் ஆண்டவரின் பக்கத்திலேயே இருப்பார்கள்.

"நம் சிந்தனைகளை சீராக்கவும், கோணலான திட்டங்கள் போடும் மனதினை நேராக்கவும், விழிகளை விசாலமாக்கி அயலவர் தேவைகளைக் கண்டுகொள்ளவும், இதயங்களை இயேசுவால் நிரப்பி, அன்போடு நோக்க, கரிசனையோடு செவிமடுக்க, கரங்கள் நீட்டி அரவணைக்க, விரல்கள் கொண்டு விழிநீர் துடைக்க, "இப் புதிய ஆண்டு புலரும் நேரம் (2011) எமக்கு அன்பான அழைப்பொன்றைக் கொடுக்கின்றது, அழைப்பை சிரம்மேற் கொண்டு செயல்படுத்த நாம் எல்லோரும் தயாரா?

**அருட்பணி. ஜோசப் செல்வன் செ.தா.**

## ஆசிரியரின் எண்ணப் பதிவுகளிலிருந்து....

மீண்டும் ஒரு புதிய ஆண்டை எதிர்நோக்கியுள்ள நாம், ஏற்கனவே பயனுள்ள வகையில் பயன்படுத்திய ஆண்டின் பலாபலன்களை புரட்டிப்பார்ப்பது புதிய ஆண்டின் பலதரப்பட்ட செயற்பாடுகளுக்கு பயன் தரும் என்பது எமது எண்ணம்.

**"கடவுள் தந்த அழகிய வாழ்வு
உலகம் முழுதும் அவனது வீடு
கண்கள் மூடியே வாழ்த்துப்பாடு
கருணை பொங்கும் உள்ளங்கள் உண்டு
கண்ணீர் துடைக்கும் கைகளும் உண்டு
இன்னும் வாழனும் நூறு ஆண்டு"**

என்ற கவிஞனொருவனின் சிந்தனைத் துளிகள் இங்கும் எமது சிந்தனைக்கு விருந்தாகின்றன. கத்தோலிக்க பத்திரிகைத்துறை வரலாற்றில் பாதுகாவலனுக்கு தனியொரு இடமுண்டு என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. தனித்துவமான போக்கில் அது தன் பணியினை பரந்தளவில் ஆற்றி வருவதனை யாவரும் அறிந்ததே. தனது பணியினை பற்றுடன் பக்குவமாக, செய்து வருகிறது. தடைகளும், தடங்கல்களும், தனிநபர் விமர்சனங்களும் தலைவிரித்தாடும் நிலையிலும் தன் நிலை தவறாமல், தனித்தன்மையுடன் தளிர் விட்டு தழைத்தோங்கி வருவது கண்கூடு. இத்தகைய பத்திரிகைப் பணி பலமடைவதற்கு பலருடைய பக்கபலமும் எம்பக்கம் இருபபதனை மறுப்பதற்கில்லை. பலருடைய பணிகள் பாராட்டப்பட வேண்டியவையே.

நீண்டதொரு வரலாற்றுப் பாரம்பரியத்தைக் கொண்ட எம் பாதுகாவலன் மாதம் இரு தடவைகள் வெளிவருவது வாசகர்களுக்கும் எமக்கும் இருக்கும் வெற்றிடத்தை குறைப்பது மட்டுமன்றி எமது மக்களின் கிறிஸ்தவ விசுவாசத்தை விசாலபடுத்தவும் கிறிஸ்தவ விழுமியங்களை எம் உள்ளங்களில் உரமிடுவதற்கும் உதவியாக உள்ளது. இந்த வகையில் "பாதுகாவலன்" வளர்ச்சி பெற்ற ஒரு கத்தோலிக்க பத்திரிகையாக மிளிர பல வழிகளிலும் எமக்கு ஆதரவும், ஆக்கமும் ஊக்கமும், ஆசீரும் வழங்கி வருகின்ற எமது மதிப்புக்குரிய ஆயர் அவர்களுக்கு எமது நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

பல சவால்கள், பத்திரிகைப் போட்டிகள், மத்தியிலும் பாதுகாவலன் தவறாது வெளிவரவேண்டுமென்ற மன வைராக்கியததுடன் செயற்படுகின்ற, செயலாக்கம் தருகின்ற எமது அன்புக்குரிய முகாமையாளர், குரு முதல்வரையும் இவ்வேளையில் நன்றிப் பெருக்குடன் பெருமையுடன் நோக்குகின்றோம்.

"மனமுண்டானால் இடமுண்டு" என்பது எம்முன்னோரின் முதுமொழி. எக்காரியமும் கனியாக நல் இதயங்களின் ஆதரவு அவசியம். அந்த வகையில் "பாதுகாவலன் எங்கள் பத்திரிகை" என்ற பரந்த நோக்குடன் செயற்பட்டு வரும் செயலூக்கம் கொண்ட பங்குத் தந்தையர்களை இவ்விடத்தில் நன்றிப் பாங்குடன் நோக்குகின்றோம். அவர்கள் சேவை எம்மை மேலும் மேலும் உற்சாகப்படுத்தும் என்பதில் நாம் உறுதியாக உள்ளோம்.

2010ம் ஆண்டில் எம் பாதுகாவலன் பக்குவமாக, வெளிவர காவலர்களாக கரம் நீட்டி உதவி வழங்கியவர்கள் பலர். பலர் பத்திரிகைப் பணிகளில் குறிப்பாக பாதுகாவலன் அச்சுப்பதிப்பு வேலைகளில் சளைக்காது வேலைப்பளு பாராமல் எந்த வேளையிலும் இன்முகத்துடன் கருமமாற்றிய உள்ளங்களையும் நினைக்கின்றோம். நன்றி கூறுகின்றோம்.

பாதுகாவலன் தனது கத்தோலிக்க பாரம்பரியங்களையும், திருச்சபையின் செய்திகளையும் வெளிக்கொண்டு வருவதற்கு பல ஆக்கங்கள், கட்டுரைகள் மூலம் உதவி நல்கிய அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், நண்பர்கள், எழுத்தாளர்கள் அனைவருக்கும் எமது நன்றிகள்.

"யாரும் இருக்குமிடத்தில் இருந்து கொண்டால் எல்லாம் சௌக்கியமே" இப்பாரினில் ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட பொறுப்புக்களும் கடமைகளும் எண்ணற்ற விதத்தில் உள்ளன. அத்தகைய கடமைகளையும் பொறுப்புக்களையும் பொறுப்பு வாய்ந்த வகையில் பூரணப்படுத்தும் போது எல்லோரும் பூரிப்படைவர். தடைகளும் தவறுகளும் மனித வாழ்வில் மலிந்து கிடப்பது தவிர்க்கமுடியாததே. தவறுகள் சீரமைக்கப்படலாம். தீர்ப்புக்கள திருத்தப்படலாம். விமர்சனங்கள் வரவேற்கப்படத்தக்கனவே. ஆனால் அவையே விழ வைக்கக்கூடாது. வீணான, விதண்டாவாதங்கள் வளர்ச்சிக்குப் பயனற்றவை என்றே கருதலாம். எனவே பொறுப்பு வாய்ந்தவர்கள், சமூகத்தில் புத்தி ஜீவிகள் எனக் கருதப்படுவோர் தமக்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் இருந்து கொண்டு யதார்த்த பூர்வமான சிந்தனைகளுடன் வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் ஏற்ற வகையில் செயற்படுவது வரவேற்கத்தக்கது: வீணான தலையீடுகள் தீர்வைத்தரா. மாறாக தீராத வேதனைகளையும் மனக்குரோதங்களையுமே விதைக்கும். எனவே ஒவ்வொருவரும் தமது நிலைப்பாட்டை உணர்ந்து ஒரு வரையறைக்கு உட்பட்ட விதத்தில் செயலாற்றுவது ஆரோக்கியமானது எனக் கருதலாம்.

வரவிருக்கும் வருடத்தில் எமது பொறுப்புக்களையும் கடமைகளையும் உணர்ந்து எமக்குரிய இடத்தில் இருந்து கொண்டு அவற்றை செயற்படுத்த முன் வருவோமாக. அந்த நிலையில் எல்லாம் சௌக்கியமாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.

அருட்பணி. சாள்ஸ்கொலின்ஸ்

## பொதுநிலையினர் தினத்தை முன்னிட்டு நடாத்தப்பட்ட வினாவிடைப் போட்டிக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் நடைபெற்றது



யாழ் மறைமாவட்ட பொதுநில்லையினர் தினத்தை முன்னிட்டு யாழ் மறைக் கோட்டம் மறைமாவட்டம் போன்றவற்றிலே முன்று பிரிவுகளாக போட்டிகள் நடாத்தப்பட்ட போட்டியிலே வெற்றி பெற்ற மாணவர்களுக்கு யாழ் / புனித பத்திரிசியார் கல்லூரியில் 28.11.2010 அன்று பொது நிலையினர் திருப்பணிகள் ஆய்வரங்கிலே யாழ் மறைமாவட்ட ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநயகம் அவர்களினால் சானறிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

S.நிறோஷன்

# ஆயன் இருக்கும் போது எனக்கேது குறை?

அருட்பணி ம. டேவிற்

திருப்பாடல் இருபத்து மூன்றில் இந்த வார்த்தைகளை வாசிக்கும் போது எனது சிந்தனைகள் புனித சவேரியார் குருத்துவக்கல்லூரியில் அருட்தந்தை பிலிப் பொன்னையாவின் வழிநடத்தலில் உருவாக்கம் பெற்ற நாட்கள் எனது ஞாபகத்திற்கு வருகின்றன. அருட்தந்தை அவர்களின் மறையுரைகள், ஆன்மீக சொற்பொழிவுகளில அடிக்கடி வரும் ஒரு வசனம்; "ஆண்டவர் நம்மோடு இருக்கும் போது நமக்கு என்ன வேண்டும் சகோதரர்களே" இந்த வசனத்தை பல ஆயிரம் தடவைகள் அவரது உதடுகள் சொல்ல நான் கேட்டிருப்பேன். அப்போது அந்த வசனத்தில் இருந்த ஆழத்தை என்னால முழுமையாகப் புரிந்து கொள்ள முடியாவிட்டாலும் அவரின் இறுதி நாட்களில் என்னால் இந்த வார்த்தைகளின் தாக்கத்தை புரிந்து கொள்ள முடிந்தது. அவர் தனது பணியிலிருந்து ஓய்வு பெற்றபின் சில நாட்கள் ஆயர இல்லத்தில் இருந்தபின்னர், பண்டத்தரிப்புக்கு போகும் போது தன்னிடம் இருந்த எல்லாவற்றையும் தேவையானவர்களுக்கு கொடுத்து விட்டு வெறும் ஒரு சூட்கேசுடன் சென்றார். பண்டத்தரிப்பு தியான இல்லத்தில் இருந்த போது அவரைச் சந்தித்தேன். மிகவும எளிமையாகவும் மகிழ்வாகவும் இருந்த அவர் எனக்கு சொன்ன வார்த்தைகள் 'இப்போது தியானித்து சந்தோசமாக இருக்கின்றேன்.' அவரிடம் அந்த நேரத்தில் இருந்த ஓர் நிறைவை அமைதியை நான் கண்டேன். அது அவர் அடிக்கடி கூறும் வார்த்தைகளான "ஆண்டவர் நம்மோடு இருக்கும் போது நமக்கு என்ன வேண்டும் சகோதரர்களே" என்பதனை அனுபவித்து வாழ்ந்த வாழ்வின் ஓர் நிறைவு என்பதனையும உணர்ந்தேன்.

இருபத்தி மூன்றாம் திருப்பாடலின் முதல் வரிகளும் இதனைத்தான் நமக்கு காத்திரமாக சொல்லி நிற்கின்றன. வாழ்க்கையில் நாம் பல வழிகளில் பலவற்றிற்காக ஏங்கித்தவிக்கின்றோம். மனித வாழ்வின் பல்வேறு கட்டங்களில் நாம் ஒரு சிலவற்றை அடைந்து விட்டால் நம் வாழ்வு முழுமை அடைந்து விடும் என்று நம்புகின்றோம். ஆனால் அவற்றை அடைந்த பின்னரும் நம் வாழ்வு நிறைவடைந்து விட்டது என்று நாம் ஒரு பொழுதும் உணர்வது இல்லை. இந்த நிறைவு நம் ஆயன் நம்முடன் இருக்கின்றார். என்ற ஒரு அனுபவரீதியான உணர்வு எமக்குள் ஏற்படும்போதே ஏற்படும். சங்கீத ஆசிரியரைப் பொறுத்த மட்டில் தனது வாழ்வில் மட்டும் அல்ல தன் மூதாதையரின் வாழ்வு முழுவதிலும் இறைவனின் பராமரிப்பை ஆழமாக உணர்ந்து அனுபவித்தவராகவே இந்த வார்த்தைகளைக் கூறுகின்றார்.. இஸ்ராயேல் மக்கள் நாற்பது ஆண்டுகள் பாலைவனத்தினூடாகப் பயணித்த போது அவர்களை போஷித்த இறைவன் தங்களையும் போசிப்பார் என்ற ஓர் உணர்வு அவருககுள் மிகவும் ஆழமாக வேரூன்றியிருந்தது. மனிதன் தன் வாழ்வில் தன் தேவைகளை (needs) மட்டும் பூர்த்தி செய்து வாழப்பழகிவிட்டால் அவனில் எப்போதும் ஒரு நிறைவு இருக்கும். ஆனால் மனிதன் தனக்குத் தேவையானவற்றைக் கொண்டிருந்தும் அவன் தன் தேவைகளை (Wants) நாளாந்தம் அதிகரித்துக் கொண்டு போவதனால் அவன் எப்போதும் ஒரு திருப்தியற்றவனாகவே காணப்படுகின்றான். இன்று உலகம் ஒரு நுகர்வுக் கலாச சாரத்துக்குள் புகுந்து கொண்டிருக்கின்றது. இந்த நுகர்வுக்கலாச்சாரம் மனிதனில் நிம்மதியற்ற தன்மையை ஏற்படுத்துவது மட்டுமல்லாது வாழ்வில் நிரந்தரமாகவே ஓர் திருப்தியற்ற தன்மையை வளர்த்து விடுகின்றது. இதன் காரணமாக நாளாந்தம் நாம் கடவுளுக்கு நன்றி கூறுவதற்குப் பதிலாக கடவுளை ஒரு கிறிஸ்மஸ் தாத்தா போலச் சித்தரித்து இதைத் தா அதைத் தா என கின்ற பாணியில் நாம் இறைவனுடைய உறவையே சில வேளைகளில் வாணிபமாக்கி வடுகின்றோம். ஆலயத்துக்கு போகும் போதும் நாம் கடையில் பொருட்கள் வாங்க பொருடகளின் பட்டியலைக் கொண்டு போவது போல நமது தேவைகள் என்ற பட்டியலுடன போகின்றோம்.

ஆனால் வாழ்வில் கடவுள் நமக்குத் தந்தவற்றுடன் திருப்தியுடன் வாழக் கற்றுக்கொள்வது ஓர் ஆன்மீக முதிர்ச்சியாகும். நமக்குத் தேவை என்று இறைவன் கருதுகிறவற்றை இறைவன் நமக்குத தருவார் என்ற எதிர்நோக்குடன் நாம் வாழக் கற்றுக்கொள்ள வேண்டும். இறையியலாளர் போல் திலிக்கின் (Paul Tillich) வார்த்தைகளில் சொல்லப் போனால் ஒன்று என்னிடம் இல்லை என்று அதற்காகக் காத்திருக்கும் போது அது இன்னொரு வகையில் என்னிடம் இருக்கின்றது என்ற அர்த்தமாகும். அதாவது நான் ஒன்றுக்காக நம்பிககையோடு எதிர் பார்த்துக் காத்திருக்கின்றேன் என்கின்ற உண்மையே அது என்னிடம் இன்னொரு வகையில் இருக்கின்றது என்பதனைக் குறிக்கின்றது. நான் கேட்டது எல்லாம் இறைவன் தருகின்றார் என்று இறைவனை அன்பு செய்வதை விட புயல்கள் வேதனைகள் மத்தியிலும் இறைவன் என்னுடன் இருக்கின்றார் என்கின்ற ஆன்மீகத் தெளிவுடன் இறைவனை அன்பு செய்து வாழ்வது என்பது ஒரு ஆன்மீக முதிர்ச்சியாகும். இந்தத தெளிவே இத்திருப் பாடலின் முதல் வரிகளில் ஒலிக்கின்றது. இந்த முதிர்ச்சியினை நாம் திருத்தூதர் பவுலின் வாழ்வில் தெளிவாகக் காணலாம். "எந்த நிலையிலும் மனநிறைவோடு இருக்கக் கற்றுக் கொண்டுள்ளேன். எனக்கு வறுமையிலும் வாழத் தெரியும் வளமையிலும் வாழத் தெரியும். வயிராற உண்ணவோ பட்டினி கிடக்கவோ நிறைவோ குறைவோ எதிலும் எந்தச் சூழலிலும் வாழப் பயிற்சி பெற்றிருக்கிறேன்." இதற்குக் காரணம் "எனக்கு வலுவூட்டுகிறவரின் துணைகொண்டு எதையும் செய்ய எனக்கு ஆற்றல் உண்டு." என்ற பவுல் அடிகளாரின அசைக்க முடியாத நம்பிக்கையாகும். இதனையே "நீ மட்டும் போதும் நீ மட்டும் போதும் எப்போதும்" என்ற பாடலின் வரிகளும் நமக்கு கூறி நிற்கின்றன.

(தொடரும்)

# பாலன் இயேசுவின் மறுபிறப்பு

"பாலன் இயேசு பிறந்துவிட்டார் – எம்
பாவங்கள் நீக்கவே உதித்துவிட்டார்
கவலை இனி இல்லை கண்ணீர் இனி இல்லை
துன்பம் இனி இல்லை துயரம் இனி இல்லை
வேதனை இனி இல்லை கொள்ளை இனி இல்லை
வறுமை இனி இல்லை பொய்மை இனி இல்லை – ஏனெனில்
புண்பட்ட எம்மக்களுக்கு ஆறுதலாக
பாலன் இயேசு பிறந்து விட்டார் – இது
பாலனின் மறுபிறப்பு – கண்ணீர் சிந்தும் எம்
மக்களின் வாழ்விற்கோர் புதுப்பிறப்பு"



ஜெ. யூட்டனிஸ்ரன்
(யாழ் அடைக்கல அன்னை ஆலயம்)
யாழ்ப்பாணம்.

# சாதிக்க துடிக்கும் இளைய தலைமுறைக்கு.....

இளமை என்பது புத்துணர்வுடன் புயல் போல செயல்பட கூடிய ஆற்றலுடனும சீறிப்பாயும் சிங்கத்தைப் போல பலத்துடனும் எதிர்த்துப் போராடும் மனப்பான்மையுடனும், எதையும் சாதிக்க இயலும் என்ற விடா முயற்சியுடனும் செயல்படும் காலம இவ் இளைஞர்களுக்கு பிறக்க இருக்கும் இயேசு பாலன் விடுக்கும் செய்தி என்ன? இவர்களிடமிருந்து எதிர்ப்பார்ப்பது என்ன?

இளம் வயது துடிப்புகள் நிறைந்தது. எதையும், அப்படியே ஏற்காமல் ஏன்? எதற்கு? எப்படி? என்ற கேள்விக் கணைகளை தொடுக்கும் இளைஞர்கள், மாறி வரும் இன்றைய எந்திரவியல் (Robotics) உலகில் பல்வேறு தாக்கங்கட்கு அடிமையாகின்றனர். தங்கள் வாழ் நாளையெல்லாம் அர்த்தமில்லாமல் செலவழிக்கின்றனர்.

போதைப் பொருளிலே தான் வாழ்வு என்று திளைக்கின்றது. ஆட்டுமந்தையை போல் அலைக்கழிக்கப்படல், தொடர்பு சாதனங்களிலே தங்களைத் தொலைத்தல், வேலையில்லாத் திண்டாட்டம் இவர்களை பலவழிகளில் செல்லத தூண்டுகின்றது.

எல்லோரும் இறைவனுக்கு உகந்தவர்கள் தாம். ஆனால் இளைஞர்கட்கு அவரின் உள்ளத்தில் சிறப்பு இடம் உள்ளது. "பால் குடிக்கும் தன் மகவை தாய் மறப்பாளோ? இவர்கள் மறந்திடினும் நான் உன்னை மறக்கவே மாட்டேன் "(எசா. 49:15) கோழி தன் குஞ்சுகளைத் தன் இறக்கைக் குள்ளே கூட்டிச் சேர்ப்பது போல நானும் உன் மக்களை அரவணைப்பேன். (மத் 23:27)

அடிக்கின்ற கை தான் அணைக்கும் என்ற கூற்றுக்கு ஏற்ப கடவுள் இளைஞர்கட்கு சில எச்சரிக்கைகளையும் தருகின்றார்.

"தம் தந்தையையும் தாயையும் சபிப்பவரின் குருதிப்பழி அவர் மேலேயே இருக்கும்". (லேவி 20:9) தீயவர்கள் உன்னைக் கவர்ச்சியூட்டி இருப்பார்கள். நீ அவர்களுடன் போக இணங்காதே (நீ.மொ 1:10)

ஆகவே ஒவ்வொரு இளைஞனும் நம்பிக்கையுடனும் பொறுப்புணர்வுடனும் வாழக் கற்றுக்கொள்ளல் அவசியம். இள வயது சாதிக்கும் வயது சரித்திரங்கள் படைக்கும் வயது.

ஏன் இன்று நம் மத்தியிலும் பல சாதனையாளர்கள் உருவெடுக்க கூடாது? நாங்கள் விடாமுயற்சிடன் செயற்பட்டால் இவற்றிலும் பெரிய சாதனைகளைப் படைத்து எம்மால் உலக வரலாற்றில் இடம்பெற முடியும்.

வெற்றிக்கு வழி முயற்சி மட்டுமல்ல முதலில் இலக்கை நிர்ணயிக்க வேண்டும்.

- இளமை வாழ்வு உனக்கு அருமையானது.
- யாருக்காகவும் உன்னுள் இருக்கும் உன்னை இழந்து விடாதே.
- கொள்கையில் மெய்யான பிடிவாதமிருந்தால் யாரும் எதையும் உன்மீது சுமத்த முடியாது.
- இளமை இரகசியம் பிறர் உழைப்பை எதிர்பாராதிருப்பது.
- உழைப்பை நேசிப்பவர்கட்கு முன்னேற்றத்தின் காலம் கைகட்டி பதில் சொல்லும். உழைப்பில் உறுதி, சிந்தனை தெளிவு வாழ்வில் மாற்றம் நிகழ்ந்தே தீரும்.

ஆக நீ இளைஞன் அது போதும் நீ இவ்வுலகை மாற்ற, சாதனைபடைத்து சரித்திரம் உருவாக்க.

ஏ.எம். மனோஜ்
யாழ் பேராலயம்.

# அன்று! ஆனால் இன்று!

அன்று! "காரிருளில் நடந்து வந்த மக்கள் பேரொளியை கண்டார்கள்" எகிப்திய அடிமைத்தனத்தில் வாழ்ந்து வந்தவர்கள் இறைவனின் அளவு கடந்த அன்பின் மூலம் விடுதலை பெற்று புது வாழ்வை ஆரம்பிக்கின்றார்கள். படிப்படியாக பாவ வாழ்வை நோக்கி பசாசின் பிடியில் சிக்கி தவித்து வந்த மக்கள் மீண்டும் இறைவன் தன் அன்பை தம் மகனை இவ்வுலகிற்கு அனுப்பி உறுதிப்படுத்தினார். தம் மகனை எம் பாவங்களுக்காக பலியாக்கி எம்மை பாவ வாழ்வில் இருந்து மீண்டும் எமக்கு விடுதலை தந்தார். ஆனால் இன்று அவரின் பிறப்பு விழாவை நினைவுறும் நாம்

- ★ இன்று அன்புக்கு எவ்வாறு அடிபணிகின்றோம்?
- ★ எம் வாழ்வின் இன்றைய நிலை என்ன?
- ★ இறைவனுக்கு உகந்த வாழ்வு வாழ்கின்றோமா?
- ★ இயேசுவின் 2ம் வருகைக்கு எம்மை எவ்வாறு தயார் செய்கின்றோம்?

என்ற கேள்விகளுக்கு நாம் பதில் காண முயலும் போது எம் வாழ்வில் ஏற்படும் மாற்றங்களை நாம் உணர முடியும்.

ம. றூபின்
புனித மடுத்தீனார் குருமடம்.

## மீண்டும் நீ வாராயோ...



மார்கழிக் குளிரில்
மாமரி மடியில்
மாசற்ற மகவாய்
மண்ணில் வந்த எம் பாலக இயேசுவே

கணினி யுகத்தின் கண்டுபிடிப்புக்களும்
கலாச்சாரச் சீரழிவுகளும்
கயவர்களின் கொள்ளையும், கொலையும்
கணக்கில்லாமல் அரங்கேற்றம்

அமைதியின் இரவில் அவதரித்த பாலா
அமைதியைத் தொலைத்து
ஆசைகளுக்கு அடிமையாகி
அல்லலுறும் மனித இனத்தை
மீட்டிட நீ வாராயோ – பாலா
மீண்டும் நீ வாராயோ!

திருமதி. வெ.ற.ஜெ. ஜெயந்தன்
'ஜீன் வில்லா' சில்லாலை.

## நல்லாயன் வழிகாட்டும் அருட்சகோதரிகள்

யூப்ரேசியா அன்னையால்
தூயவழி காட்டிடவே
அன்பினால் கட்டப்பட்ட
நல்லாயன் கன்னியர் மடமிதுவே

இருள் சூழ் பள்ளத்தாக்கில்
வீழ்ந்திட்ட பாலைகளை – மீட்டு
நல்லாயன் அவர்தம் நல்வழியில்
நடத்தி செல்லும் அன்பில்லமிதுவே

கைவிடப்பட்டு கண்ணீர் வடித்து
வெறுக்கப்பட்டு ஒதுக்கப்பட்டு
வழியில்லாது வாடிநிற்கும் நெஞ்சங்களை
அன்போடு ஏற்று வழிநடத்திடுமே
நம் நல்லாயன் கன்னியர் நெஞ்சங்களே

இளஞ் சமுதாயம் சிதறிடாது வாழ்ந்திடவே
நல்லாயன் தம் கோலும் நெடுங்கழியுமாக
தம் பாசத்தையும் பரிவையும் கொண்டு
அவர் வாழ்வை சீராக்கினரே

நல்லாயன் புகழ்பாடி
அவர் சேவை மண்ணில் தொடர
தம் வாழ்வை அர்ப்பணித்து
பிறருக்கு வழிகாட்டிடும் கன்னியர்வரே

காலமெல்லாம் யூப்ரேசியா புனிதரவர் கனவு
நனவாக தொடர்ந்திடவே
வழிசெய்யும் இவர் சேவை – காலத்திற்கும்
தொடர்ந்திடல் வேண்டும் மண்தனிலே.

கு. எவலின் மெலோணி
கொட்டாஞ்சேனை, கொழும்பு - 13

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.





## ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்

மனித வாழ்வு தடம்மாறிச் சென்று கொண்டிருக்கும் இன்றைய காலகட்டத்தில் இறைவனின் மனுவுருவை மையமாகக் கொண்டு ஒருசில வார்த்தைகளைச் சற்றுச் சிந்திப்போம்.

மனிதனைப் பாவ அழிவுகளிருந்து மீட்கவே இறைமகன் மண்ணுக்கு வந்தார் ஆனால் இன்று எம்முடைய வாழ்வுகள் விண்விட்டு மண்வநத இறைவனின் அன்பையும் மீட்பையும் மறந்து மேலும் மேலும் பாவத்தினுள் அமிழ்ந்து சிக்கித் தன்னைத தானே மாய்த்துக்கொள்கின்றன ஆகையால் இன்றைய காலகட்டத்தில் உறுதியான மனமாற்றமானது அவசியமான ஒன்றாக அமைகிறது.

மனமாற்றம் என்பது எண்ணம் சிந்தனை நடத்தை செயல்களில் இறைவனுடைய வார்த்தையையும் இயேசு மண்ணுலகில் வாழ்ந்த வாழ்க்கையையும் வாழுவதே ஆகும். இன்று அறிவியலின் வளர்ச்சியால் மனிதனது வாழ்வு வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகளாகப் போலியான கவர்ச்சிகளைக் காண்பிக்கின்றன ஆனால் அவற்றின் அகமோ மிகவும் பயங்கரமான தீமைகளைத் திரையிட்டு மறைகின்றன இந்த நிலை மாறவேண்டும் நாம் அனைவரும் எமது கல்லான மனங்களை மாற்றி இயேசுவின் வாழ்வை எமது சமூகத்தில் வாழவேண்டும் தினமும் வேதாகமம் வாசித்து செபிக்க வேண்டும். பிறக்கப் போகும் பிஞ்சுப்பாலகனுக்காக உண்மையானதும் நிலையானதுமான மனமாற்றத்தை எம்மால் எம்முள் ஏற்படுத்த முடியுமா? என்று சற்று ஆழமாகச் சிந்திப்போம்.

வாழ்வது நானல்ல என்னில் கிறிஸ்துவே வாழ்கிறார் என்பதற்கு அமைவாக கிறிஸ்தவர்கள என்னும் அவரது நாமத்தை ஆடையாகப் போர்த்துக் கொண்ட நாம் கிறிஸ்து விட்டுச் சென்ற அடிச்சுவடுகளைப் பின்பற்றுகின்றோமா?. அன்று கிறிஸ்து சமுகத்தில் வாழ்ந்தபோது யாரை தேடி நாடிச் சென்றார் என்பதை வேதாகமம் கூறி நிக்கிறது. இன்று கிறிஸ்து இவ்வுலகில் நடமாடும் தெய்வமாக இருப்பாரெனில் அவர் யாரிடம் செல்வார் என்பதும் எமக்குத் தெரியாததொன்றல்ல. இருந்தாலும் எம்மிடமுள்ள சில விட்டுக்கொடுப்புக்களை எம்மால் செய்ய இயலாமல் இருப்பது வருந்தத்தக்கது.

கடந்த கால வன்செயல்கள் மக்களிடையே பலவடுக்களை ஏற்படுத்தியுள்ளன. அவற்றிலிருந்து மீட்சி பெற முடியாமல் தினம் தினம் தவித்துக்கொண்டிருக்கிறான். மனிதன் பல்லாண்டு காலமாக முகாம்களில் அடைக்கப்பட்டு பசி பட்டினி சாவு நோவுகளுக்கு உட்படுத்தப்பட்டு ஆறாத்துயரில் அல்லலுற்றான்.

எமது ஆடம்பரம் அலங்காரம் கொண்டாட்டம் கும்மாளம் குடிவெறி அடிதடி இவைகளை வென்றெடுக்கும் கிறிஸ்மஸ்சா? சிந்திப்போம் நான் எனது குடும்பம் என்ற சிறிய வட்டத்தை விட்டகன்று வெளியே சற்று நோக்குவோம் முன்னைய காலங்களில் நாம் கொண்டாடி மகிழ்ந்த கிறிஸ்து பிறப்பு விழா சமகாலத்தில் வேறொரு நிலையை எடுத்துக்கூறுகிறது.

எனவே ஆடை அணிகலன்களால் எம்மை சிங்காரிப்பதை தவிர்த்து அன்பினால், பகிர்வினால் எம்மை மற்றவர்களுக்காகத் தியாகம் செய்ய முன் வருவோம். கவலைப்படுவோரின் கண்ணீர் துடைக்கும் கரங்களாக மாறுவோம். அவதிப்படுவோருக்கு ஆறுதல் கூறுவோம் ஏழ்மையும், பணிவுமான பாலக இயேசுவின் பிறப்பு நாம் செய்யப்போகும் பரித்தியாகச் செயலகளுக்கு வழிகாட்டலாக அமையட்டும் நொந்து வெந்தவர்களுக்கு நல்வாழ்வு அளிப்பதன் மூலம் ஒளிமையமான கிறிஸ்து பிறப்பு விழாவை அரத்தமுடன் கொண்டாடுவோம். எம் ஆண்டவர் எமக்காக எம்மிடையே அவதரித்ததை ஏழை எளிய மக்களுடன் சேர்ந்து மகிழ்ச்சியுடன் கொண்டாடுவோம். நாம் வசதி படைத்த வீடுகளில் வாழ்ந்தாலும் எம் ஆண்டவர் மாட்டுக்கொட்டிலில் தான் பிறந்தார என்பதற்காக வீடுகளில் குடிசை அமைத்து அதில் பாலகனை வைத்து வணங்குகின்றோம் ஆனால் அயலில் குடிசையில் வாழும் ஏழையை ஏறெடுத்து பார்க்கத் தவறுகின்றோம் மணல் வீடுகளில் இருந்தவர்கள் மாளிகைக்குச் சென்றாலும் எம் மீட்பர் ஒவ்வொரு வருடமும் மாட்டுக் கொட்டிலில் தான் பிறக்கிறார். இது எம் சமூகத்தில் குடிசைகள் குறையவில்லை ஏழ்மை ஒழியவில்லை என்பதையே எடுத்துக்காட்டுகிறது. ஒரு வேளை உணவிற்கு வழியின்றி பக்கத்து வீட்டில் ஓர் ஏழை தவிக்க வண்ண வண்ண விளக்குகளால் எம் வீடுகளை அலங்கரித்து கிறிஸ்மஸ் விழாவைக் கொண்டாடுவது ஏற்புடையதா?

பகையுள்ள மனதுடன் எதிரே வரும பகைவனைப்பார்த்து புன்னகைக்க மறுக்கும் நாம் பலவித உணவு வகைகளைச் செய்து எம் நண்பர்களுக்கும் எமக்கும் பிடித்தவர்களிற்கும் மட்டும் கொடுத்தால் அது எம் பாலகனிற்குசந்தோசத்தை ஏற்படுத்துமா? எனவே இயல்பு வாழ்க்கைக்குள் திரும்பிக்கொண்டிருக்கும் நாம் கிறிஸ்மஸ் விழாவை ஏழைமக்களுடன் சேர்ந்து ஆனந்தமாகக்கொண்டாடுவோம் எம் சமூகத்தில் வாழும் ஓர் வறிய சிறுவனுக்கு புத்தாடை எடுத்துக்கொடுப்பதன் மூலமோ அல்லது பொருட்களை கொடுப்பதன் மூலமோ நாமும் மகிழ்ந்து அவர்களையும் மகிழ்விப்போம். ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்.

R.Ramildan,
Makuzhi Road, Kayts.

## கேட்டோம் சொன்னார்கள்...

**S. நிறோசன் - வயது 22**

இயேசு பிறப்பு விழாவில் நான் ஆடம்பரங்களை இயலுமானவரை தவிர்த்து அதில் சேகரிக்கும் பணத்தை எம் உறவுகளாம் வன்னி வாழ் மக்களுக்கு வழங்கவுள்ளேன். நீங்களும் என்னும் இணைவீர்களா?

**S. சுறேக்கா - வயது 17 , சென் ஜேம்ஸ் மகாவித்தியாலயம்.**

நான் இயேசு பிறப்பு விழாவை அமைதியான முறையில் கொண்டாட விரும்புகின்றேன். அநாதையாக இருக்கும் குழந்தைகளை நான் ஆதரித்து என்னால் இயலுமானதை வழங்குவேன்.

**சுதா - வயது 17**

இவ்வருட கிறிஸ்து பிறப்பு விழாவினை நான் வயோதிப இல்லத்திலே கொண்டாடப் போகின்றேன். என் சந்தோஷத்தை அவர்களுடன் பகிர்நது கொள்ளப் போகின்றேன்.

**கீதா - வயது 12**

நான் நத்தார் கொண்டாட்டத்தை விரும்புகின்றேன். என்னால் சந்தோஷமாக கொண்டாட முடியாது. காரணம் எனது தந்தையார் போரினால் இறந்து விட்டார். தாயார் ஒரு நோயாளி. ஆகவே என்னிடம் எவ்விதர வசதியும் இல்லை உதவ விரும்பும் உள்ளங்கள் என்னைப் போன்று பலர் உள்ளனர். உதவுங்கள்.

**புலோமினா - வயது 70**

நாட்டில் அமைதி நிலை உள்ளமையினால் இவ்வருடம் அனைத்து இன மக்களும் இணைந்து கிறிஸ்து பிறப்பு விழாவினை கொண்டாடுவோம்.

**கமலினி - வயது 29**

கிறிஸ்து பிறப்பு விழாவினை கொண்டாட எனக்கு ரொம்ப ஆசை. ஆனால் என்னுடைய கணவர் தடுப்பு முகாமிலே இருக்கையிலே என்னால் கொண்டாட முடியவில்லை. நீங்கள் என்னுடைய கணவருக்காக மன்றாடுங்கள்.

**தொகுப்பு: பாதுகாவலன் செய்தியாளர்**
**S. நிறோசன் - மரியன்னை பேராலயம்.**

## பாரினில் உதித்த பாலக இயேசு



வாழுமுன் வரலாறு வகுத்தவர் தான் இயேசு. அவரது வருகை எத்தனையோ தீர்க்க தரிசிகள் மூலம் முன்னறிவிக்கப் பட்டது. தந்தையாம் இறைவன், தவிக்கும் மனுக்குலத்தைத் தன் மகன் மூலம் பூரணப் படுத்த, புனிதப்படுத்த எண்ணம் கொண்டார். அந்த எண்ணத்தின் நிறைவு தான் இயேசுவின் பிறப்பு.

அவரின் பிறப்பானது வரலாற்றில் ஒரு திருப்புமுனையாகும். சரித்திரத்திலே ஒரு பொன்னாள். வரலாற்றிலே நடந்த ஒரு நிகழ்வு. உலக வரலாற்றையே மாற்றி அமைத்தது என்றால், அது கிறீஸ்து பிறப்புத் தான்.

நிம்மதியற்ற இந்த உலகிலே, நிம்மதிக்காக ஏங்கித் தவித்த வேளையிலே, மனித குலத்திற்கு அமைதியின் தூதனாக, இயேசு உதயமானார். அவர் வியத்தகு ஆலோசனையாளர், வல்லமையுள்ள இறைவன், வாக்குமாறாதவர், முடிவில்லாத்தந்தை, அனைத்திற்கும் மேலாக அவர் அமைதியின் அரசர். புதிய விடிவெள்ளி. வாழ்வழிக்க வந்த விடியல். வார்த்தையினால் மனுவுருவானவர்.

இயேசு மனித மாண்பை நிலைநாட்டவும், உண்மையை எடுத்துரைக்கவும், உள்ளங்களைப் புனிதப்படுத்தவும், தவறுகளைத் திருத்தவும், நேர்மையை நிலைநாட்டவும் இப்பாரினில் அவதரித்தார். இதற்காகவே அடிமையின் தன்மை பூண்டார். மனுக்குலத்தின் மீது அவர் கொண்டிருந்த தணியாத, அணையாத அன்பின் வெளிப்பாடு தான் அவரின் பிறப்பு.

(தொடர்ச்சி 16ம் பக்கம் பார்க்க )

## இயேசுவின் பிறப்பும் (4ம் பக்கத் தொடர்ச்சி)

யாகக் கொண்டு இடம்பெற்றுள்ளன என்பது கவனத்திற்கொள்ளப்பட வேண்டியது. சிறுவர்க்கும், பெரியோர்க்கும் இவை சிறந்த கற்பித்தல் ஊடகங்களாக விளங்கின. கல்வியறிவு இல்லாத மக்களுக்கு இம்முறை சிறந்த கற்பித்தல் ஊடகமாகும். புலுக்காட்சி வழியாகப் பெறும் அறிவு ஆழமாக உள்ளத்தில் பதியக் கூடியவை. மேலும், இக்காலத்தில் தமிழ் மொழியில் அச்சிடப்பட்ட நூல்களைப் பெறுவது இயலாத விடயமாயிருந்தது. அத்துடன் இவ்வாறான புலக்காட்சி அமைப்புக்களும் ஆற்றுகைகளும் மக்களுக்கு அறிவையும், உவகையையும் அளித்தன.

அருட்பணி. ஞா. பிலேந்திரன்
யாழ் ப்ல்கலைக்கழகம்.

## “இயேசு கிறிஸ்துவை அணிந்து கொள்வோம்” (உரோ.13:14)

“மனம் மாறுங்கள் ஏனெனில் விண்ணரசு நெருங்கிவிட்டது” (மத் 3:1-2) என்ற திருமுழுக்கு யோவானின் அறைகூவல் அன்றும் இன்றும் என்றும் கிறிஸ்தவர்களுக்கு மிகவும் பொருந்தக்கூடியதாகவே இருக்கின்றது. ஏனெனில் காலங்கள் கரைபுரண்டு ஓடின. நம் நாட்டு அரசியல், பொருளாதார, பண்பாட்டு, வாழ்க்கை நலன்கள் போன்ற அனைத்தும் மாறின. ஆனால் நமது மனங்களில் மாற்றம் ஏற்படவில்லை. ஆதலால தான் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு திருமுழுக்கு யோவான் கூறிய அறைகூவல் இன்றும கிறிஸ்தவர்களாகிய எமது செவிகளில் ஒலித்துக்கொண்டே இருக்கின்றது. ஆகவே கிறிஸ்தவர்களாகிய எமது மனங்களில் மாற்றம் உடனடியாக இடம் பெற்று இயேசு கிறிஸ்துவை அணிந்து கொள்ள வேண்டும். என்பதனையே இவ் வருட இயேசு பிறப்பு செய்தி நமக்கு உணர்த்தி நிற்கின்றது.

“ஏழையரின் உள்ளத்தோர் பேறு பெற்றோர் ஏனெனில் விண்ணரசு அவர்களுக்குரியது” (மத் 5:3) என்ற இறையரசின் சாசனமும் கிறிஸ்தவர்கள் இன்றைய சூழமைவில் ஏழ்மை, எளிமை முதலான கிறிஸ்தவ மதிப்பீடுகளை கடைப்பிடித்து வாழ்வதன் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கின்றது. வருடாவருடம் கிறிஸ்து பிறப்பு விழா நல்ல ஆடம்பரத்தோடு நடநதேறி முடிகின்றது. ஆனால் எந்தளவிற்கு கிறிஸ்தவ சமூகத்திற்கு அவ்விழா பயன் மிக்கதாக இருந்தது? என்ற வினாவினை நாம

(தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க)

## “சத்திரத்தில் அவர்களுக்கு இடம் கிடைக்கவில்லை” (லூக் 2:7)

எங்கள் கடவுள் வானத்தில் இருந்து கைநீட்டி ஆசி வழங்குபவர் மட்டுமல்ல. நானும் நீங்களும் நடந்து போகும் மண்ணின் புழுதியிலே தனது கால் புதைத்து எம்மோடு கூட நடக்கும் கடவுள்.

“மென்காற்றுவீசிய பொழுதிலே, தோட்டத்தில் ஆண்டவராகிய கடவுள் உலவிக கொண்டிருந்தார்” (தொ.நூ 3:8) அன்று ஆதிப்பெற்றோர் வாழ்ந்த தோட்டத்திலே நம் கடவுளும் உலவிக்கொண்டிருந்தார்.

விடுதலைப் பயணத்திலே பார்வோனின் அடிமைத்தனத்தில் இருந்து இஸ்ரயேலை வழிநடத்திய ஆண்டவர் பகலில் மேகத்தூணிலும், இரவில் ஒளிகாட்ட நெருப்புத்தூணிலும் இருந்தார். “பகலில் மேகத்தூணும், இரவில் நெருப்புத்தூணும அவர்களை விட்டு விலகவே இல்லை” (வி.ப 13:21-22)

பாபிலோனிய மன்னன் நெபுக்கத்னேசர் நிறுவிய பொற்சிலையை வணங்க மறுத்ததற்காக அனனியா, மிசாவேல், அசரியா என்ற மூன்று இளைஞர்கள் கொழுந்து விட்டெரியும் தீச்சூளையில் எறியப்பட்டார்கள். “ஆனால் ஆண்டவரின் தூதர் சூளைக்குள இறங்கிவந்து, அசரியாவோடும் அவர் தம் தோழர்களோடும் சேர்ந்து கொண்டார்” (தானியேல்(இ) 1:26) தீ நடுசேவ நீ நடந்

(தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க )

# இவர் தான் கிறிஸ்மஸ் தாத்தா



கிறிஸ்மஸ் தாத்தா இன்றைய கொண்டாட்ட விழாக்களில் ஒரு கோமாளியாகவோ. குழந்தைகளுக்கு சிரிப்பூட்டும் நபராகவோ சாக்லேட் வழங்குபவராகவோ தான் இருக்கிறார். அவருடைய வாழ்வு அப்படிப்பட்டதில்லை வாழ்வின் வெற்றிடங்களை மனித நேயம் கொண்டு நிரப்புவதே அவருடைய பணியாக இருந்திருக்கிறது. துருக்கி நாட்டில் மிரா நகரில் நான்காம் நூற்றாண்டில் கிறிஸ்தவ ஆயராக வாழ்ந்தவர் தான் புனித நிக்கலஸ். மனித நேயத்தின் சின்னமாக விளங்கிய நிக்கலஸ் தேவையானவர்களுக்கு உதவுவதையே தனது குறிக்கோளாகக கொண்டிருந்தார். சிறுவயதில் வறுமையில் வாடிய நிக்கலஸ் புதன்கிழமை மற்றும் வெள்ளிக்கிழமை மட்டும் உணவு உண்டு மற்ற நாட்களில் பட்டினியில் உழன்றிருக்கின்றார். வறுமையின் வரீயத்தையும் ஏழைகளின் துயரையும் நேரடியாக சந்தித்த அனுபவம் அவரை மனித நேயவாதியாக மாற்றியது. அவருடைய வாழ்க்கையில் குழந்தைகளை அபரிமிதமாக நேசித்தார். குழந்தைகள் இருக்கும் வீடுகளில் யாருக்கும் தெரியாமல் பரிசுப்பொருட்களை வைப்பதை மிகவும் ஆனந்தத்துடன் செய்து வந்தார். அவர் ஆயராக தெரிந்தெடுக்கப்பட்ட விதமே சுவாரஸ்யமானது. துருக்கியின் மிரா நகரில் ஆயராக இருந்தவர் இறந்து போக மற்ற ஆயர்கள் எல்லாம் ஒன்று கூடி புதிதாக யாரை அந்தப்பகுதியின் ஆயாராக நியமிப்பது, என்று ஆலோசித்தார்கள். அப்போது அங்கு கூடியிருந்த ஆயர்களில ஞானம் நிறைந்தவராக காணப்பட்ட ஒருவர், தான் இரவில் காட்சி ஒன்றைக் கண்டதாகவும். அதன் படி ஆலயத்தில் முதலில் நுழையும் நிக்கலஸ் என்னும் பெயருடைய நபரே ஆயராகத் தெரிநதெடுக்கபபட வேண்டும் என்று அந்தக் காட்சியில் தெரிந்ததாகவும். சொன்னார். அவருடைய வேண்டுதலை ஏற்றுக்கொண்டு செபித்தனர். மறுநாள் காலை முதன்முதலாக ஆலயத்தில் நுழையும் நிக்கலஸ் என்னும் நபருக்காக அனைத்து ஆயர்களும் காத்திருந்தார்கள். நிமிடங்கள் கரைந்தன மணிகள் கடந்தன ஒரு இளைஞன் ஆலயத்தில் நுழைந்தான். காத்திருந்த ஆயர்கள் அவனுடைய பெயரைக் கேட்க நிக்கலஸ் என்றான். ஆயர்கள் ஆனந்தித்தனர். அந்த இளைஞனையே கடவுள் சுட்டிக்காட்டிய புதிய ஆயராக ஏற்றுக்கொண்டனர்.

உதவி செய்வது கடவுளை தவிர யாருக்கும் தெரியக் கூடாது. ஏன்? வலது கைதரும் தானம் இடது கைக்குகூட தெரியக் கூடாது என்பது தான் விவிலியம் தரும் போதனை. அந்த போதனையின் படி வாழ்ந்த புனித நிக்கலஸ் ஏழைகளின் வீடுகளுக்குச் சென்று இரவு நேரஙகளில் அவர்களுக்கே தெரியாமல் அவர்களுக்குத் தேவையானவைகளை வைத்து விடுவார். அழுகையின் போர்வை போர்த்தி தூங்கும் அந்த ஏழைகள் குதூகலப் பகலைக் சந்திக்க அந்த மனிதர் செய்த செயலின் தொடர்ச்சி தான் கிறிஸ்மஸ் தாத்தாவாக இன்று வளர்ந்து நிற்கிறது. கிறிஸ்து பிறப்பு விழா இன்று ஒரு வர்த்தக பெருவிழாவாக மாறி இருக்கும் சூழலிலும் பரிசுகள் வழங்குவதையும் வாழ்த்துக்கள் வழங்குவதையும் தனனகத்தே கொண்டிருப்பதால் அதன் அர்ததம் தீர்ந்து போகாமல் இருக்கிறது. இயேசு பிறந்த போது மூன்று ஞானிகள் அவரைத் தேடிவந்து பரிசுகள் வழஙகியதையே இந்த பரிசு வழங்குதலின் மையமாக பார்க்கிறது. கிறிஸ்தவ மேலை நாடுகளில் கிறிஸ்மஸ் மரத்தைச் சுற்றியும் கிறிஸ்மஸ் கால் உறைகளுக்கு உள்ளேயும் பரிசுகளை மறைத்து வைத்து விடியற் காலையில் குழந்தையிடம் கிறிஸ்மஸ் தாத்தா இரவில் வந்து வைத்து விட்டு போனதாகச் சொல்லி குதூகலிக்கும் குழந்தைகளின் மகிழ்ச்சியின் ஒளியில் கிறிஸ்மஸ் கொண்டாடுகின்றார்கள். புனித் நிக்கலஸ்ப் பற்றி பல வியப்பூட்டும் கதைகள் உலாவுகின்றன. கி.பி. 311ல் மிரா நகரம் வறுமையில் தவித்தது. அப்போது அலெக் சாந்திரியாவிற்குச் சென்று கொண்டிருந்த உணவுக் கப்பல்கள் அங்குள்ள துறைமுகத்தை வந்தடைந்தன புனித நிக்கலஸ் சரக்குக் கப்பல் பணியாளரிடம் சென்று மக்களுக்காக உணவு கேட்டார். அவர்களோ சரியாக எடையிடப்பட்ட உணவுகள் மட்டுமே கைவசம் உள்ளன. இதிலிருந்து ஏதேனும் எடுத்தால் அலெக்சாந்திரியா மன்னனின் கோபத்துக்கு தாங்கள் ஆளாக நேரிடும் என பயந்தனர். நிக்கலஸ் அவர்களிடம் கடவுளின் பெயரால் சொல்கிறேன். யாருக்கும் எதுவும் குறைவுபடாது என்று சொல்லி தானிய மூட்டைகளை எல்லாம் இறக்கி நகரில் விநியோகித்தார். சரக்கு கப்பல் பயணிகள் மிகுந்த அச்சத்துடன் அசெக்சாந்திரியா பயணமானார்கள். அங்கு சென்று தானியக் கிடங்கை பார்த்தவரகள், அதிர்ந்தார்கள். காலியாக்கப்பட்ட தானியக் கிடங்கு நிரம்பி வழிந்து கொணடிருந்தது. புனித நிக்கலஸைப் பற்றிய செய்திகள் சுமார் 11நூற்றாண்டில் தான் ரஷ்ய நாட்டில் நுழைந்தது. அவரை மக்கள் உதவியாளன் என்றே அன்புடன் அழைப்பார்கள். 1087ல் புனித நிக்கோலாஸின் நினைவுச் சின்னங்கள் எல்லாம் துருக்கியிலிருந்து அகற்றப்பட்டது. அவை இத்தாலியிலுள்ள பேரி நகருக்கு கொண்டு செல்லப்படடன ஜரோப்பாவில் புனித நிக்கோலஸ் பெயர் நுழைவதற்க்கு அது காரணமாயிற்று துருக்கியிலிருந்து அழிந்து போகாமல் காப்பாறப்பட்ட அவருடைய பொருட்களைப் பாதுகாக்கும் விதமாக பேரிநகரில் ஒரு ஆலயம் கட்டப்பட்டது. குழந்தைகள் கடலில் பயணம் செய்வோர் மீனவர் போன்றோரின் பாது காவலராக இவர் கத்தோலிக்கத் திருச்சபையினரால் புகழப்படுகிறார்.

A.J. நிமல்றாஜ்
யாழ் பேராலயம்

# ஒரு பொதுநிலைத் திருப்பணியாளராக நீங்கள் தயாரா?

## - ஆய்வரங்கில் அழைப்பு -

புனித பத்திரிசியார் கல்லூரியில் 28.11.2010 ஞாயிற்றுக் கிழமையன்று 200க்கு மேற்பட்ட பொது நிலையினர்களை உள்வாங்கிய ஒரு பரந்துபட்ட ஆய்வரங்கு நடை பெற்றது. காலை 9.30 மணியளவில் யாழ் மறை மாவட்ட ஆயர் மேதகு தோமஸ் சவுந்தர நாயகம் அவர்கள் பிரதான மங்கள சுடரை ஏற்ற அவரை தொடர்ந்து பொது நிலையினரின் இயக்குனர் M.V.E இரவிச்சந்திரன அவர்களும் மேலும் சில பிரதிநிதிகளும் ஒளிச் சுடரேற்றி நிகழ்வை ஆரம்பித்தனர். யாழ் மறைமாவட்ட பொதுநிலையினர் கழகத் தலைவர் திரு. R.A அமலரட்ணம் அவர்களின் தலைமை உரையை தொடர்ந்து யாழ் மறைகோட்ட பொதுநிலையினர் இணைப்பாளர் அருட்பணி சகாயதாஸ் அவர்களின் ஆசியுரையிலே நாங்கள் கிறிஸ்தவ விழுமியங்களிற்கு ஏற்ப வாழும் போது ஓநாய்கள் மத்தியில் வாழ்கின்றோம் எனவே நாங்கள் எமது பணியை இறைவனுக்கு ஏற்ற வகையில் செய்ய வேண்டும் என்று கூறினார். தொடர்ந்து ஆயர் அவர்களின் ஆசியுரையில் பொது நிலையினர்கள் உற்சாகத்துடன் பணிகள் புரிவதனால் தான் திருச்சபை இன்று இவ்வாறு வளர்ச்சியடைந்துள்ளது என்று பாராட்டியதுடன், ஒற்றுமையினை இன்னும் வலுப்படுத்த வேண்டும் என்று கூறினார் பின்னா பொது நிலையினர்களால் நடாத்தப்பட்ட வினா விடைப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு ஆயர் சான்றிதழும் பணப் பரிசும் வழங்கி கௌரவித்தார்.

அதனை தொடர்ந்து "அமரர் சி .வின் சென்ற நினைவு அமர்வு" இடம் பெற்றது இதில் "தொடக்க திருச்சபையில் பொது நிலையினரின் திருப்பணிகள்" என்ற கருப் பொருளில் யாழ் பல்கழைக்கழக பேராசிரியரும் கிறிஸ்தவ இஸ்லாமியத் துறைத் தலைவருமான அருட்பணி. கலாநிதி ஞா.வி.பிலேந்திரன் அடிகள் கருத்துரை வழங்கினார்கள். இதனை தொடர்ந்து "இன்றைய சூழமைவில் பொது நிலையினரின் திருப்பணிகள்" எனும் தலைப்பில் இளையோர் அன்பிய ஆணைக் குழு இயக்குனர் M.V.E இரவிச்சிந்திரன் உரையாற்றினார். பொது நிலையினர் சார்பாக யாழ் / புனித பத்திரிசியார் கல்லூாரி ஆசிரியா திரு S.ஸ்ரனிஸ்லாஸ் அவர்களினால் உரை யாற்றப்பட்டது சமூகத்திலே பொதுநிலையினா பல்வேறு தடைகளையும் தாண்டி பணிபுரிய வேண்டும் என்று அவர் கூறினார்.



பின்னர் குருமுதல்வர் அவாகளினால் திருப்பலி ஒப்புக்கொடுக்கப் பட்டதுடன் இவ் ஆய்வரங்கின் இறுதியாகபல்வேறு மறைக்கோட்டங்களிலும் இருந்து வந்தவர்களை 10 குழுக்களாக பிரிந்து பின்வரும் வினாக்களை ஆய்வு செய்தனர். இன்றைய சமூக சூழ்நிலையில் பொது நிலையினரின் திருப்பணிகள் என்ன? அவற்றிற்கு என்ன தடையாக அமைந்துள்ளது? எவ்வாறு இத் தடையை எதிர்கொள்ளலாம்? இறுதி அமர்விற்கு தலைமைதாங்கிய விசுவமடு ம.வி ஆசிரியர் திரு மரியாம்பிள்ளை றோமியல் கூறுகையில் "வன்னியிலே பல துன்பங்கள மத்தியில் இன்று வாழ்ந்து கொண்டு இருக்கும் நாங்கள் உங்களிடம் பணமோ பொருளோ கேட்கவில்லை மாறாக எங்கள் மனக்குமுறல்கள் அவலங்கள் போன்றவற்றை எங்கள் மக்கள் உங்களுடன் பகிர்ந்து கொள்ள ஆவலாக உள்ளார்கள் நீங்கள் உங்களுடைய அன்பை எங்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள" என்றார். பின்னர் யாழ் மறைமாவட்ட பொதுநிலையினர் கழக செயலாளர் திரு பெ. பிரான்சீஸ் அவர் களினால் நன்றியுரை கூறப்பட்டதனைத தொடர்ந்து இவ் ஆய்வரங்கானது நிறைவுக்கு வந்தது.

S.நிறோஷன்

### "பொது நிலையினர் திருப்பணிகள்" ஆய்வரங்கில் பங்கு பற்றிய சிலரின் கருத்துக்கள்.

மரியான் சூசைமுத்து
கிளி / முல்லை மறைக்கோட்டம்

இவர் கூறுகையில் "பொது நிலையினர் திருப்பணிகள்" ஆய்வரங்கானது 6 மாதங்களுக்கொரு முறை நான்கு மறைகோட்டங்களிலும் சுழற்சி முறையில் நடைபெற வேண்டும் என்றும் இவ்வாறு நடாத்தப்படும் சந்தர்ப்பத்திலே எடுக்கப்படும் தீமானங்களை ஆராயவும் முடியும் மற்றும் நான்கு மறைக்கோட்டங்களும் தங்களிடையே நெருங்கிய தொடர்புகளை பேணிக்காத்துக் கொள்ள வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.கன்னியர்களும் பூரண ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும் என்று கூறினார்.

அ. ராஜேந்திரம்
கிளி/முல்லை மறைகோட்டம்
தர்மபுர பங்கு.

இவர் கூறுகையில் இவ் ஆய்வரங்கானது எங்களுக்குவிழிப்புணர்வை ஏற்படுத்துகின்றது. இங்கே எடுக்கப்படுகின்ற தீர்மானங்களை எல்லா மறைக்கோட்டங்களும் ஒன்றிணைந்து நிறைவேற்ற வேண்டும். கி/முல்லை மறைக்கோட்டத்தில் வாழ்கின்ற நாங்கள் பல இழப்புக்கள் மத்தியிலும் அவலஙகளை சுமந்த வண்ணம் இன்று வெறும் சடலங்கள் போன்று வாழ்கின்றோம்.

(தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க)

# பாலகன் யேசுவின் பிறப்பின் ....

(3ம் பக்கத் தொடர்ச்சி)

வைப் பெற்றெடுக்க அன்னை மரியாள் எவ்வளவு கஷ்டப்பட்டாள். ஆனால், அத்தனை கஷ்டங்களையும் நல்ல மனதுடன் ஏற்று குழந்தையை நல்லவிதமாக பெற்றெடுத்தாள். கருவை கலைக்க நினைக்கவில்லை, பெற்ற பின்னர் வீதியில் எறிந்து விடவும் நினைக்கவில்லை, அல்லது நாலு காசுக்கு ஆசைப்பட்டு விலை பேசவுமில்லை. ஆனால், இன்று அந்த தாய்மையின் புனிதம் எத்தனை பெண்களால் மாசுபடுத்தப்படுகின்றது. திருமணத்திற்கு முன்னரான தகாத உறவுகளால் கருவுற்று அவமானத்தை மறைக்க கருவழிப்பு செய்பவர்களும், ஏன், திருமணமான பின்பும் எமக்கு இரண்டு பிள்ளைகள் போதும் என்று உருவான கருவை அழிப்பவர்களும் நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணமாயிருக்கின்றனர். அன்று, புனித சூசையப்பர் மரியாளுடன் தான் கூடி வாழ முன்னரே அவள் கருவுற்றிருப்பதை அறிந்தும அவளை தன் மனைவியாக ஏற்றுக் கொண்டார். ஆனால் இன்று எமது கணவர்மார் சந்தேகம் என்ற போர்வையில் எத்தனை பெண்களின் வாழ்வை சாகடித்துக் கொண்டிருக்கின்றார்கள். ஆண்டவன் முன் இன்பத்திலும், துன்பத்திலும் இணைபிரியாதிருப்போம் என்று வாக்களித்தவர்கள் ஆண்டொன்று போகு முன்னே மனைவியை அடித்து விரட்டுகின்றனர். அன்று, மரியாளும் சூசையப்பரும் யேசுவுக்கு கற்றுக் கொடுத்ததெல்லாம் அன்பு மட்டுமே. ஆனால் நாம் இன்று எமது பிள்ளைகளுக்கு எதை சொல்லிக் கொடுக்கின்றோம்?. யார் பெரியவர் - யார் சிறியவர் என்று தெரியாது, யார் மேல் ஜாதி - யார் கீழ் ஜாதி, யார் நல்லவர் - யார் கெட்டவர் என்ற பிளவுகள் அவர்களுக்கு தெரியாது. கள்ளங்கபடமற்ற அந்த பிஞ்சு உள்ளங்களில் நஞ்சை விதைக்கின்றோம். அன்று, யேசு தனது பெறறோருக்கு கீழ்ப்படிவுள்ள பிள்ளையாக வாழ்ந்தார். ஆனால், இன்று நமது பிள்ளைகளில் பலர் பெற்றோரை ஒரு பொருட்டாகவே மதிப்பதில்லை. இன்று தமது முதுமையில் ஆதரவின்றி, அன்பின்றி அல்லலுறும் பெற்றோர்கள் எத்தனை பேரை நாம் காண்கின்றோம்? ஒரு தாய் தான் எத்தனை பிள்ளைகளைப் பெற்றாலும் எவ்வளவு கஷ்டங்கள் வந்தாலும் அவர்களை அல்லும் பகலும் கண்ணின் மணி போல் காத்து வளர்த்தெடுப்பாள். ஆனால், அத்தனை பிள்ளைகளும் சேர்ந்து அந்த தாயை பார்க்க முடியாமல் இருப்பது கொடுமையிலும் கொடுமை.

இவற்றையெல்லாம் மனதில் கொண்டு இம்முறை கிறிஸ்மஸ் விழாவை அர்த்தமுள்ளதாக்க, எமது உள்ளங்களில் யேசு பிறக்க அங்கே உண்மையான மன மாற்றத்தை ஏற்படுத்துவோம். அங்கே அன்பு, அமைதி என்ற கண்கவர் மின் விளக்குகளை ஒளிரச் செய்து, நீதி, நேர்மை என்ற சோடனைகளை போட்டு, பாசம், பரிவு, பொறுமை என்ற அணிகலன்களை அணிந்து, ஒற்றுமை, விட்டுக்கொடுப்புகளை புத்தாடைகளாக தரித்து, மன்னிப்பை அன்பளிப்புகளாக அளித்து, தேவாலயமெங்கும் சமத்துவம், சகோதரத்துவம் என்று புதிய வடிவங்களில் பாலன் கொட்டில்கள் அமைத்து, பகிர்தல் என்ற கிறிஸ்மஸ் மரங்களை நாட்டி பாலகன் யேசுவின் பிறப்பு விழாவின் பெரு மகிழ்ச்சியை எம் உள்ளம் எனும் கொட்டிலில் கொண்டாடுவோம்.



- ஆக்கம்: கரவை தர்ஷிக்கா-
கொழும்பு.

யாழ்ப்பாணம்.



## நினைவஞ்சலி
### 13ம் ஆண்டு

மலர்வு 1926 - 03 - 07



உதிர்வு 1997 - 12 - 31

**அமரர் பேனாட் சூசைப்பிள்ளை**

"ஆண்டவனில் உங்கள் ஆன்மா அமைதி பெற அனுதினமும் பிரார்த்திக்கின்றோம்".

நமலவாசா
சூராவத்தை. சுன்னாகம்.

Advt-98/10

## 06ம் ஆண்டு



**அமரர் சூசைப்பிள்ளை செல்வராஜா**

மலர்வு 1957-12-05 உதிர்வு 2004-06-16

இவர்கள் பிரிவால் வருந்தும்
அம்மா, மனைவி. பிள்ளைகள்,
சகோதரர்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## பொது நிலையினர் திருப்பணிகள்.... (14ம் பக்கத் தொடர்ச்சி)

எங்கள் மததியில் பொதுநிலையினர் இளையோர் கழகங்கள் போன்றவை எங்களை தரிசத்து எங்கள் துன்பங்கள் அவலச்சுமைகள் போன்றவற்றை பகிர்ந்து கொள்ள எம் இல்லங்களுக்கு வாருங்கள் இவ்வாறான செயற்பாடுகளுக்கு குருககளும், கன்னியர்களும் பூரண ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும் என்று கூறினார்.

S.நிரோஷன்

## சத்திரத்தில் அவர்களுக்கு...... ( 13ம் பக்கத் தொடர்ச்சி)

தாலும் நெருப்புக்குள் இறங்கி உன்னோடு நடக்கும் தேவன்.

அவ்வாறே புதிய ஏற்பாட்டில் நாளைக்கான நம்பிக்கைகள் யாவும் செத்துக் கிடக்க, வாழ்வின் அர்த்தம் புரியாது, செய்வதறியாது எம்மாவு வழியே நடந்த சீடரோடு பயணத்தோழனாக கால்வலிக்க நடந்து போனார் இயேசு.

இன்று வீடிழந்து, சொத்திழந்து, சுகமிழந்து, பாசம் பகிர்ந்து நாம் சிரித்து மகிழ்ந்த உறவுகள் இழந்து, அனாதைகளாய், அகதிகளாய், ஏதிலிகளாய் வாழும் எமக்கு கிறிஸ்மஸ் செய்தி என்ன? எங்கள கண்ணீர்களின் ஈரம் காயவில்லை. எங்கள் இரத்தங்கள் இன்னும் கசிந்து கொண்டிருக்கின்றன. கொட்டும் மழையில், உண்ண உணவுமின்றி ஒரு மூலையில் குந்திக்கொண்டிருக்கும் எமக்கு கிறிஸ்மஸ் செய்தி என்ன?

"விடுதியில் அவர்களுக்கு இடம் கிடைக்கவில்லை." பரம ஏழையாக, எம்மைப் போல பரதேசியாக, சாணம் மணக்கும் மாட்டுத் தொழுவத்தில் பிறந்த இயேசுவே எமது கிறிஸமஸ் செய்தி. எம் கால்கள் புதையும் சேற்றில எம்மோடு கூட அவர் இருக்கிறார். "ஏழைகளே நீங்கள் பொறுபெற்றோர்" என்கிறார். ஏனெனில் அந்த மெசியா ஏழைகளுக்காய் பிறந்த ஏழை.

**சீ. அஜந்தன்**
**புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி, யாழ்ப்பாணம்.**

## 2ம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் வின்சன் இஸ்ராயேல்
**மோகன்றாஜ்**

மலர்வு 1964-08-25 உதிர்வு 2008-12-21

"ஆண்டுகள் இரண்டு ஆயினும்
ஆறாது உன் பிரிவு எம் மனதில்
ஆண்டவன் பாதத்தில்
அமைதிகொள் எம் சகோதரனே"

அம்மா தங்கமணி, அன்ரன் டேவிட்,
மலர் மரியதாசன், றஞ்சினி யேசுதாசன்
(கனடா) டெய்சி தவராஜா, யசிந்தா.

36/3, கோவில் வீதி
யாழ்ப்பாணம்.

Advt-99/10

## இயேசு கிறிஸ்துவை அணிந்து... (13ம் பக்கத் தொடர்ச்சி)

ஒவ்வொருவரும் எம்மில் ஒரு முறையேனும் கேட்பதற்கு அழைக்கப்பட்டுள்ளோம். இந்த வருடமானது எமது கிறிஸ்து பிறப்பு பெருவிழாவினை பல்லாயிரம் உயிர்கள், பல கோடிக்கணக்கான உடைமைகள் போன்றவற்றை கடந்த கால யுத்தத்தின போது இழந்த சூழலில் நாம் கொண்டாடுகின்ற நிலைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளோம். எமது உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அன்பு தம்பி, தங்கையர் போன்ற பலரை இழந்த ஏக்க பெருமூச்சோடும், கண்ணீர் கலந்த சிறிய சந்தோஷத்தோடு நாம் இவ வருட கிறிஸ்து பிறப்பு விழாவிற்கு ஆயத்தமாகவுள்ளோம்

ஆகவே, நாம் ஆடம்பரத்தைத் தவிர்த்து எளிமை நிறைந்த ஆன்மீகத்தை ஆடையாக அணிவோம். ஏழ்மை, எளிமையை விரும்புவோம் எல்லோரோடும் ஒருவராக எம்மை அடையாளப்படுத்திக் கொள்ள முயல்வோம். தம்மையே கல்வாரியில் தாழ்த்தி பலியாக்கிய கிறிஸ்துவையே எமது வாழ்விற்கு முன்மாதிரியாகக கொண்டு வாழ்வோம். கிறிஸ்து பிறப்பின் இக்காலங்களில் "இருளின் ஆட்சிக்குரிய செயல்களைக் களைந்து விட்டு ஒளியின் ஆட்சிக்குரிய படைக்கலங்களை அணிந்து கொள்வோமாக! பகலில் நடப்பது போல மதிப்போடு நடந்து கொள்வோமாக! களியாட்டம், குடிவெறி, கூடாஒழுக்கம், காம வெறி, சண்டை சச்சரவு ஆகியவற்றைத் தவிர்ப்போமாக! தீய இச்சைகளைத் தூண்டும் ஊனியல்பின் நாட்டங்களுக்கு இடம் கொடுக்க வேண்டாம். இயேசுகிறிஸ துவை அணிந்து கொள்ளுங்கள்" (உரோ 13:12-14) என்ற பவுல் அப்போஸ்தலரின் ஒழுக்கவியல் இறையியல் சிந்தனை அனைத்து கிறிஸ்தவர்களதும் உள்ளங்களிலும் எதிரொலிக்க வேண்டும். எமது வாழ்வு பலசமயம் வாழும் சூழலிற்கு விருந்தளிப்பதாக அமைய வேண்டும். மனம் மாற்றம் பெற்று அனைத்தும் செயல் வடிவம் பெற வேண்டும்.

எனவே கிறிஸ்தவர்களாகிய நாம் பிறக்க இருக்கும் இயேசு கிறிஸ்துவை புத்தாடையாக அணிந்து கொள்ள எம்மைத் தயார்படுத்துவோமாக. பிறரால் போற்றப்படுகின்ற நற்பண்புகளால் எமது கிறிஸ்து பிறப்பு விழாவினை அலங்கரிப்போம். எமது செயல்கள் ஏதாவதொரு விதத்தில் பிறருக்கு நன்மையை அளிப்பதாக அமையட்டும். நாம் அனைவரும் ஒரே இறைவனின் பிள்ளைகள் என்ற மன நிலையோடு ஒற்றுமையாக வாழ்வோம். பிறக்கின்ற கிறிஸ்து பிறப்பு பெருவிழா, மற்றும் வரப போகின்ற 2011ம் புத்தாண்டு எமது கறைபட்ட வாழ்விற்கு கலங்க மற்ற நிம்மதியும், முடிவில்லாத அமைதி வாழ்வினையும் தருகின்ற பெறுமதியுள்ள நன்நாட்களாக மலர்வதாக. அத்துடன் அனைவருக்கும் எனது இனிய நத்தார், புத்தாண்டு நல்வாழ்த்துக்களை அகமகிழ்வுடன் தெரிவித்துக கொள்கின்றேன்.

**சங்கையூர் பெனடிற்**
**செயலாளர்**
**பொதுநிலையினர், இளையோர், அன்பியம் ஆணைக்குழு, யாழ் மறைமாவட்டம்**
**ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.**

## விண்ணக வாழ்வில் 28ம் ஆண்டு நிறைவு



**அமரர்**
**மரியான் சூசைப்பிள்ளை**
(ஆசிரியர், சமாதான நீதவான்)

மண்ணுலகில் 14-04-1926 விண்ணுலகில் 03-01-1983

என் வாழ் எல்லாம் உம் அருள்
நலமும் பேரன்பும் என்னைப் புடை சூழ்ந்து
வரும் நானும் ஆண்டவரின் இல்லத்தில்
நெடுநாள் வாழ்ந்திருப்பேன்.

பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளை,
உறவினர்கள்.

இளவாலை மேற்கு,
இளவாலை.

Advt-100/10

## விண்ணக வாழ்வின் 5வது பிறந்த நாள்

**திருமதி யோசேப்பு**
**- றோசம்மா -**



மண்ணில் 07-03-1927 விண்ணில் 01-01-2006

"ஆண்டவர் தாமே என் உரிமைச் சொத்து"
மண்ணுலக வாழ்வை நிறைவு செய்து 01-01-2006 அன்று விண்ணுலகு சென்ற எமது தாயாரின் ஐந்தாவது பிறந்த நாளிள் அன்புடன் நினைவு கூரும்

17/5 அன்னாள் வீதி
பாண்டியன்தாழ்வு.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

Advt-101/10

## 5ம் வருட நினைவு தினம்



**யோசேப்பு றோசம்மா**

பிறப்பு 07-03-1927 இறப்பு 01-01-2006

"சீவியத்திலும் உம்மை நேசித்தோம்
மரணத்திலும் மறவோம்"

உங்கள் நினைவுகளுடன்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

இல. 91, 3ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

Advt-103/10

## பாரினில் உதித்த .... (13ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த அழியாத, ஆழமான அன்பை வழங்க வந்த நிகழ்வே இயேசு பிறப்பு விழா. இது சமத்துவத்தின் விழா. பகிரும் பாசறையின் விழா. உள்ளத்தை இல்லாத ஏழை எளியவர்களோடு, அயலவர்களோடு பகிரும் விழா. உடைந்து போன உறவுகளை ஒட்டவைக்கும் விழா. உள்ளத்திலும், இல்லத்திலும குதூகலத்தையும் மகிழ்ச்சியையும உருவாக்கும் விழா. இவையனைத்திலும் நிறைவு காண்பதற்கே இயேசு மனிதனானார்.

பாலகன் இயேசுவின் பிறப்பு விழாவானது நம்மையும் புதிய உருவெடுத்து, புது மனிதனாக வாழ அழைப்பு விடுக்கின்றது. இயேசு நமது மனங்களில் உருவெடுக்க வேண்டும். இறை மனித உருவில் பிறப்பது நம்மையும் நல்ல மனிதனாக மாற்ற வேண்டும் என்ற நோக்கத்தை ஆழமாகவும் அழுத்தமாகவும் கூறுகின்றது. நம்மிடம் உள்ளவற்றை ஏழை எளியவர்களுடன் பகிர்ந்து கொள்ள அழைக்கின்றது. நம்முடைய செயற்பாடுகளில் மனிதத் தன்மையோடு நடந்து கொள்ள அழைக்கின்றது. இரக்க நெஞ்சம், அன்பு நெஞ்சம் கொண்டவர்களாக, கருணை உள்ளம்கொண்ட மனிதர்களாக, பிறரின் உணர்வுகளை புரிந்து செயற்படும் மக்களாக நம்மை அழைக்கின்றது. பாலகன் இயேசுவின் அழைப்பிற்கும் குரலுக்கும் நாம் செவி மடுப்போமா?

**மொ. தார்சீசியஸ்**
**கொழும்பு.**

## அன்புள்ள வாசகர்களுக்கு!

கிறிஸ்மஸ் 2010ற்கான உங்களது பாதுகாவலன் சிறப்பு ஆக்கங்கள் எமக்குக் கிடைக்கப் பெற்றதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். சில ஆக்கங்கள் இடவசயின்மை காரணமாக இம் முறை பிரசுரிக்க முடியாதுள்ளமையிட்டு வருந்துகினறோம். அவை அடுத்த இதழில் பிரசுரிக்கப்படும் என்பதனையும் அறியத்தருகின்றோம்.

ஆசிரியர்

## சந்தாதாரர்களுக்கு ஓர் அறிவித்தல்

2011ம் ஆண்டுக்கான சந்தாவைச் செலுத்தி உங்கள் பாதுகாவலன் வரவை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். சந்தா செலுத்தாதவர்களுக்கு பாதுகாவலன் அனுப்பப்படமாட்டாது என்பதை வருத்தத்துடன் அறியத்தருகின்றோம்.

1 வருடச் சந்தா - உள்ளூர் 750/= (தபாற் செலவு உட்பட)
1 வருடச் சந்தா - வெளியூர் 2500/= (தபாற் செலவு உட்பட)

- பாதுகாவலன் விநியோகப்பகுதி -

**31-08-2010 இயேசு மரியின் அன்பின் சகோதரிகள் சபை ஸ்தாபகரின் 250 வது பிறந்ததினம் கார்த்திகை 04 சபை ஸ்தாபகதினம் என்ற தலைப்பில் வந்த ஆக்கமானது அடுத்த இதழில் பிரசுரிக்கப்படும் என்பதனை அறியத்தருகின்றோம்.**

## இலங்கை ஆயர்மன்றத்தின் கிறிஸ்மஸ் செய்தி


நாம் மீண்டும் ஒருநத்தார் திருநாளை கொண்டாடுகிறோம்.

இத்திருநாளானது கடவுள் எம்மீது கொண்டுள்ள அளவற்ற அன்பை எடுத்துக்கூறுகிறது. அத்துடன் கடவுள் எம்மீது விடுத்துள்ள சமாதான அழைப்பையும் எடுத்துக் காட்டுகிறது.


எமது கடந்தகாலத்தின் வன்செயல்கள் வாழ்க்கை போன்றல்லாது, இம்முறை ஒரு சமாதான சூழலில் இத்திருநாளை கொண்டாடுகின்றோம். ஆயினும் வன்செயல்களின் இருண்டகாலம் இன்றும் நீங்கியதாக இல்லை. ஆகவே நாம் இத்திருநாளில் நிரந்தரமான சமாதானம் அனைத்துமக் களாலும் சாதிசமய வேறுபாடின்றி ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு தீர்வுக்காக இறைவனை வேண்டுவோம். ஆரசியல் தலைவர்கள் இப்படியான ஒரு நிரந்தர தீர்வைஎமக்கு அளித்தருள வேண்டுவோம். நாம் அனைவரும் சமாதானத்தின் தூதுவர்களாக செயற்படுவோம். சமாதானம் என்பது யுத்தம் அல்லது வன்செயல் இல்லாத வாழ்க்கை என்பது மட்டுமல்ல.

இயேசு ஏழைபோன்று ஒருமாட்டுத் தொழுவத்திலே தான் பிறந்தார். 2010ம் ஆண்டு நத்தார் தினத்தை கொண்டாடும் தருணத்தில் உலகெங்கும் ஏழை, பணக்காரபேதம்விரிவடைந்துகொண்டே செல்கிறது. பணக்காரர் மேலும் பணக்காரர்களாகவும் ஏழைகள் இன்னும் ஏழைகளாகவும் மாறிக்கொண்டு இருக்கின்றனர். இத்திருநாளிலே எமக்குள்ளவற்றை தேவை உள்ளவர்களோடு பகிர்ந்துவாழும் ஒருமனம் கொண்டவர்களாகவும் இருத்தல் வேண்டும். இத்திருநாளில் நாம் கடவுளின் அன்பை கஸ்ரப்படுகிறவர்கள் மத்தியிலும் ஏழை எளியவர்கள் மத்தியிலும் பகிர்ந்து வாழ்வோமாக. நாம் அமைதியின் அரசனிடம் எமக்கொரு நிரந்தர சமாதான தீர்வுகிடைக்க பிரார்த்திப்போமாக.

## யாழ் மறைமாவட்டத்தின் புத்தாண்டுத் திட்டம்



- அன்பியங்களைத் தொடர்ந்து பங்குகளில் வளர்த்தல்.
- அருளாளர் யோசவ்வாசின் வழியில் வார்த்தையாலும் சாட்சிய வாழ்வாலும் மறைபரப்பு பணியின் தூதுவராக உழைத்தல்.
- இளைஞர் உருவாக்கத்தில் பங்குகள் தோறும் இளைஞர் ஒன்றியங்களை உருவாக்கிச் சமூகவிழுமியங்கள் மூலம் அவர்களின் வாழ்வை வளம்பெற ஊக்குவித்தல்.
- பொதுநிலையினர் மத்தியில் தலைமைத்துவமும் ஆன்மீகமும் நிறைந்த நற்கருணைப் பணியாளர்களை ஊக்குவித்தல்.
- இளையோர், சிறுவர்கள் கல்வியிலும் மனிதப் பண்பிலும் ஆன்மீகத்திலும் உருவாக்கம் பெற, பெற்றோர், ஆசிரியர்கள், குருக்கள், துறவிகள் ஒன்றிணைந்து செயற்படல்.




### முன்னூறாவது விண்ணகப் பிறப்பு விழா
### 1711 – 2011




இறைவா!
எமது தாழ்மையான இவ் வேண்டுதலுக்கு கனிவாய் செவிசாய்த்து உம் புனிதர்களின் கூட்டத்தில் அவரையும் சேர்த்து மகிமைப்படுத்த தாய்த்திருச்சபையை தூண்டிவிட உம்மை மன்றாடுகின்றோம்.

1ஆம் பக்கத் தொடர்ச்சி........

நத்தார் திருவிழா எமது சூழலைச் சிந்திக்க வைத்து, அன்பு, பகிர்தல், இரக்கம் போன்ற விழுமியங்களை உறுதியுடன் வாழ அழைக்கிறது. நத்தார் பெருவிழா - குடும்ப விழா - குழந்தைகளின் விழா - நல்மனம் கொண்ட அனைவரின் விழா.

எனவே ஆண்டவர் இயேசுவின் ஆசிகளை குருக்கள், துறவிகள், காவலன், பணியாளர்கள், வாசகர்கள், இறைமக்கள் அனைவருக்கும் வழங்கி, என் இனிய நத்தார் புத்தாண்டு வாழ்த்துக்களைப் பகிர்ந்து கொள்கிறேன்.







பாதுகாவலன் வாசகப் பெருமக்களே, எழுத்தாளர்களே, சந்தாதாரர்களே,
அபிமானிகளே, அன்பு நெஞ்சங்களே!
உங்கள் அனைவருக்கும் எம் உளம் பூரித்த நத்தார் புத்தாண்டு வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

– புனித வளனார் கத்தோலிக்க அச்சக முகாமையாளர், பாதுகாவலன் ஆசிரியர், அச்சக ஊழியர்கள் –